# வாழ்வாங்கு வாழ 5 (உ)

நண்பர் தமிழ்வள்ளல் சந்திரசேகரை எப்போது சந்தித்தாலும் குறள் பற்றி பேசாமல் இருக்கமாட்டார். சில தினங்களுக்கு முன் அவரை சந்தித்தபோது, அவர் சொன்ன குறள் அமுதம் இங்கு தலையங்கமாகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ அய்ந்து 5 (உ) சொன்னார்.

## உடல்

நமது உடலை செம்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். உடலை ஓம்புவது பற்றி சித்தர்களும் சொல்லி உள்ளார்கள். இதற்கு உணவில் கவனம் தேவை. எப்போதும் பசித்துத்தான் புசிக்க வேண்டும். நன்றாக மென்று சாப்பிட வேண்டும். ‘நொறுங்கத் தின்றால் நூறு வயது’ என்று கிராமத்தில் பழமொழி சொல்வார்கள். அளவோடு உண்ண வேண்டியதும் அவசியமாகும். எளிதில் ஜீரணிக்காத உணவுகளை சாப்பிடக்கூடாது. தனக்கு ஒவ்வாத உணவுகளையும் உண்ணக்கூடாது. எளிய உடற்பயிற்சியும் அவசியமானது. இதற்கு காலை, மாலை நடைபயிற்சி போதுமானது. உழைப்பு எவ்வளவு அவசியமோ அதேபோல் ஓய்வும் அவசியம். தினமும் 6 மணி நேரத்திற்கு குறையாமல் உறங்க வேண்டும்.

அதேசமயம் அதிக நேரம் உறங்குவதை தவிர்க்க வேண்டும். எச்செயலை செய்வதற்கும் உடலே காரணமாவதால் அதனை எப்போதும் பாதுகாக்க வேண்டும். நலமான உடலில்தான் வளமான உள்ளமும் இருக்கும்.

## உள்ளம்

மனத்துக்கண் மாசு இலலாமல் இருத்தலே எல்லா அறங்களிலும் தலையாயது. எண் ணியதை எண்ணி யாங்கு பெற திண்ணிய உள்ளம் தேவை. மாந்தர்தம் உள்ளத்திற்கு ஏற்றாற்போலத்தான் அவர்களுக்கு உயர்வு கிடைக்கும். மனம்போல் வாழ்வு என்று பழமொழி சொல்வர்.

மனமது செம்மையானால் மந்திரம் சொல்ல வேண்டியது இல்லை என்பர். மனதை செம்மையாக்க நல்ல நூல்களை வாசித்தல் வேண்டும். எனைத்தானும் நல்லதை கேட்க வேண்டும், நல்லவர்களுடன் எப்போதும் உறவு வைத்துக்கொள்ள வேண்டும். நல்ல செயல்களை செய்வதில் விருப்பம் கொள்ள வேண்டும்.

## உறவு

எல்லாவிதமான உறவுகளும் இங்கு பேசப்படுகிறது. பெற்றோர்களை மதிக்க வேண்டும். பிள்ளைகளைப் பேண வேண்டும். அவரவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும். செல்வர்க்கு அழகு செலுங்கிளை தாங்குதல் என்றாலும் அனைத்து உறவுகளிடமும் அன்பும் பாசமும் காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

## உற்றார்


ஆசிரியர்கள், நண்பர்கள், அக்கம்பக்கத்தில் உள்ள அனைவரும் உற்றார் எனப்படுவர். உடுக்கை இழந்தவன் கைபோல் அவர்களுக்கு எப்போதும் உதவ வேண்டும். எல்லோரிடமும் இணைந்து வாழவேண்டும். நாம் வாழ்க்கையில் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் நமக்காக மற்றவர்கள் உழைத்து கொடுத்தது. எனவே இந்த சமுதாயத்திற்கு எப்போதும் கடமைப்பட்டு உள்ளோம். நமது தேசம் உலகம் தழுவியதாக இருக்க வேண்டும். அங்கு சாதி, மதம், மொழி, இனம், நாடு முதலிய வேறுபாடுகள் கூடாது, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பாட்டை கடைபிடிக்க வேண்டும்.

## உலகம்

இங்கு பேசப்படும் உலகம் அவரவர்களின் தனித்துவத்தைப்பற்றி சொல்லப்படுவதாகும். ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒன்றில் மிகுந்த ஈடுபாடு இருக்கலாம். அது விளையாட்டு உலகமாக இருக்கலாம். நாட்டிய உலகமாக இருக்கலாம். இசை உலகமாக இருக்கலாம். உங்களுக்கு எந்த துறையில் விருப்பமோ அந்தத் துறையில்தான் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதில் சிறந்த மனிதராக உருவாக வேண்டும். மற்ற மனிதர்களின் உலகங்களோடு நீங்கள் இணைந்து செயல்பட வேண்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ இந்த 5 (உ)க்களையும் நாமும் கடைபிடிக்கலாமே! ●





# பாரத ரத்னா

# டாக்டர் ராதாகிருஷ்ணன்



# சேலம் கே.சி. மணிவண்ணன்

தத்துவ மேதை என்று புகழப்படும் டாக்டர் ராதாகிருஷ்ணன், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்களில் ஒருவர். கல்லூரிப் பேராசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி உலகத்துக்கு உபதேசம் செய்யும் ஆசானாக உயர்ந்து, பாரத நாட்டின் ராஷ்டிரபதியாகப் பொறுப்பேற்ற அந்த ஆசிரியர் ஒரு தமிழர். சென்னைவாசி. நமக்கு வழிகாட்டும் உத்தமராக விளங்கினார் என்பது நமக்கு பெருமைக்குரிய செய்தியாகும். அந்தப் பேராசிரியர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஆவார். பாரதத்தின் பண்பாட்டையும் அதன் ஆன்மீக அடிப்படையையும் தெளிவாகப் புரிந்துகொண்டு அதை உலகத்துக்கும் வழங்கிய தத்துவஞானி டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன். அவர் காட்சிக்கு எளியவர். மிக எளிமையான பழக்கவழக்கங்களை உடையவர். ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலின், அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர், அரபுக் குடியரசுத் தலைவர், இன்னும் பல நாட்டுத் தலைவர்கள், மகாத்மா காந்தி, மகாகவி ரவீந்திரநாத் தாகூர், ஜவஹர்லால் நேரு, மதன்மோகன் மாளவியா, பாலகங்காதர திலகர் முதலிய அறிஞர்களும், அரசியல்வாதிகளும், தியாகச் செம்மல்களும் அந்தப் பேராசிரியரை மனமாரப் புகழ்ந்தனர்.

## பிறப்பும் இளமைப் பருவமும்

இவரது முன்னோர்கள் சர்வபள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அதன் அருகிலுள்ள திருத்தணியில் அவர்கள் குடியேறினார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணனின் தந்தையார் வீராசாமி, ஒரு புரோகிதர். வடமொழியில் ஆழ்ந்த புலமை உடையவர். தேர்ந்த சமய அறிவும் தெய்வ பக்தியும் உடையவர். அவருக்கு ஐந்து பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். இரண்டாவது பிள்ளையாக 05-09-1888இல் ராதாகிருஷ்ணன் பிறந்தார். அவர்கள் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ராதாகிருஷ்ணன் பிறவியிலேயே மெலிந்த உருவம் படைத்தவர். உடல்வாகு அப்படி. ஆனால் கண்களில் மட்டும் அப்படியொரு ஒளி. அறிவுப்பசி கொண்ட விழிகள். கூர்மையான அறிவும்கூட, அந்தப் பார்வையில் பளிச்சிட்டது. மற்ற குழந்தைகளைப்போல ராதாகிருஷ்ணன் வளர்ந்தாலும், சாதாரண சராசரிக் குழந்தைகளைப்போல சகஜமாக எல்லோருடனும் கலகலப்பாகப் பழகவில்லை. சங்கோச சுபாவம் உடையவர். உடன் பயிலும் மாணவர்களோடும் அதிகமாய்ப் பழகமாட்டார். எப்போதும் நூல்களை ஆழ்ந்து படிப்பார். படித்தவற்றைப் பற்றிச் சிந்திப்பார். ராதாகிருஷ்ணன் படித்தது கிறிஸ்துவ மிஷனரிகள் நடத்திய கல்விச் சாலைகளில். ஆகவே அந்தக் கல்வி நிறுவனங்களின் கட்டுப்பாடும் கண்ணியம் மிக்க பயிற்சிகளும் மேற்கத்தியக் கல்வியிலும் அவர் மேம்பட்டு விளங்க வகை செய்தன. ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் தந்தையிடம் இந்து தர்மத்தையும் இந்தியப் பண்பாட்டையும் வடமொழி மூலம் பாரதத்தின் பண்டைய இலக்கியங்களின் மேம்பாட்டையும் கற்றறிந்தார். ராதாகிருஷ்ணன் கிறிஸ்துவக் கல்வி சாலைகளில் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்ததால் அவர்களின் வேதமான ''பைபிளை'' மிகுந்த ஆர்வத்துடன் பயின்றார். உலகப் பொதுமொழியான ஆங்கிலத்திலும் சிறப்பான பயிற்சியும், தேர்ச்சியும் பெற முடிந்தது. திருத்தணியில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்ட ராதாகிருஷ்ணன் கல்லூரியில் சேருவதற்கு வேலூருக்குக் கிளம்பினார்.

## கல்லூரிப் படிப்பு

ராதாகிருஷ்ணன் கல்லூரிப் படிப்பு பெறுவதற்காக வேலூருக்குச் சென்றார். ஊரீஸ் கல்லூரியில் (Voorhees College) சேர்ந்தார். இங்கு இவர் எஃப்.ஏ. (F.A.) படித்தார். இதுவும் கிறிஸ்துவ மிஷனரிகளின் கல்விச்சாலைதான். சிறுவயது முதலே ராதாகிருஷ்ணன் கிறிஸ்துவ மதப்பிரசாரம் செய்கிறவர்களோடு நெருங்கிப் பழகினார். அவர்களுடைய மத பக்தியும், தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் இவர் மனதில் நன்கு பதிந்துவிட்டன. நாமும் அவர்களைப் போல மதப்பற்று உடையவராக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது.

வேலூர் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பயின்ற பின்னர் சென்னை கிறிஸ்டியன் காலேஜில் சேர்ந்தார். அங்கே அவர் தத்துவப் படிப்பை (Philosophy) எடுத்துக்கொண்டார். அவருடைய குடும்பம் பெரியது. போதுமான பணவசதியில்லை. உதவித்தொகை (ஸ்காலர்ஷிப்) பெற்று தனது கல்விப் பயணத்தை மேற்கொண்டார். எனினும் அவருடைய படிப்புக்கு இவை இடையூறாக



**இ**ந்திய தத்துவங்களை உலகத்தோர் புரிந்துகொள்ளும்படி எடுத்துச் சொன்னதிலே டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுடைய பங்கு குறிப்பிடத்தக்கதாகும். எளியமுறையில் சிக்கலான தத்துவங்களை விளக்கிப் பேசவும், எழுதவும் ஆற்றல் பெற்றிருந்த இவர், தமது வாழ்க்கையைத் தொடங்கியது ஆசிரியராகத்தான். எல்லா சமயத் தத்துவங்களையும் கற்றுத் தேர்ந்தவர். நமது வேதாந்தத் தத்துவங்களே அனைத்திலும் சிறந்தவை என்பதையுணர்ந்தார். அதை அனைவரும் உணர வேண்டுமென்பதற்காகப் பல நூல்களை எழுதினார். பல நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவுகளாற்றிப் பரப்பினார். இந்து சமயத் தத்துவங்களில் இவருக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியது, கிறிஸ்தவப் பாதிரியார்கள் இந்து மதத்தைப் பற்றி இழித்துப் பேசியதும், சுவாமி விவேகானந்தரின் எழுத்துக்களும்தான். கிறிஸ்தவக் கல்லூரியில் படிக்கும்போதே இந்த மாற்றம் அவரிடம் ஏற்பட்டது.

*இருக்கவில்லை. அக்கல்லூரியில் கிறிஸ்துவ மத போதகர்களுடன் முன்னைவிட நெருங்கிப் பழகினார். பைபிளின் "புதிய ஏற்பாட்டை" மிகவும் சீரிய முறையில் கற்றுத்தேர்ந்தார். ஆனாலும் தனது ஆராய்ச்சிப் படிப்பிற்கு இந்து மதத்தை தேர்ந்தெடுத்தார். இந்து மதத்தின் உயர்வையும் சிறப்பையும் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவ அறிஞர்களிடம் எடுத்துரைக்கத் தவறுவதில்லை.*

*சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளில் இந்து சமயத்தின் பெருமையை முழங்கிவந்தார். இந்து சமயம் மிகவும் உயர்ந்தது என்ற உண்மை உலகம் எங்கும் பரவியது. விவேகானந்தரின் சொற்பொழிவுகள் ராதாகிருஷ்ணனை வேதாந்தம் பயிலத் தூண்டின. அத்வைதத் தத்துவத்தை அவர் மிக நுட்பமாய்க் கற்றுத் தேர்ந்தார். எம்.ஏ. வகுப்பிலும் அவர் தத்துவப் படிப்பையே மேற்கொண்டார். அத்தேர்வுக்காக வேதாந்தத்தின் நீதிமுறை (Ethics of Vedanta) என்ற கட்டுரையை எழுதிச் சமர்ப்பித்தார். அக்கட்டுரையைப் படித்த பேராசிரியர் ஹாக் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். சிக்கலான தர்க்க முறைகளை மிகத் தெளிவாக விளக்கும் ஆற்றலையும் இவர் ஆங்கில மொழியைக் கையாளும் அருமையையும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். அப்போது இவருக்கு வயது இருபதுதான். இதற்கு விவேகானந்தரின் சொற்பொழிவுகளும் காரணம் என்று கூறலாம்.*

*ஒரு வழியாகப் படிப்பு முடிந்ததும் 1908ஆம் ஆண்டில் ராதாகிருஷ்ணன், சென்னை மாநிலக் கல்லூரியில் தர்க்கஇயல் (Logic) துணைப்பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஆசிரியராக வாழ்க்கையைக் கழிக்க விரும்பிய இவர் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் 1910ஆம் ஆண்டு எல்.டி. பட்டமும் பெற்றார். எல்.டி. பட்டம் பெற்றதும், இவர் மாநிலக் கல்லூரியில் (Presidency College) தர்க்கஇயல் பேராசிரியராகப் பணியாற்றலானார். ஆசிரியர் பணியை மேற்கொண்டவுடன் இவர் தலைப்பாகையும் நீண்டகோட்டும் அணியத் தொடங்கினார். அதே உடையில் அவர் இறுதிவரை காட்சியளித்தார்.*

*ராதாகிருஷ்ணனுக்குச் சிறுவயதிலேயே ''சிவகாமியம்மாள்'' என்னும் பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டது. சிறுவயதில் மணமானால்தான் கணவனும் மனைவியும் நெருங்கிப் பழகி, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒற்றுமையாக வாழமுடியும். இக்காரணத்தால்தான் இந்துத் தம்பதிகள் அறநெறி தவறாமல் வாழ முடிகிறது. இந்து சமயத்தின் இதுபோன்ற நம்பிக்கைகளை இவர் இறுதிவரை போற்றினார்.*

## ஆசிரியர் பணி

*சர்வபள்ளி கிராமத்தைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்ற வாலிபர் எம்.ஏ. பட்டதாரியானார். ஆசிரியர்களால் மிகவும் விரும்பப்பட்ட, பாராட்டப்பட்ட மாணவர் ராதாகிருஷ்ணன். வேலை செய்து சம்பாதிப்பதில் அவ்வளவாக ஈடுபாடு இல்லை. அவர் உள்ளத்தைக் கவர்ந்த தொழில் ஆசிரியர்தான். ராதாகிருஷ்ணன் கல்லூரி மாணவராக இருந்தபோதே, கற்பிக்கும் கலையில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். தமக்குக் கீழ்வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, அதனால் சிறு வருவாய்க்கு வழிசெய்து கொண்டு வந்தார். இந்த ''டியூசன்'' முறை அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தது. தான் கற்றவற்றைப் பிறருக்குக் கற்பிக்கும்போது தன் அறிவும் அதனால் விரிந்து விசாலமடைகிறது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தார். இவர் சிறந்த முறையில் ஆசிரியப் பணியை நடத்தி வந்தார். இவரது புகழ் உலகெங்கிலும் பரவியது. மாணவர்களின் உள்ளத்தில் பதியுமாறு அவர் சொற்பொழிவாற்றுவார். பரீட்சைக்குத் தகுதியானவர்களாகும் வகையில் ஆசிரியராகத் தகுதிபெறும் வழிமுறைப் பாடங்களை விளக்கி பதிமூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். பேராசிரியர்களே வியந்து பாராட்டும் முறையில் அந்தச் சொற்பொழிவுகள் அமைந்தன. ஆங்கில மொழியை இனிமையாகக் கையாளுவார். வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனையும் அவர் நன்கு அறிவார். மற்ற பேராசிரியர்களிடம் நன்கு பழகினார். பாடம் போதிப்பதில் வல்லவர்.*

*1908ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் இவர் பேராசிரியராக பணியாற்றினார். 1917ஆம் ஆண்டு வரை ஒன்பது ஆண்டுகள் அங்கு பணிபுரிந்தார். இந்த ஒன்பது ஆண்டுகளும் இடைவிடாமல் இந்தியாவின் தத்துவஇயல், இந்திய மதங்கள் பற்றியும் கலாச்சாரத்தைப் பற்றியும் ஆழ்ந்து கற்றார். அச்சமயத்தில் இவர் வெளிநாடுகளிலுள்ள பத்திரிகைகளுக்குத் தத்துவம் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் எழுதலானார். அவருடைய அறிவுக்கூர்மை வெளிநாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தது.*

## மைசூர் பல்கலைக்கழகம்

*அதன்பின்னர் இவர் 1918ஆம் ஆண்டு மைசூர் மகாராஜா பல்கலைக்கழகத்தின் தத்துவஇயல் பேரா*

சிரியராகப் பொறுப்பேற்றார். கல்லூரியில் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் படிப்பதும் சிந்தனை செய்வதுமாக அவருடைய நேரம் கழிந்தது. அங்கு அவர் மூன்று ஆண்டுகள்தான் பணியாற்றினார். ஆந்திர மாகாணம் ராஜமகேந்திரத்திலுள்ள கலைக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே அவரைத் தம்முடைய மாநிலத்துக்குக் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற எண்ணம் மைசூர் திவானின் உள்ளத்தில் தோன்றியது. திவானாக இருந்தவர் மேதை சர்.எம்.விசுவேசுவரய்யா அவர்கள். மைசூர் மாநிலத்தில் மகத்தான பல சாதனைகளைப் புரிந்த வல்லுநர். அவர் தம் மாணவர்களுக்கு ராதாகிருஷ்ணனின் புலமை பயன்படவேண்டும் என்று விரும்பினார். இளைஞரான ராதாகிருஷ்ணனை மைசூர் மகாராஜா கல்லூரியின் தத்துவஇயல் பேராசிரியராக்க முனைந்து முடித்தார். *1918*ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் மைசூர் பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியராக பொறுப்பேற்றார்.

மகாராஜா கல்லூரியில் வெளி மாநிலங்களில் உள்ள அறிவாளிகள் பலர் பேராசிரியர்களாகப் பணிபுரிவதற்காக வரவழைக்கப்பட்டிருந்தார்கள். பேராசிரியர்களான டாக்டர் ராதாகுமுத முகர்ஜி, கே.டி.ஷா, வாடியா போன்றோர் இக்கல்லூரியில் பணியாற்றியவர்களே. இவர்களுடன் இப்போது இளைஞர் ராதாகிருஷ்ணனும் சேர்ந்து கொண்டார். பிற்காலத்தில் சுதந்திர இந்தியாவில் நாட்டையாளும் பணியில் மேற்கூறிய மூவரும் பங்குபெற்று பாராளுமன்ற ராஜ்ய சபையில் அங்கத்தினர்களாக விளங்கினார்கள். ராதாகிருஷ்ணன் அவர்களோ பாரத நாட்டின் மிகப்பெரும் பதவியான ராஷ்டிரபதியாகவே விளங்கினார். அங்கு அவர் மூன்று ஆண்டுகள்தான் பணியாற்றினார். அதன்பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் தத்துவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கு அவருடைய புகழ் பரவியது. *(1927–1930)* மூன்று ஆண்டுகள் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் முதுகலைக் குழுத் தலைவராக இருந்தார். *1936*–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பல்கலைக்கழகங்களின் மாநாடு இங்கிலாந்தில் நடைபெற்றது. அதன் பின்னர் அமெரிக்காவில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் அனைத்துலகத் தத்துவ மாநாடு கூடியது. கல்கத்தா பல்கலைக்கழகத்தின் சார்பில் இவ்விரண்டிலும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு அரிய சொற்பொழிவாற்றினார். இவரது சொற்பொழிவுகளைக் கேட்டு அனைவரும் வியந்தனர்.

## போற்றுதலுக்குரிய பேராசிரியர் டாக்டர் ராதாகிருஷ்ணன்

போற்றுதலுக்கு உரிய பேராசிரியராக விளங்கிய ராதாகிருஷ்ணன் உலகப் புகழ் பெற்ற மேதையாகவும் விளங்கினார். இந்தப் புகழ் மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய இவருக்குப் பெருமதிப்பைக் கொடுத்தது. இதனால் கர்வம் கொள்ளவில்லை டாக்டர் ராதாகிருஷ்ணன். அடக்கமே உருவான அவர் மாணவர்களின் பக்திக்குப் பாத்திரமான ஆசிரியராக விளங்கினார். எப்போதும் வீணாகப் பொழுதைக் கழிக்கும் பழக்கமில்லாத அவர் ‘தனிமையிலே இன்பம் காணும் குணம் கொண்டவர்’. மாணவர்களோடு செலவிட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் ஏதாவது படித்துக் கொண்டே இருப்பார். அவரை வெறும் கையுடன் யாரும் எங்கும் கண்டதே இல்லை. ஏதாவது புத்தகத்தில் மூழ்கி இருக்கும் நிலையிலேயேதான் அவரை எப்போதும் காணலாம்.

ராதாகிருஷ்ணன் பழகுவதற்கு இனியவர். எவர் மனதையும் புண்படுத்தாத இயல்பினர். அவரது பேச்சுகளில் உயர்ந்த நகைச்சுவை கலந்திருக்கும். மாணவர்களின் அன்பு, மரியாதை, பக்தி இம்மூன்றையும் பெறும் ஆசிரியர்கள் வெகுவாகக் குறைவு. இந்தத் தகுதிக்கு ஏற்றவராக விளங்கினார் டாக்டர் ராதாகிருஷ்ணன். மைசூர் மாநிலத்திற்கு வெளியிலிருந்து வரும் மாணவர்கள் டாக்டர் ராதாகிருஷ்ணன் தம் வகுப்பில் நிகழ்த்தும் விரிவுரைகளைக் கேட்பதற்காக என்றே மகாராஜா கல்லூரியைத் தேடிவருவார்கள். அப்படிப் புகழ் பெற்ற பேராசிரியராக விளங்கினார்.

மேலைநாட்டுத் தீர்க்கதரிசிகள், தத்துவஞானிகள், சிந்தனையாளர்கள் இவர்களின் கருத்துக்களோடு பாரத நாட்டின் வழிவந்த பெரியோர்களின் தத்துவங்களையும் கருத்துக்களையும் கலந்து குழைத்து அவர்தம் மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்துவார். அப்படியொரு அபாரமான கற்பிக்கும் திறனைப் பெற்றிருந்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

மூன்றாண்டு காலமே *1921* வரை மைசூர் சர்வ கலாசாலையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் பணியாற்றினார். ராஜமகேந்திரபுரத்திலிருந்த ராதாகிருஷ்ணனை சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா எப்படித் தம் மாகாணத்துக்கு வரவழைத்துக் கொண்டாரோ, அதேபோல வங்காளிகளின் அறிவு மலர்ச்சிக்கு இந்த அறிஞரைத் தாம் கவர்ந்து செல்லத் திட்டமிட்டார் ஆசுதோஷ் முகர்ஜி. வங்காள அரசியல் விற்பன்னரான அவரது திட்டம் நிறைவேறியது. கல்கத்தா பல்கலைக்கழகத்தை ஒரு மாபெரும் கலைக்கூடமாக, கல்விக்கூடத்தின் கலங்கரை விளக்கமாக்க அரும்பாடுபட்டார் முகர்ஜி. வங்காளத்தைத் துண்டாடத் திட்டமிட்ட வைசிராய் கர்ஸன் பிரபுவின் கொட்டத்தை அடக்கி வெற்றிகண்ட வித்தகர் இந்த ஆசுதோஷ் முகர்ஜி. பாரத நாட்டின் எந்த மூலையில், எந்த அறிவாளி இருந்தாலும் அவரைத் தம் வங்காளத்தின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கப் பணியாற்ற அழைத்து வந்துவிடுவார். அவர் கண்டுபிடித்தவர்கள் எல்லோரும் பிற்காலத்திலும் தம் துறைகளில் புகழ் பெற்றார்கள்.

ஆசுதோஷ் முகர்ஜி கல்கத்தா பல்கலைக் கழகத்தின் முதுகலைக் குழுவின் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்தார். அவரது தலைமையின்கீழ் ராதாகிருஷ்ணன் தனது தத்துவப் பேராசிரியர் பணியைத் திறம்படச் செய்து வந்தார். ஆசுதோஷ் முகர்ஜியின் மறைவிற்குப் பிறகு, *1927* முதல் *1930*ஆம் ஆண்டு வரையிலான முதுகலைத் துறைத் தலைவர் பதவி ராதாகிருஷ்ணனைத் தேடிவந்தது. அவர் அப்பதவியையும் சிறப்பாகக் கையாண்டார்.

*1931*ஆம் ஆண்டுவரை கல்கத்தா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பேராசிரியராக திறம்படப் பணியாற்றிய ராதாகிருஷ்ணனுக்கு, அண்டை மாகாணமான ஆந்திர மாகாணத்திலிருந்து மிகப் பெரிய பதவி ஒன்று தேடிவந்தது. ராதாகிருஷ்ணன் தற்காலிகமாக கல்கத்தா பல்கலைக்கழகத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். இருப்பினும் *1941*ஆம் ஆண்டுவரை அவர் கல்கத்தா பல்கலைக்

கழகத்திற்கு கௌரவப் பேராசிரியராக வந்து கல்வி போதித்து வந்தார்.

## ரஷ்ய தூதரகத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன்

டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அதாவது, 1928ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேருவைச் சந்தித்தார். ஏற்கனவே ராதாகிருஷ்ணனைப் பற்றி நேரு அறிந்து வைத்திருந்தார். 1947ஆம் ஆண்டு இந்திய நாடு ஆங்கிலேய அரசிடமிருந்து விடுதலை பெற்றது. நேரு பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். நேரு இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்ற பின், இந்தியாவிலுள்ள அறிஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களை உயர்ந்த பதவியில் அமரச் செய்தார். டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு தக்க பதவியை அளிக்கக் காத்திருந்தார். அவ்வாறு ராதாகிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்ட பதவி ''ரஷ்ய இந்திய தூதரக அதிகாரி (Ambassador of India in U.S.S.R.)'' பதவியாகும். அவர் ரஷ்ய இந்திய தூதரக அதிகாரியாக பதவியேற்ற ஆண்டு 1950 ஆகும். இந்தியா சுதந்திரம் பெற்ற வேளையில் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் அதிக நட்புறவு இருக்கவில்லை. காரணம் ரஷ்யா பொதுவுடைமை நாடு. அமெரிக்கா முதலாளித்துவ நாடு. இந்தியாவோ நடுநிலைமையை ஏற்றுக்கொண்ட நாடு. இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையை ரஷ்யா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் ஜவஹர் லால்நேரு அவர்கள் ராதாகிருஷ்ணன் மீது கொண்ட நம்பிக்கையால் அவரை ரஷ்யாவுக்கு அனுப்பினார். நேருவின் நம்பிக்கையை சிறிதும் பொய்யாக்காமல், தனது பணியைச் சிறப்பாகச் செய்துகாட்டினார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் ரஷ்யாவுக்குச் சென்ற போதும் அதே மதிப்பும் மரியாதையும் பெற்றார். ரஷ்யாவுக்குச் சென்ற சில நாட்களிலேயே அவர் ரஷ்ய மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். ராதாகிருஷ்ணன் ரஷ்ய இந்திய தூதராகப் பணியாற்றிய வேளையிலும் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியே வந்தார். இந்த அனுமதி எவருக்கும் வழங்கப்படக் கூடாது. ஆனால் ராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரை இந்த நிபந்தனைக்கு நேரு ஒப்புக்கொண்டார். ரஷ்யாவில் அமைக்கப்பட்ட இந்திய தூதரகம் புதிதாக நிறுவப்பட்டது. அதன் நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்களைச் செய்தார். ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் ஒரு பாலமாகச் செயல்பட்டார். குளிர் மிகுந்த ரஷ்யாவிலும் அவர் தனது உணவு, உடை உள்ளிட்ட பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளவில்லை. இந்தியாவில் அணிந்தது போலவே எளிய உடை, தலைப்பாகை இவற்றோடு காணப்பட்டார். ரஷ்யா ஒரு கடவுள் மறுப்புக் கொள்கையுடைய நாடாக இருப்பினும் ராதாகிருஷ்ணனைப் பொறுத்த அளவில் அங்கும் அவர் பகவத்கீதையைப் படித்துக் கொண்டிருப்பார். இந்திய ஆன்மிக நூற்கள் பலவற்றிற்கு விளக்கம் எழுதிக் கொண்டிருந்தார்.

## குடியரசுத் துணைத் தலைவர்

சுதந்திர இந்தியா 1950ஆம் ஆண்டு குடியரசாக மாறியது. இந்திய நாட்டின் முதல் பொதுத் தேர்தல் 1952ஆம் ஆண்டு நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக டாக்டர் ராஜேந்திரபிரசாத்தைத் தேர்ந் தெடுத்தனர். அவ்வேளையில் குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு அவ ருக்கு மிகப் பொருந்தும் என்று கருதிய நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணனை இந்தியா அழைத்தார். 1952ஆம் ஆண்டு ரஷ்யாவிலிருந்து இந்தியா திரும்பிய ராதாகிருஷ்ணன், இந்தியக் குடியரசுத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். குடியரசுத் துணைத் தலைவரே ''ராஜ்யசபை'' என் னும் மாநிலங்களவைத் தலைவராகவும் செயல் படுவார் என்பது ஒழுங்கு விதியாகும். அதன்படி, ராதா கிருஷ்ணன் ராஜ்யசபைத் தலைவராகவும் சிறப்பாகச் செயல்படத் தொடங்கினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் ராஜ்யசபைத் தலைவ ராகப் பொறுப்பேற்றிருந்த வேளையில் சட்டமேதை அம்பேத்கர் போன்ற பல அறிஞர்கள் ராஜ்யசபையில் இடம் பெற்றிருந்தனர். ஆனால் அவ்வறிஞர் கூட்டத் தினர் அனைவரும் ராதாகிருஷ்ணனின் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டனர். ராதாகிருஷ்ணன் ஒரு திறமையான பேராசிரியராகத் திகழ்ந்தவர். ராஜ்ய சபையிலும் அவர் ஒரு பேராசிரியர் போலவே நடந்துகொண்டார். சபை விவாதத்தின்போது அனைத்து உறுப்பினர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கான நேரத்தை அளித்தார். அவர் அரசியல் வாழ்விற்கு வந்தபின்பும் கல்வி நிறுவனங்களுடனான தனது தொடர்பை விட்டுவிட விரும்பவில்லை. அதன்படியே குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்த ராதாகிருஷ்ணனுக்கு, டில்லி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பும் அளிக்கப்பட்டது. அப்பணி யையும் அவர் திறம்படவே ஆற்றி வந்தார்.

## குடியரசுத் தலைவர்

இந்தியத் திருநாடு குடியரசாக மாறிய பின், அதன் முதல் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் ஆவார். சுமார் பத்து ஆண்டுகாலம் சுதந்திர இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்த அவர், முதுமையாலும் நோயுற்றதாலும் 1961ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசியல் வாழ்விலிருந்து விலகிக் கொண்டார். 1962ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நடைபெற்றது. அதுநாள் வரை குடியரசுத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் ராஜேந்திரபிரசாத், தமது பொறுப்பை ராதாகிருஷ்ணனிடம் வழங்கும்போது, ''சிறந்த அறிவாற்றலும், மேதைமையும் நிறைந்த ராதாகிருஷ்ணன் அவர்களிடம் இப்பொறுப்பை அளிப்பதில் நான் ஒப்பற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்'' என்று கூறினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன், 1962ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் நாள் குடியரசுத் தலைவராகப் பதவி யேற்றுக் கொண்டார். மிகவும் சிறப்பாக நடைபெற்ற அப்பதவியேற்பு விழாவில், முப்பத்தியொரு துப்பாக்கிக் குண்டுகள் முழங்க டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, வறுமையான

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்



மனித சமுதாயங்கள் நம்பிக்கையால் வாழ்கின்றன; நம்பிக்கைகள் தோற்றுப்போகும்போது, சமுதாயங்கள் அழிந்து போகின்றன. நம்முடைய சமுதாயம் நலிவு நீங்கி நலம்பெற வேண்டுமானால், அது நம்பிக்கையை மீண்டும் பெற வேண்டும். நமது சமுதாயம் காப்பாற்ற முடியாத அளவுக்கு நலிவடைந்துவிடவில்லை. ஒருவரையொருவர் விஞ்சி உயரவேண்டும் என்ற ஆசைகளாலும், தோல்விகளாலும் சமுதாயத்தின் நம்பிக்கைகள் பிளவுபட்டுள்ளன; அதன் விருப்பங்கள் முரண்பட்டுள்ளன. நீக்கிச் சரிசெய்யக்கூடிய இத்தகு தவறுகளைப் போக்கிவிட்டோமெனில் மனித சமுதாயத்தை வளமாக்கலாம் என்ற நம்பிக்கைத் தோன்றுகிறது.

சூழ்நிலையில் வளர்ந்த போதும் தன் அறிவாலும் அயராத உழைப்பாலும், ஆற்றலாலும் பேராசிரியராக வாழ்க்கையைத் துவக்கி, ரஷ்ய தூதராக வளர்ந்து, குடியரசுத் துணைத் தலைவராக உயர்ந்து, இந்திய நாட்டின் முதல் குடிமகனான உன்னத நிலையை அடைந்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பும் அவரது எளிமையான வாழ்க்கைமுறை மாறவேயில்லை. அவர் எப்போதும் போலவே வாழ்ந்துவந்தார். இந்தியா போன்ற ஜனநாயக அமைப்புள்ள நாட்டில் குடியரசுத் தலைவருக்கு அதிக அதிகாரம் அமைவதில்லை. பிரதமருக்கே அதிகாரம் அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும். இருப்பினும் ராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரை, அவர் பிரதமர் நேருவுக்கும் ஆலோசனைகள் கூறும் அளவிற்கு அதிகாரம் படைத்திருந்தார் என்றே கூறவேண்டும். நாட்டில் பிரச்சினைகள் தோன்றியபோதும், அரசியல் சிக்கல்கள் தோன்றியபோதும் நேரு அவர்கள் பேராசிரியரும் தத்துவமேதையுமான ராதாகிருஷ்ணனின் ஆலோசனைகளைக் கேட்டு செயல்பட்டார் என்பதும் உண்மையாகும்.

குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் 1963ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, ருமேனியா, எதியோப்பியா, செக்கோஸ்லோவாகியா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ராதாகிருஷ்ணனின் புகழையும் பெருமையையும் அறிந்து வைத்திருந்த ஒவ்வொரு நாட்டினரும் அவரை சிறந்த முறையில் வரவேற்று உபசரித்தனர். அவர், தான் சென்ற நாடுகளில் எல்லாம் இந்திய நாட்டின் அரசியல் மற்றும் ஆன்மிகக் கொள்கைகள், தத்துவம் ஆகியவை பற்றி பல சொற்பொழிவுகளை ஆற்றினார். டாக்டர் ராதாகிருஷ்ணன், தான் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்த ஐந்து ஆண்டு காலமும் பல அரும்பணிகளை ஆற்றி அப்பதவிக்கு பெருமை சேர்த்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் 1967ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

### டாக்டர் ராதாகிருஷ்ணன் பெற்ற பட்டங்கள் & விருதுகள்

உலகின் அனைத்து நாடுகளிலுள்ள புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் அனைத்துமே டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு ''டாக்டர் பட்டம்'' வழங்கியுள்ளன. இந்திய நாட்டில் மிக அதிக டாக்டர் பட்டம் பெற்றுள்ள ஒரே மனிதர் டாக்டர் ராதாகிருஷ்ணன் என்றால் மிகையல்ல. அவர் 17 டாக்டர் பட்டங்கள் பெற்றுள்ளார். டாக்டர் ராதாகிருஷ்ணன், தன் அறிவுக்கும் வித்தகத்திற்கும் பெற்ற பட்டங்களும், விருதுகளும் கௌரவப் பதவிகளும் எண்ணற்றவை.

1936ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து அவருக்கு 1939ஆம் ஆண்டு ''பிரிட்டிஷ் அகாடமி''யின் கௌரவ உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு அறிஞர்களின் முயற்சியால் உருவான யுனெஸ்கோவில் செயற்குழு உறுப்பினராக செயல்படத் தொடங்கினார் அவர். 1946ஆம் ஆண்டிலிருந்து, 1948ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பிலிருந்த அவர், 1948 மற்றும் 1949ஆம் ஆண்டுகளில் யுனெஸ்கோவின் தலைமைப் பதவியையும் பெற்றார்.

ஜெர்மனி நாட்டின் புகழ்பெற்ற கவிஞர் ''கோதே'' (Goethe) ஆவார். அவரது பெயரில் வழங்கப்படும் ''கோதேபிளாக்கோட்'' விருது 1950ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னாளில் ஜெர்மன் புத்தக வியாபாரிகளின் அமைதிப் பரிசை 1961ஆம் ஆண்டு பெற்றார். 1952 முதல் 1954ஆம் ஆண்டுவரை அவர், ''ஆல்சோல்ஸ் கல்லூரி'' மற்றும் ''ஆக்ஸ்போர்டு கல்லூரியின்'' கௌரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1957ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் அவர்கள் ''குட்வில் மிஷன்'' என்னும் அமைப்பின் பொறுப்பை ஏற்று இந்தியா, சீனா, மங்கோலியா நாடுகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார். மங்கோலிய நாடு அவருக்கு ''மாஸ்டர் ஆஃப் விஸ்டம்'' (Master of Wisdom) விருது வழங்கி கௌரவித்தது.

1964ஆம் ஆண்டு போப் பால் அவர்கள், ராதாகிருஷ்ணனைக் கௌரவித்து விருது வழங்கினார். இந்து மதத்திற்கு ராதாகிருஷ்ணன் செய்த சேவையைப் பாராட்டி ''டெம்பிள்டன் ப்ரைஸ்'' (Templeton Prize) அவருக்கு வழங்கப்பட்டது. ''ராயர் ஏஷியாட்டிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால்'' அமைப்பின் கௌரவ உறுப்பினர் பொறுப்பு ராதாகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது. இங்கிலாந்து அரசி எலிசபெத், ராதாகிருஷ்ணனை ''ஆர்டர் ஆஃப் மெரிட்'' (Order of Merit) அமைப்பில் கௌரவ உறுப்பினராக்கி கௌரவித்தார். ராதாகிருஷ்ணனின் அறிவையும், வித்தகத்தையும் உணர்ந்த இந்திய நாடு மட்டுமின்றி, உலகின் அனைத்து நாடுகளிலுமுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் அனைத்துமே ராதாகிருஷ்ணனுக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்துள்ளன.

இந்தியாவின் தலைசிறந்த ''பாரத ரத்னா'' விருது 1954ஆம் ஆண்டு டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு

இந்தியத் தத்துவக் கோட்பாடுகள் பல சிறந்தன. அவற்றுள் ஒரு சில, மெதுவாகப் புரிந்துகொள்ளும் இயல்புடையவர்களுக்காக எழுதப்பட்டுள்ளன; இன்னும் சில உடனடியாகப் புரிந்துகொள்ளும் தீர்க்க அறிவுடையவர்களுக்காக எழுதப்பட்டுள்ளன. வேறு சில, இரண்டிற்கும் இடைப்பட்ட மத்திய அறிவுடையவர்களுக்காக எழுதப்பட்டுள்ளன. இவையனைத்தும் ஒரு கல்லினின்றும் சிதறிய சிறுசிறு துண்டுகளே; ஒரு முழுமையைச் சார்ந்த பல்வேறு கூறுகளே. உலகின் எந்தவொரு அமைப்பும் பல்வேறு பிரிவுகளால் அமைந்த அளவைகளையும், இயல்புகளையும், உள்நோக்கையும், அறிவியலையும், மெய்ப்பொருளையும், சமயத்தையும் உடையனவாகவே விளங்குகின்றன. இது உலகத்துப் பொருட்களின் இயல்பாகும். இந்தியாவில் உருவான எல்லாத் தத்துவ அமைப்புகளும் தத்தமக்கேயுரிய அறிவுக்கோட்பாடுகளை உலகிற்கு நல்கியுள்ளன. இயற்கையிலும், மனித மனத்திலும், அறத்திலும், சமயத்திலும் உள்ள உட்பொருளை வெளிக்கொண்டு வந்து விளக்கியுரைத்துள்ளன.



வழங்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது, ராஜ்ய சபை செயலகம் ராதாகிருஷ்ணன் அவர்களை நினைவுகூரும் வகையில் நினைவு மலர் ஒன்றை வெளியிட்டது.

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் இறுதி நாட்கள்

எளிய குடும்பத்தில் பிறந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு பேராசிரியராய் வாழ்வைத் தொடங்கி, இந்தியாவின் முதல் குடிமகன் என்னும் உயர்ந்த இடத்தை அடைந்தவர். அவர் எந்தப் பதவியையும் தேடிச் சென்றதில்லை. அவரது அறிவாற்றலால் எல்லா பதவிகளும் பட்டங்களும் அவரைத் தேடிவந்தன. அவர் இந்திய நாட்டிலேயே கல்வி பயின்றவர் என்றாலும், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட உலகின் தலைசிறந்த நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மாணவர்களுக்கு கல்வி போதித்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்தாலும், இந்திய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் ஒருபோதும் கைவிடவில்லை. அவர் இந்திய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தலைப்பாகை, கோட், வேட்டி இவற்றையே அணிந்து வெளிப்படுத்தினார்.

காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது ஊதியம் ஏதும் பெறாமல் அவர் பணியாற்றிய செய்தியை நாம் அறிந்தோம். இதுபோல ராதாகிருஷ்ணன் அவர்கள் பொதுமக்களுக்குச் செய்த உதவிகள் எண்ணற்றவை ஆகும். பொதுவாக உலகின் அறிஞர்கள் உயிரோடு இருக்கும் வரை அவர்களது பெருமையையோ, அறிவையோ உலக மக்கள் அறிந்து கொள்வதில்லை. அவ்வறிஞர்கள் மறைந்த பின்பே அவரது பெருமை உலகிற்குத் தெரியவரும். ராதாகிருஷ்ணனைப் பொறுத்தவரை இக்கருத்தில் அவர் ஒரு விதிவிலக்கு என்றே கூறவேண்டும். அவர் உயிரோடு வாழ்ந்த காலத்திலும், மறைந்த பிறகும் அவரது அறிவையும், பெருமையினையும் மக்கள் அறிந்துகொண்டனர்; கொள்கின்றனர்.

1962ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்திருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பதவிக்காலம் நிறைவு பெற்றது. பல்வேறு அரசியல் காரணங்களால் அவர் தொடர்ந்து மீண்டும் குடியரசுத் தலைவராகப் போட்டியிட இயலவில்லை. பணியிலிருந்து ஓய்வுபெற்ற அவர் டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தார். அதன்பிறகு அவரது இறுதிக்காலம் வரை சென்னையிலேயே இருந்தார். அவர் பெரும்பான்மையான நேரம் புத்தகங்கள் படிப்பதிலும், எழுதுவதிலுமே கழித்தார். புத்தகங்களின் மீது அதிக விருப்பம் கொண்ட ராதாகிருஷ்ணன் அவர்களின் அறையில் எப்போதும் புத்தகங்களும், பத்திரிகைகளும் நிரம்பியிருந்தன.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஐந்து பெண் மக்களும், ''கோபால்'' என்ற ஒரு புதல்வரும் உண்டு. கோபால் அவர்கள் தனது தந்தையின் கட்டுரைகள் பலவற்றைத் தொகுத்து நூலாக்கி வெளியிட்டுள்ளார். தந்தையின் வாழ்க்கை வரலாறையும் அவர் எழுதியுள்ளார். இவை மட்டுமின்றி, ராதாகிருஷ்ணன் அவர்களின் உதவியாளரான ''பி.டி.ராஜு'' என்பவர் அதுவரை எழுத்து வடிவில் வெளிவராத ராதாகிருஷ்ணனின் எழுத்துக்களை நூலாக்கினார். அவை தொடர்ந்து வெளிவரலாயின. 1975ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள ''டெம்பிள்டன் ஃபவுண்டேஷன்'' என்னும் அமைப்பு, ராதாகிருஷ்ணனின் தத்துவ சேவைக்காக அவருக்கு விருது வழங்கி எட்டு லட்ச ரூபாயும் அன்பளிப்பாகக் கொடுத்தது. ராதாகிருஷ்ணன் ஒருபோதும் ஓய்வெடுக்க விரும்பாதவர். 'எனக்கு களைப்பே தோன்றாதபோது, நான் ஏன் ஓய்வெடுக்க வேண்டும்' என்று அவர் கேள்வி கேட்பார். தனது வாழ்நாள் முழுவதும் கற்பதிலும், கல்வி போதிப்பதிலும், எழுதுவதிலும் கழித்துவந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள் மரணமடைந்தார்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் மாண வர்களின் கையில் உள்ளது என்று கூறிவந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அம்மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் எவ்வாறு திகழ வேண்டும் என்று கூறிச் சென்றுள்ளார். தானும் அவ்வாறு வாழ்ந்து வந்தார் அவர். அதனால்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாளை நாம் ''ஆசிரியர் தினம்'' ஆக கொண்டாடி மகிழ்கிறோம். டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டாலும், அவரது அறிவு செறிந்த கருத்துக்கள், தத்துவ போதனைகள் மற்றும் விளக்கங்களால் இந்திய மக்களின் இதயத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

வாழ்க டாக்டர் ராதாகிருஷ்ணன்! வளர்க அவரது புகழ்!! ●

# சுந்தரம் வாக்குறுதி

வாகன பைனான்ஸ்



வீட்டுக் கடன்கள்



முதலீடுகள்



இன்ஷ்யூரன்ஸ்



கடந்த அறுபது ஆண்டுகளாக, நம்பிக்கை மற்றும் மதிநுட்பத்தின் வலுவான அடிப்படையில் அமைந்த வாடிக்கையாளர் சேவையில் சுந்தரம் பைனான்ஸ் நிறுவனம் சிறந்து விளங்குகிறது.

பல ஆண்டுகளாக, சுந்தரம் பைனான்ஸ் மீது நம்பிக்கை வைத்து முதலீடு செய்துள்ள பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்களின் செல்வத்தை நாங்கள் அயராது பாதுகாத்து வருகிறோம். கடும்முயற்சியுடன் சேமிக்கப்பட்ட அவர்களது பணத்திற்கு, நாங்கள் நிலையான மற்றும் கவர்ச்சிகரமான வருமானத்தை வழங்கி வருகிறோம்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நிறுவனத்தின்மீது வைத்துள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையின் காரணமாக, மூன்று தலைமுறை முதலீட்டாளர்கள் மனநிம்மதியுடன் இருக்கவும் வழிசெய்துள்ளோம்.

என்று போல் இன்றும், காலத்திற்கு அப்பாற்பட்ட சுந்தரம் நன்னெறிகளை கடைபிடிக்க எங்களது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இதுவே நாங்கள் அளிக்கும் **சுந்தரம் வாக்குறுதியாகும்.**

**SUNDARAM FINANCE GROUP**
*Enduring values. New age thinking.*

**Sundaram Finance** www.sundaramfinance.in
**Sundaram BNP Paribas Home** www.sundarambnpparibashome.in
**Sundaram Mutual** www.sundarammutual.in
**Royal Sundaram** www.royalsundaram.in

# தொழில் முனைவோருக்கு மதியும் நிதியும்

பா. சீனிவாசன்

ற்றி அடையத் துடிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டுதல் என்பது அவசியம். அது அவனுடன் பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலைக்கு ஏற்ப தேவைப்படுகிறது. பாரதிய யுவசக்தி டிரஸ்ட் (Bharatiya Yuva Shakthi Trust) வழிகாட்டுதலை (Mentoring) தேர்ந்த வழிகாட்டிகள் (Mentors) மூலம் செயல்படுத்தும் ஒரு அறக்கட்டளை. வசதியற்ற இளம் தொழில் முனைவோரையும், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களையும் தேர்ந்தெடுத்து, தொழில் தொடங்க வாய்ப்பு அளிக்கிறது. இது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பு ஆகும். இந்த அமைப்பின் தனித்துவம் இதன் வழிகாட்டிகள் அனைவரும் ஆர்வலர்கள். இதன் முக்கிய நோக்கம் ‘‘வேலை தேடுபவர்களை - வேலை உருவாக்குபவர்களாக மாற்றுவதே’’ ஆகும்.

தொழில் முனைவுச் சிந்தனை உள்ள பலரும் செயல்பாட்டில் இறங்காமல் நினைவுகளுடனேயே நின்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஆர்வமுள்ளவர்களுக்கு தயக்கம் போக்கி சரியான தொழில் ஆலோசனைகளைத் தந்து அதற்குரிய தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. குறைந்த மூலதனத்தில் வேலை வாய்ப்பு அளிப்பதே BYST மேன்மையாகும். இந்நிறுவனம் தொழில் முனைவோரின் தனித்திறன் மற்றும் ஆக்கப்பூர்வத்திறனின் வளர்ப்பிடமாகத் திகழ்கிறது. தொழில்நுட்பம், பயிற்சி, ஆலோசனை மற்றும் வழி காட்டுதல் (Technology, Training, Consultancy, Counselling) அளிக்கிறது.

*1992*ஆம் ஆண்டு வளரும் நாடுகளுக்கு பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் அவர்களின் தொண்டு நிறுவனத்தின் மூலம் தொடங்கப்பட்டது. இந்தியாவில் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII-Confederation of Indian Industry), டாடா, பஜாஜ், கோத்ரேஜ், அமெரிக்க காப்பீட்டுக் குழுமம் (AIG), டாஜியோ ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இயங்குகிறது. இதன்,

**ஆரம்ப கர்த்தாக்கள்:** திரு.ஜே.ஆர்.டி. டாடா

திரு.எச்.பி. நந்தா

தலைவர் - மேலாண்மை இயக்குநர்: திரு.ராகுல் பஜாஜ்.

இன்று டில்லி,





சமயக் கடுஞ்சடங்குகளைச் சமுதாயம் வலியுறுத்தியபோதும், தனிப்பட்டவர்கள் தம் கருத்துக்களைச் சொல்வதற்கும், அதைப் பின்பற்றுவதற்கும் அவை தடையாக இருந்ததில்லை. அதனால்தான் முரண்கோட்பாட்டாளர்கள், ஐயுறவுக் கோட்பாட்டாளர்கள், இறைவனை நம்பாதவர்கள், பகுத்தறிவுவாதிகள், சுதந்திரமாகச் சிந்திப்பவர்கள், பொருள் முதல்வாதிகள், இன்பக் கோட்பாட்டாளர்கள் ஆகிய பல திறம்பட்டவர்கள் இந்தியாவில் வாழ்வையும் வளர்ச்சியையும் பெறமுடிந்தது.

சென்னை, ஐதராபாத், புனே, அஸ்ஸாம் நகரங்களிலும் மகாராஷ்டிரா, தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலும் செயல்பட்டு வருகிறது. பாரதிய யுவசக்தி டிரஸ்ட் (BYST) தனது செயல்பாடுகளின் மூலம் பெரிய தொழில் நிறுவனங்களிடையே ஒரு சமூகப் பொறுப்பை ஏற்படுத்தி வருகிறது.

**தொழில் கடன் வசதி** : 18-35 வயதுக்கு உட்பட்ட வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர்களையும் புதிய தொழில் முனைவோரையும், தொழிலை விரிவுபடுத்த விரும்புவோரையும் தேர்ந்தெடுத்து ரூ.50 லட்சம் வரை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ஈடு மற்றும் துணை ஈடு (Security and Collateral) எதுவும் பெறாமல் கடன் பெற வழிவகை செய்கிறது. இவ்வாறாக நிதிநிலைக்குரிய உதவிகள் மட்டுமல்லாமல் தொழில் முனைவோருக்கு தொழில் வழிகாட்டி உதவிகளான,

- ஊக்குவித்தல்.
- தான் தொடங்கியிருக்கும் தொழிலின் வாய்ப்புகளை நன்கு அறியச் செய்தல்.
- தொழில்நுட்பங்களை அறியச் செய்தல்.
- பணத்திரட்டு வகைமுறை வாய்ப்புகளை தெளிவுப்படுத்தல்.
- நிர்வகிக்கக் கூடியவராக இல்லையெனில் அந்த திறமையை வளர்த்துக்கொள்ள வழிவகை செய்தல்.
- தொழில் முனைவோர் தான்கொண்ட கருத்தில் நம்பிக்கையாக இருக்க உதவி செய்தல்.
- வெற்றிக்கு மிக அவசியமான கடும் உழைப்பு, நீண்ட நேரம் வேலை செய்தல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள செய்தல்.
- சந்தைப்படுத்த உதவுதல்.

போன்றவற்றிற்கு சரியான வழிகாட்டுதலை (Mentoring) தேர்ந்த வழிகாட்டிகள் (Mentors) மூலம் தொண்டாற்றி வருகிறது.

தொழின்முறை பள்ளிகள் (Vocational Schools), தொழில் பழகும் பயிற்சி பள்ளிகள் (Entrepreneurial Training Institutions), தொழில் கூட்டமைப்புக்கள் (Industry Associations, Chamber of Commerce), அரசு சாராத் தொண்டு (NGO), நிறுவனங்களிடமிருந்து தொழில் திட்ட அறிக்கைகள் வரவேற்கப்படுகிறது. தொழில் திட்ட அறிக்கைகள் (Project Profiles and Reports) தயாரிக்கவும் உதவுகிறது. தொழில்முனைவோர் தேர்வுக் குழு (Entrepreneur Selection Panel) இந்த திட்ட அறிக்கையை முறையாக பரிசீலித்து தொழில் தொடங்கி, வளரும் வரை வழிகாட்டுதலை தனது கருத்து வளக் குழு (Resource) வழிகாட்டிகளின் குழுக் கொண்டு இலவசமாக செய்து வருகிறது.

**தொழில் கடன் வசதி :**

- ரூ.1 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை.
- உத்திரவாதம்/பிணையம் இல்லை.
- (தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக).

**தகுதிகள் / நிபந்தனைகள்:**

- வயது 18-35.
- தொழில் - உற்பத்தி மற்றும் சேவை மட்டும்
- மாவட்டம் - சென்னை மற்றும் காஞ்சிபுரம்
- புதிய தொழில் தொடங்க/விரிவுபடுத்த.

**BYST சேவைகள் :**

- தொழில் வழிகாட்டி உதவி.
- தொழில் முனைவோர் பயிற்சிகள்.
- விருதுகள் மற்றும் அங்கீகாரம்.
- தொழில் முனைவோர் தொடர்புகள்.
- தொழில் கண்காட்சி உதவி.

வாரந்தோறும் புதன், வெள்ளிக்கிழமைகளில் மதியம் 3 மணிக்கு கீழ்க்காணும் முகவரியில் தொழில் முனைவோருக்கும், தொழில் புரிவோருக்கும் வழிகாட்டிகள் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படுகிறது.

முகவரி :

பாரதிய யுவ சக்தி டிரஸ்ட்
C/o. இந்திய தொழில் கூட்டமைப்பு (CII)
எண்.98/1, வேளச்சேரி பிரதான சாலை,
கிண்டி, சென்னை - 600 032.
B. Shrinivas, (shri@pppindia.com)
Chairman – EIG (Entrepreneur Identification Group) BYST Tamilnadu, Chennai.

தமிழ் ஆர்வலர், கணினி, இணையம், தகவல் தொழில்நுட்பம் துறையின் முன்னோடி மற்றும் தொழில் முனைவோருக்கும், தொழில் புரிவோருக்கும் வழிகாட்டி. ▶

சேலம் சங்கர் M.A., SIFDA.,






# சித்ராஞ்சலி ஸ்டுடியோஸ்

## சினிமா தயாரிப்பு நிறுவனம்

திருவனந்தபுரம், கேரள மாநிலத் தலைநகராகத் திகழ்வதோடு மலையாளத் திரைப்படத் தயாரிப்பின் முக்கிய கேந்திரமாகவும் விளங்குகிறது. எழில் கொஞ்சும் அம் மாநகரில் சித்ராஞ்சலி என்ற பெயரில் இயங்கி வந்த படத் தயாரிப்பு நிறுவனம் [Film Production Company] 1972ஆம் ஆண்டில் 'ஆத்யதே கதா' என்ற மலையாளப் படத்தை தயாரித்து வெளியிட்டது.

அதன் கதாசிரியர் P.கேசவதேவ் ஆவார். தோப்பில் பாஸி என்பவர் திரைக்கதை அமைத்த ஆத்யதே கதா என்ற அப் படத்தை பிரபல இயக்குநர் K.S. சேதுமாதவன் இயக்கியிருந்தார். மஸ்தான் என்ற சிறந்த கேமராமேன் ஒளிப்பதிவை மேற்கோள்ள T.R. ஸ்ரீனிவாசுலு அதன் படத்தொகுப்பை செய்து முடித்தார். அப் படம் 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29ஆம் நாள் திரையிடப்பட்டது.




## 'ஆத்யதே கதா' படக் கலைஞர்கள்

மலையாளப் படவுலகின் முடிசூடா கதாநாயகனாகத் திகழ்ந்த பிரேம் நஸீரும், சங்கரத்தும், அலும்மோ டென்னும், கோவிந்தன் குட்டியும் அப் படத்தில் நடித்திருந்தனர். அன்றைய திரைநட்சத்திரங்களாகத் திகழ்ந்த விஜயஸ்ரீ, ஜமீலா மாலிக், ஸ்ரீலதா, சுஜாதா போன்ற நடிகைகளும்... 'ஆத்யதே கதா' படத்தில் இடம்பெற்றிருந்தனர். மேற்கண்ட படத்தயாரிப்பு நிறுவனம்தான், பிற்காலத்தில் சித்ராஞ்சலி ஸ்டுடியோவாக மிளிரத் தொடங்கியது!

## சித்ராஞ்சலி ஸ்டுடியோ

திருவனந்தபுரத்திலிருந்து 7 கி. மீட்டர் தொலைவில் கம்பீரமாய்க் காட்சி தரும் சித்ராஞ்சலி ஸ்டுடியோ 1980ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 'கேரள மாநில திரைப்பட மேம்பாட்டுக் கழகம்' (Kerala State Film Development Corporation - KSFDC) சித்ராஞ்சலி ஸ்டுடியோவை உருவாக்கியுள்ளது. திருவல்லம் என்ற மலைக் குன்றுகள் சூழ்ந்த அழகிய இயற்கையெழில் கொஞ்சும் பகுதியில் பட்டத்து இளவரசியாய் அது பரிமளிக்கிறது!

சிங்காரம் நிறைந்த சித்ராஞ்சலி ஸ்டுடியோ 75 ஏக்கர் அளவு பரப்பளவில் அதாவது 3,00,000 சதுர

மீட்டர் விஸ்தீரணத்தில் 'தைத் தக்க தையென' நர்த்தனமிட்டுக் கொண்டிருக்கும் நளினம்தான் என்னே! என்னே! வெளிப்புற ஒலியால் பாதிக்கப்படாதவாறு அமைக்கப்பட்டுள்ள இம் மாபெரும் 'படப்பிடிப்புத் தளம்' (Sound proof Indoor Floor) *12,000* சதுர அடி பரப்புடையது! அதாவது, *1100* சதுரமீட்டர் விஸ்தீரணம் கொண்ட இப் பிரமாண்டமான 'படப்பிடிப்புத் தளம்' (Indoor Floor) ஆசிய கண்டத்திலேயே இரண்டாம் இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது!

சுருங்கச் சொன்னால், கேரள மாநில திரைப்பட மேம்பாட்டுக் கழகம் வண்ணமுற அமைத்துள்ள வனப்புமிகு சித்ராஞ்சலி ஸ்டுடியோ மலையாள மண்ணில் அமைந்துள்ள மகத்தான மயன் மாளிகை ... எனலாம்! அதில் ஐயமில்லை!

## சித்ராஞ்சலியின் சிறப்புகள்

திருவனந்தபுரத்திலிருந்து எட்டிப்பிடிக்கும் தொலைவில் அதாவது எண்ணி ஏழாவது கி.மீட்டர் தூரத்தில் உள்ள திருவல்லம் குன்று பகுதியில் சித்ராஞ்சலி ஸ்டுடியோ அமைந்திருப்பதால் பெரும்பாலான பட தயாரிப்பாளர்கள் தம்முடைய வெளிப்புறப் படப்பிடிப்புகளை மிக அண்மையிலுள்ள சுற்றுப்புறங்களிலேயே செய்துவிடுகின்றனர். அதனால் தயாரிப்புச் செலவு கணிசமாகக் குறைகிறது. இந்த ஸ்டுடியோவில் *4* வெளிப்புற படப்பிடிப்பு யூனிட்டுகள் (Outdoor units) இருப்பதால் படத் தயாரிப்பாளர்களுக்கு பேருதவியாய் உள்ளது!

படப்பிடிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும், சாதனங்களையும் சித்ராஞ்சலி ஸ்டுடியோ பெற்றிருக்கிறது. நவீன கேமராக்களும் பலதரப்பட்ட விளக்குகளும், சோதனைக் கூடங்களும் (Laboratories), Non - Linear Editing Suites வசதிகளும், டப்பிங் ஸ்டுடியோக்களும், DIS-Mixing வசதிகளும், படப்பிடிப்புத் தளங்கள் இரண்டும் பெற்றிருக்கிறது. அதனால், பெரிய பட்ஜெட் படங்களும், சிறிய பட்ஜெட் படங்களும் சித்ராஞ்சலி ஸ்டுடியோவை நாடி வரமுடிகிறது!

கலாபவன் டிஜிட்டல் ஸ்டுடியோ: அறிவியல் முன்னேற்றம் காரணமாக இன்றைய படப்பிடிப்புமுறை பழைமை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நவீன டிஜிட்டல் உலகிற்குள் நுழைந்துவிட்டது. அம் மாற்றத்திற்கு சித்ராஞ்சலி ஸ்டுடியோ மட்டும் விதிவிலக்காயென்ன? சூழலை நன்குணர்ந்த நிர்வாகத்தினர், தலைநகர் திருவனந்தபுரத்தில் கலாபவன் என்ற பெயரில் புத்தம் புது டிஜிட்டல் ஸ்டுடியோவை அமைத்துள்ளனர்.

சித்ராஞ்சலி ஸ்டுடியோவின் இரட்டைப் பிறவி... 'மாற்றானாக' இது செயல்படுவதால் திரைப்படத்தோடு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் உறுதுணையாக கலாபவன் டிஜிட்டல் ஸ்டுடியோ செயல்பட்டு கைகொடுத்த தெய்வமாய் காட்சி தருகிறது! அம்மட்டோ! அந்த ஸ்டுடியோவில் Sony DSR *400* கேமராக்களும், ஒலிப்பதிவு ஸ்டுடியோவும் (Sound Recording Studio) அமைந்து படத் தயாரிப்புக்கு தேவையான அனைத்து நவீன வசதிகளையும் வழங்கும் ஊற்றுக் கண்ணாய் விளங்குகிறது!

## வாசகர்குரல் வாசகர்குரல் வாசகர்குரல்

மதிப்பிற்குரிய அய்யா,

தங்களின் அன்பு பாலம் ஆகஸ்ட் இதழ் - 'ப.ஜீவானந்தம் ஸ்பெஷல்' பாதுகாக்கப்பட வேண்டிய பெட்டகம். திரு.சேலம் K.C.மணிவண்ணன் அவர்களுடைய ஜீவாவைப் பற்றிய கட்டுரைகள் ஒரு புத்தகமாக தொகுக்கப்படவேண்டியவை. ஜீவாவைப் பற்றி அவரது மகன் என்ற முறையில் நான் அறியாத தகவல்கள் பலவற்றை ஒரு தேனீ போன்று தேடித்தேடி தந்திருக்கிறார். ஜீவாவைக் குறித்து ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு மணிவண்ணன் அவர்களது கட்டுரை பேருதவி புரியும்.

பாரதம் தாயகம் கவிஞர் சேலம் சங்கர் அவர்களுடைய கவிதை, அவருடைய உண்மையான நாட்டுப்பற்றை வெளிப்படுத்துகிறது. நூலகர் தினத்தை, நூலகத்தின் பயன்களை நல்நூலகர் மதுராந்தகம் குமார் அருமையாக தனது கட்டுரையில் கூறியுள்ளார். தன்னம்பிக்கை கதை சிறப்பாக இருந்தது. மொத்தத்தில் அன்புப் பாலம் இதழ் போற்றப்பட வேண்டிய ஒன்று. இதில் என்னையும், எனது தந்தையைப் பற்றி எழுதத் தூண்டியமைக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு சமூகப் பணிகளில் இவ்விதழ்ப்பணி தங்களின் பணியை இமயமென உயர்த்துகிறது நன்றி.

*- ஜீவா மணிகுமார்.*

*(தோழர் ஜீவாவின் மகன்)*

இவை யாவையும் கடந்து மனிதநேயப் பண்புகளைப் போற்றும் தலைசிறந்த திரைப்படங்களைத் தயாரித்து அளித்தமைக்காக எண்ணற்ற தேசிய விருதுகளையும் அகில உலக விருதுகளையும் பெற்று சித்ராஞ்சலி ஸ்டுடியோ பெருமிதத்தோடு திரைப்பட வீதியில் வலம் வருகிறது!

## வெளிப்புற படப்பிடிப்பு சாதனங்கள்

சித்ராஞ்சலி ஸ்டுடியோவில் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக ஒலிக்கட்டுப்பாடுடன் விளங்கும் (Sound - Proof generators) ஜெனரேட்டர்களைக் கொண்ட நவீன அவுட்டோர் வேன்களும், Kinoflo Lights, Multi - 10, Multi *20*, ஜூனியர்ஸ் பேபி லைட்ஸ் போன்ற பல்வேறு வகையான யூனிட் லைட்டுகளைப் பெற்றிருக்கின்றன.

மேலும், கேமராக்களுள் Arri II C Camera, Arri III / 435 கேமெராக்களையும், க்ரேன்ஸ் (Cranes), Trolly & Tracks மற்றும் Nagara Records சாதனங்களையும், Negative Developing (Film line processor), Printing including D T S - printing (B & H பிரிண்டர் அதாவது எலக்ட்ரானிக் லைட் வால்வுகள் கொண்டது) வசதிகளைப் பெற்றிருக்கிறது.

அனைத்து வசதிகளையும் பெற்ற மேற்கண்ட ஸ்டுடியோவில் கலர் மாஸ்டர் – Hazeltine சாதனமும் இருப்பதால் 'கலர் கிரேடிங்கை' எளிதாக உய்த்துணர முடியும். இவைமட்டுமின்றி 'ஸௌண்ட் நெகட்டிவ் டெவலெப்பிங்', Tele - cine & Negative coating சாதனமும்,

# துறையூர் கிளை நூலகத்திற்கு சோலார் மின் வசதி

## இ ந் தி ரா  கா ந் தி  எ ம் எ ல் ஏ  த க வ ல்



துறையூர் கிளை நூலக வாசகர் வட்டம் ரோட்டரி சங்கம் இணைந்து நடத்திய முப்பெரும் விழாவில் கிளைச் சிறையில் உள்ள நூலகத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் இந்திரா காந்தி நூல்களை வழங்குகிறார். கண்காணிப்பாளர் அறிவழகன் பெற்றுக்கொள்கிறார். அருகில் மாவட்ட நூலக அலுவலர் சிவகுமார், வாசகர் வட்டத்தலைவர் நடராஜன், ஒன்றிய செயலாளர் சேனை செல்வம், நூலகர் பாலசுந்தரம் உள்ளனர்.

**து**றையூர் கிளை நூலக வாசகர் வட்டம் மற்றும் ரோட்டரி சங்கம் இணைந்து பரிசளிப்பு, நூலக புரவலர்களுக்கு பட்டயம், கிளை சிறைக்கு நூல்கள் வழங்கும் முப்பெரும் விழா திவ்யப்பிரியா மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வாசகர் வட்டத்தலைவர் வேணுகோபால், ரோட்டரி சங்கத்தலைவர் விஜயகுமார், மருத்துவ அதிகாரி வாசுதேவன், உதவி தொடக்கக்கல்வி அலுவலர் புகழேந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்திரா காந்தி கலந்துகொண்டு துறையூர் கிளைச் சிறையில் இல்லவாசிகள் மற்றும் அங்கு பணியாற்றும் காவல்பணியாளர்கள் பயன் பெறும் வகையில் நன்கொடையாக நூல்கள் பெற்று கிளைச்சிறையில் நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த நூலகத்திற்கு 200 புதிய நூல்களை வழங்கினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் நூலக புரவலர்களுக்கு பட்டயம் வழங்கி அவர் பேசுகையில், துறையூர் கிளை நூலகத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.5 லட்சம் மதிப்பில் சோலார் மின் வசதி ஏற்படுத்தி தரப்படும். ரூ.48 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்திற்கு நூலகத்துறையுடன் இணைந்து கூடுதல் வசதியை ஏற்படுத்தி தரப்படும் என்றார். விழாவில் மாவட்ட நூலக அலுவலர் அவர்களிடம் ரூ.5,000 செலுத்தி துறையூர் நூலகத்தில் முதல் பெரும் புரவலராக சேர்ந்தார்.

விழாவில் ஒன்றிய செயலாளர் சேனைசெல்வம், நகரசெயலாளர் ஜெயராமன், ஊராட்சி ஒன்றிய குழு துணைத்தலைவர் பாலசுப்ரமணியன், வாசகர் வட்ட துணை செயலாளர் சதானந்தம், உறுப்பினர்கள் துரைமருதை, ராஜமாணிக்கம், ரோட்டரி சங்க முன்னாள் தலைவர்கள் முரளி குமார், தேர்வுத்தலைவர் மகேஸ்வரன், துறையூர் வட்டத்தில் உள்ள நூலகர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் ரோட்டரி சங்க செயலாளர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.

Pre-view Theatre வசதியும் சித்ராஞ்சலி ஸ்டுடியோவில் இருக்கிறது.

### எண்ணற்ற சிறப்பம்சங்கள்

பலவகை நவீனக் கருவிகளைக் கொண்ட சித்ராஞ்சலி ஸ்டுடியோவில் 'போலீஸ் ஸ்டேஷன், ஹாஸ்பிடல், வகுப்பறை செட்டுகளும், இயற்கை எழில் தோட்டங்களும், ஆபீஸ்களும், கிராம வீடுகளின் செட்டுகளும் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருப்பதால் படத்தயாரிப்பாளர்கள் மேற்கண்ட பின்னணிக் காட்சிகளுக்காக ஸ்டுடியோவை விட்டு வெளியே அலைந்து திரிய வேண்டிய தேவையில்லை.

மேலே குறிப்பிட்ட வசதிகளோடு அற்புதமான பல்வகை நில அமைப்புகளும் (Land scap) வனப்பு மிக்க காடுகள், நடைபாதைகளும், நடைமேடைகளும், பசுமை நிறைந்த புல்வெளிகளும் (Lawns), கடற்கரையும், ஆறுகளும், சதுப்பு நிலங்களும், தூய நீர் கொண்ட ஏரிகளும், படப்பிடிப்பிற்கு ஏதுவான மலைக் குன்றுகளையும் ஒட்டுமொத்தமாகப் பெற்ற ஒப்பற்ற சுற்றுலாத்தலமாக விளங்கும் சொர்க்க பூமிதான் சித்ராஞ்சலி ஸ்டுடியோயெனில்... அது மிகையன்று.

### புகழ் மகுடப் பொன்னிறகு

சித்ராஞ்சலி ஸ்டுடியோவின் சிறப்புகளிலெல்லாம் தலைசிறந்த சிறப்பு என்னவெனில் திரைப்படக் கல்வி மற்றும் தொலைக்காட்சி பற்றிய படிப்பையும், பயிற்சியையும் வழங்கி வருகின்ற நற்பணி அதன் 'புகழ் மகுடத்தில் பொன்னிறகு' ஒளி வீசும் பெருஞ்சிறப்பாகும்! அக் கல்விக்கான பயிற்சிக் காலம் ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்களாகும். அதுவும், விடுதியில் தங்கிப் படிக்க வேண்டியதில்லை. இப் படிப்பிற்கு 'Student Internship' எனப் பெயர். மற்றொரு பயிற்சிக்கு 'Certificate Studentship' எனப் பெயர். இதன் பயிற்சிக் காலம் 3 மாதங்கள் மற்றும் 6 மாதங்கள் ஆகும்.

சித்ராஞ்சலி ஸ்டுடியோ வெறுமனே திரைப் படங்களை மட்டும் தயாரித்து வழங்குவதோடு நிற்காமல் எண்ணற்ற இளைஞர்களை... கலைஞர்களாகவும், தொழில்நுட்ப வித்தகர்களாகவும் உருவாக்கும் சீரிய பணியில் செயல்பட்டு வருவதால் எதிர்காலத்தில் 'இந்திய சினிமா' ... உலக அரங்கில் மேலோங்கி நிற்குமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

**படச்சுருள் சுழலும்**

## அன்புப் பாலம்

# 61வது ஆண்டு வைர நிறைவு விழா

நாள் : 02–10–2014, வியாழக்கிழமை

இடம் : சந்திரசேகர் திருமண மண்டபம், மேற்கு மாம்பலம்.

நேரம் : மாலை 4.00 மணியளவில்.

அன்புடையீர் !


வணக்கம். அன்புப் பாலம் நிறுவனத்தின் 61வது ஆண்டு வைர நிறைவு விழா சென்னை மேற்கு மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் (ஸ்ரீனிவாசா திரை அரங்கம் அருகில்) 02-10-2014 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் மேன்மை தங்கிய ச. தமிழ்வாணன் அவர்கள் தலைமையில் திரு.லேனா தமிழ்வாணன், திரு.ரவி தமிழ்வாணன் முன்னிலையில் நடைபெறவுள்ளது. பல துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்கள் விழாவில் கலந்துகொள்ள இசைவு தெரிவித்துள்ளனர். ரூ.61 ஆயிரத்துக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. கலை நிகழ்ச்சி, விருந்தும் உண்டு. அனைவரும் குடும்பத்துடன் கலந்துகொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

*- பாலம். கல்யாணசுந்தரம்.*

**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.**

## முக்கிய அறிவிப்பு

**அ**ன்புப் பாலம் இதழ் தமிழகத்தில் 35 மாவட்டங்களில் உள்ள 5 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அனைத்து நூலகங்களுக்கும் செல்கிறது. உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் படிப்பதற்கு வசதியாக ‘அன்புப் பாலத்திற்கென்று தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை 2.10.2014 அன்று நடைபெறும் அன்புப் பாலம் 61வது ஆண்டு வைர நிறைவு விழாவில் திருமதி கந்தன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள். இதன்பின் உலகத் தமிழர்கள் அனைவரும் தங்கள் வீட்டிலிருந்து அன்புப் பாலத்தைப்



செப்டம்பர் 17
பெரியார் பிறந்த நாள் சிறப்புக் கவிதை


# பகுத்தறிவுப் பகலவன் பெரியார்!

**கவிஞர் சேலம் சங்கர் எம்.ஏ.,**

ஈ வே ரா
தமிழ்ச் சமுதாயப் புரட்சியின் சேகுவாரா!
எரிமலைக் கருவில் உயிர்த்தவர்;
இமயங்களைத் தோள்களாய்க் கொண்டவர்!
பட்டிதொட்டிகளில் கப்பிக் கிடந்த
மூடத் தனத்தைச் சிதைத்த சுனாமி!
பகுத்தறிவு வித்திட்ட விவசாயி.
ஈரோடு
தமிழர் வரவு செலவுப் பேரேடு!
தன்மானப் பற்று வைத்த ‘சிட்டாக் குறிப்பேடு!’
தமிழன்
பாதை புரியாமல் தவித்தபோது
ஈரோடு வழிச்சென்றால்,
‘சமத்துவபுரம்’ வருமெனச் சுட்டியவன்!
பெரியாரின் சொற்களோ மந்திரம்,
மேடு பள்ளம் சீராக்கும் ‘JCB’ இயந்திரம்!
அரிமாவின் ‘வைக்கம் புரட்சி’ ...
அடித்தட்டு மக்களுக்கு ‘வேத பாடம்’!
பெரியார் தமிழ் மண்ணின் ‘இங்கர்சால்’,
சமதர்மம் ஒலித்திடும் ‘ஆலய மணி’!
ஈ வே ரா ‘சாதி பேத வளைகுடா’வில் ...
எதிர் நீச்சல் போட்ட ‘மீகிர்ஸென்’!
அவரது வலக்கரம்
தள்ளாமைக்காகவா தடிப் பிடித்தது?
இல்லை நண்பர்காள், இல்லை;
சாதிப் பேயை நையப் புடைக்கவே!
தமிழக மனிதக் காட்டில் அரசோட்சிய
ஒற்றைச் சிங்கம்; ஒரே சிங்கம் ...
வெண்தாடி வேந்தர் பெரியார்தான்!

**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**

‘இந்துத்துவம்’ என்பது மிக பரந்த சிக்கலான தத்துவத்தைக் கொண்டது. ஆனால் நுண்மனதின் நோக்கினால் இவை கைவரப் பெறுகின்ற ஆன்மிகச் சிந்தனையாகத் தோற்றமளிக்கும். கடவுளைப் பற்றிய நம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்துத்துவம் தரும் தகவலுக்கு மாறாக தமக்கே இயல்பாக உரிய சகிப்புத் தன்மையினால் இந்தியர்கள் காரணமற்ற கரணங்களையும் சடங்குகளையும் இன்னும் காப்பாற்றி வருகின்றனர்.



# இந்தியாவின் No.1 டீலர்

# வசந்த் & கோ




சென்னை : தி.நகர் – 42010572, 42029797, 42010573 அடையார் – 42010579 சூளைமேடு – 42010582 புரசைவாக்கம் – 42010571 மயிலாப்பூர் – 42710578 ராயபுரம் – 42010584 வண்ணாரப்பேட்டை – 42010583 பாடி – 42010577 நங்கநல்லூர் – 42056514 ஆலப்பாக்கம்–போரூர் –42010581 தாம்பரம் – 42010575 செங்கல்பட்டு – 27424874 ● வேலூர் : 15–16, காட்பாடி ரோடு, (இந்தியன் வங்கி எதிரில்), 226, ஆற்காடு ரோடு, (தினத்தந்தி அருகில்) ● விழுப்புரம் : 44, ஹாஸ்பிடல் ரோடு. ● பாண்டிச்சேரி : 414, மகாத்மா காந்தி ரோடு – 2227766 ●சேலம் : 34, முதல் அக்ரஹாரம் வைபவ் பிளாசா ● ஈரோடு : 640, பெருந்துறை ரோடு. (காமராஜர் சிலை அருகில்) ● கோயம்புத்தூர் : 15, ஒப்பணக்கார தெரு. (பார்க்கிங் வசதியுடன்) போன் : 2396928, 1098, க்ராஸ் கட் ரோடு, காந்திபுரம். (பஸ் ஸ்டாண்டு அருகில்) ● திருப்பூர் : 238–239, குமரன் ரோடு ● திருச்சிராப்பள்ளி : 2/பி–1, போர்ட் ஸ்டேஷன் ரோடு ●கரூர் : 25, கோவை ரோடு, K.V.R. ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ● திண்டுக்கல் :1, புதிய அக்ரஹாரம் தெரு, பழனி ரோடு ● பழனி : 23/18, ரயில்வேஃபீடர் ரோடு, (வள்ளுவர் தியேட்டர் எதிரில்) ● மதுரை : 162, தெற்கு மாசி வீதி, 54, தெற்கு மாசி வீதி ● தஞ்சாவூர் : நசீர் டவர், 1163, ஈஸ்ட் மெயின் ரோடு ● கும்பகோணம் : 66, மோதிலால் தெரு. போன் : 2423552 ● புதுக்கோட்டை: 854, வடக்கு ராஜ வீதி (அஞ்சுகா திருமண மண்டபம் அருகில்) ● பட்டுக்கோட்டை : 15, அறந்தாங்கி சாலை ● காரைக்குடி : 240/2,ஸ்ரீ சேவகன் அண்ணாமலை (R.K), செக்காலை ரோடு ● இராமநாதபுரம் : 42, வண்டிக்காரத் தெரு ● தூத்துக்குடி : 48–டி, பியர்ல் பிளாசா, பாலவிநாயகர் கோயில் சாலை ● கோவில்பட்டி : 15/18, AKS தியேட்டர் ரோடு, 'ராஜகுமாரி டவர்ஸ்', கிரவுண்டு ஃப்ளோர். (காந்தி சிலை அருகில்) ● பாளையங்கோட்டை : 11, திருவனந்தபுரம் ரோடு (ஊசி கோபுரம் எதிரில்) ● திருநெல்வேலி ஜங்ஷன் 14, பராசக்தி பில்டிங்ஸ் ● நாகர்கோவில் : 36/11–214 DDJ சென்டர், பஸ் ஸ்டாண்டு ரோடு, வடசேரி பஸ் ஸ்டாண்டு எதிரில் ●பெங்களூர் : 101/1, K.H. ரோடு,(டபுள் ரோடு) பிரெஸ்டிஜ்கோர்ட் ● ஓசூர் : 86–ஏ, தாலுகா ஆபீஸ் ரோடு போன் : 2495271

# வாழ்க்கை வரலாற்றாசிரியர் டாக்டர் ராதாகிருஷ்ணன்

சேலம் கே.சி. மணிவண்ணன்

தத்துவங்களையும் சமயங்களையும் விளக்கி உரைப்பதில் தமது திறமையை நாட்டியுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்திய தத்துவ அறிஞர்களின் வரலாற்றை விளக்கியுரைப்பதிலும் தமக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளார். இந்தியத் தத்துவங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாமலும், தெளிவாகத் தெரிந்து கொள்ளாமலும் இருந்த மேற்கத்திய நாட்டவர்க்கு அவற்றை விரிவாக எடுத்துக்காட்டி விளங்க வைத்தார். எந்தப் பொருளைப் பற்றிச் சொல்வதானாலும் அதனை மனங்கவரும் விதத்தில் சொல்ல வேண்டும் என்பதை ராதாகிருஷ்ணன் அறிவார். அவர் இந்தியாவின் வளம்மிக்க தொன்மங்களின் வரலாற்றைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். மேலும் தம் காலத்திய மாமேதைகளின் கருத்துக்களும் அவருக்குக் கைகொடுத்தன. இதனால் ராதாகிருஷ்ணன் சிக்கல் ஏதுமின்றித் தம் பணியைத் தொடர முடிந்தது. இவ்வாறு இந்து அற நூல்களும் வேதாந்தத் தத்துவங்களும் ரவீந்திரநாத் தாகூரைப் பற்றி ராதாகிருஷ்ணன் தெரிந்து கொள்வதற்குப் பேருதவி செய்தன. எனினும் தாகூரின் கவிதைகளே ராதாகிருஷ்ணனைப் பெரிதும் தாகூரின் பால் ஈர்த்தன.

தாகூரைப் பற்றி ராதாகிருஷ்ணன் எழுதிய முதல் நூல் ''ரவீந்திரநாத் தாகூரின் தத்துவம்'' (The Philosophy of Rabindranath Tagore) என்பதாகும். தாகூர் அப்பொழுது நோபல் பரிசு பெற்று புகழின் உச்சியில் இருந்தார். ராதாகிருஷ்ணன் தாகூரை விரி நுண்ணாய்வு கொண்ட தத்துவவியலாளராக அந்நூலில் காட்டியுள்ளார். கிறிஸ்துவ சமயத்தால் தாகூர் அகத்தூண்டுதல் பெற்றார் என்று மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் கூறிவருவது அறிந்து டாக்டர் ராதாகிருஷ்ணன் வருந்தினார். இந்தச் சூழ்நிலையில் தாகூரின் தத்துவ நாட்டம், வேதங்களிலிருந்தும் உபநிடதங்களிலிருந்தும் தோற்றம் பெற்றது என்பதை ராதாகிருஷ்ணன் இந்நூலில் நிறுவினார். ''எதிர்கால உலகத்தைச் சேர்ந்த உலகந்தழுவிய மனிதர்களாக எடுத்துக்காட்டத் தகுந்தவர்களுள் தாகூர் ஒருவராகத் திகழ்கிறார்'' என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் தன்னுடைய நூலில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு சமகாலத்தவரை உயர்வின் உச்சியில் வைத்துத் தன்னம்பிக்கையுடன் துணிந்து போற்றி வாழ்த்துவதென்பது அக்கால மரபாக இருந்தது. இதுவே வறட்டுக் கருத்துரையாக, இந்த ஆன்மாவையே தொடுகின்ற பேருரையாக அமைந்தது. மேற்கத்திய நாட்டவரும் இத்தகைய மதிப்பீட்டை வரவேற்றனர்.

#### பிரிட்டிஷ் கல்விக்கழகங்களில் உரையாடல்

டாக்டர் ராதாகிருஷ்ணன் 1938ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கல்விக் கழகங்களில் உரையாற்றச் சென்றது, நம் நாட்டிற்குக் கிடைத்த பெருமையாகக் கூறப்பட்டது. தத்துவவியல் ஆய்வில் வெண்சுடரொளி விளங்கியதொரு பொருளைத் தன்னுடைய சொற்பொழிவுக்காக ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இதனடிப்படையில் ''கௌதம புத்தர்'' என்ற தலைப்பில் அவர் சொற்பொழிவாற்ற எண்ணங் கொண்டார். வெளிநாட்டு மிஷினரிகள் இந்தியாவின் சமயப் பெருமையைக் குலைத்தாலும், ராதாகிருஷ்ணன் இந்தியப் பண்பாட்டு மரபுகளில் ஆழங்கண்டிருந்ததாலும் சமஸ்கிருதத்தை நன்கு கற்றறிந்திருந்ததாலும், சங்கரரைப் பற்றியோ, இராமானுஜரைப் பற்றியோதான் இவர் பேசுவார் என்று





இந்தப் பிரபஞ்சம் உற்பத்தியானதன் நோக்கம் நிறைவேறியவுடன், கடவுளின் அருளாட்சி நிலைநாட்டப்பட்டது. வானுலகம் போலவே நிலவுலகமும் மாறியதும், ஆன்மிக ஞானத்தை அனைத்து உயிர்களும் எய்தியதும், இறந்தும் பிறந்தும் வரும் உயிர்களைக் காட்டிலும் உயர்நிலை எய்தியதும் - இந்தப் பிரபஞ்சத்தின் போக்கு வெளிப்படையாக உணரமுடியாத அளவிற்கு மேம்பாடடையும்.

அவர்கள் எதிர்பார்த்தனர். வேதகாலச் சமயங்களுக்கு எதிரான, பாலிமொழி வழங்கிய, ஏறக்குறைய இல்லையென்றே சொல்லும்படி இந்தியர்கள் மறந்துவிட்ட புத்த மதத்தைப் பற்றி ராதாகிருஷ்ணனால் பேசமுடியுமா? என்ற வினாக்குறி எல்லோர் உள்ளத்திலும் எழுந்தது. ஆனால் என்ன வியப்பு! 1879இல் எட்வின் அர்னால்டு (Edvin Arnold) எழுதி வெளியிட்ட ''ஆசிய ஜோதி'' (The Light of Asia) என்ற நூலுக்குப் பிறகு புத்தரைப் பற்றிச் சொல்வதில் அனைவரையும் மெய்மறந்து போகும்படி உரையாற்றிய ராதாகிருஷ்ணன் ஆற்றலை என்னவென்று சொல்வது! அவர் எடுத்து விளக்கிய புத்தரின் வாழ்க்கையை, மேல்நாட்டினர் பலர் கிறிஸ்துவின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. கீழைநாட்டுத் தத்துவங்களைப் பற்றிய புதிர் நிலையிலிருந்த மேற்கத்திய நாட்டவர் ''நாம் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எடுத்துச் சொல்வதற்கு இங்கொருவர் இருக்கிறார்'' என்று மகிழ்ந்தார்கள். சான்றாக ''புத்தரின் கோட்பாடுகள் புரிந்துகொள்வதற்கு அரிதாக இருக்கின்ற நுண்பொருட்கோட்பாடுகளாக இல்லாமல், பின்பற்றுவதற்கு எளிமையாக அமைந்துள்ளன'' என்றும், ''அறிவுத் தெளிவுள்ள இக்காலக்கட்டத்திற்கு மிகப் பொருந்திவரக்கூடியனவாக உள்ளன'' என்றும் ரோட்ரிக்ஸ் என்பார் கருத்துத் தெரிவித்தார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் தன்னுடைய உரைகளை முன்கூட்டியே தயாரிப்பதில்லை. நினைத்த மாத்திரத்தில் உரைகளை ஆற்றினார். தம்முடைய உரையைத் தயாரிக்கும்போதுகூட, குறிப்புகளை எழுதிவைத்துப் பயன்படுத்துவதில்லை. தன் சொற்பொழிவைக் கேட்போரின் உணர்திறனை அளந்தறியும் கவர்திறத்தை ராதாகிருஷ்ணன் பெற்றிருந்தார். அவரது உரையின் பல பகுதிகள் புத்தரின் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன. செல்வச் செழிப்பில் மிதந்த இளவரசர், வாழ்க்கையின் துயரைக் கண்டு இரவலனாய் ஆகிவிட்ட காட்சியையும், பெரும் புரட்சியாளராக விளங்கிய, உணர்ச்சியை வெளிக்காட்டாது ஆன்மிக அமைதியில் ஆழ்ந்து வாழ்கின்ற சமயவாதிகளைப்போல மாறிவிட்ட காட்சியையும் ராதாகிருஷ்ணனின் உரை காட்டியது. பெரும் இன்னல்களிலிருந்த மனித சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்குத் துன்பச் சிலுவையைச் சுமக்கின்ற துறவுள்ளம் கொண்டவராக ராதாகிருஷ்ணனின் உரையில் புத்தர் காட்சியளித்தார். உண்மையிலேயே ஒரு கிறிஸ்துவைப் போல புத்தர் தோற்றமளித்தார். புத்தருக்கும் கிறிஸ்துவுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. கிறிஸ்துவுக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னரே புத்தர், கிறிஸ்துவைப்போல தோன்றினார் என்று ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

டாக்டர்ராதாகிருஷ்ணன்தான்பேசஎடுத்துக்கொண்ட பொருளுக்கு நேரடியாகவே சென்றுவிடுபவர். அவரது தொடக்க வரிகளே உரையின் பொருளைக் காட்டிவிடும். இந்து சமயத்தைச் சார்ந்த தத்துவவியலாளர், புத்த சமயத்தைப் பற்றிப் பேசுவதற்கும், கருத்து கூறுவதற்கும் தகுதி உடையவரா? என்ற கேள்வியை எழுப்புவது எந்தவகையிலும் சரியானதன்று. இதனை ராதாகிருஷ்ணனின் பின்வரும் உரைப்பகுதியில் நாம் அறிந்துகொள்ளலாம்.

கீழை நாட்டு உணர்வுகளாய் வடிவம் பெற்ற தத்துவங்களின் தலைமையைக் கௌதம புத்தருடைய கருத்துரைகளில் நாம் காண்கிறோம். வேறெந்தத் தத்துவங்களைக் காட்டிலும் இந்தியாவில் முகிழ்த்து முதிர்ந்த தத்துவங்கள் மனிதஇன மேம்பாட்டிலும் எண்ண வளர்ச்சியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவை பிற சமயங்களைக் காட்டிலும் புனிதமானவை என்று கருதப்படக்கூடியவை. உலகின் சிந்தனை வளர்ச்சி வரலாற்றில் புத்தர் முக்கியமாக பேசப்படுபவர். நாகரிகமடைந்த அனைத்துலக மனிதர்களின் மரபுவழியைச் சார்ந்தவர். ஏனெனில் ஒருபாற்கோடாத பொதுத் தன்மையுடன் கூடிய அறிவாற்றலாலும், உண்மையான வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்க நெறியைப் போற்றியதாலும், ஆன்மிக உள்ளொளியைத் தூண்டியதாலும், வரலாற்றின் தலைசிறந்த பொதுமக்களுள் ஒருவராகப் புத்தர் திகழ்கிறார். ஆய்திறம்மிக்க சொற்பொழிவாளரான ராதாகிருஷ்ணன், புராணக்கதை மாந்தர் ஒருவரைப் பற்றிக் கூறவில்லை. வரலாற்றில் இடம்பெற்ற தலைசிறந்த மனிதர் ஒருவரைப் பற்றி விளக்குகிறார். புத்தருக்குப் பிரம்மன் அறிவுரை கூறுவதைப் பற்றிச் சொல்லும்போது ''புத்தர் தனக்குள்ளேயே மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றிய விவாதங்களை நடத்திக் கொண்டிருப்பது, எதிர்காலம் பற்றிய ஒரு எச்சரிக்கையை அவருள் உருவாக்கியிருக்கிறது. இது சாக்ரட்டீஸ் இவ்வுலக வாழ்வை நீக்குந் தருணத்தில் அவரது ஆன்மாவுக்கும் உளமாகிய பேய்க்கும் இடையில் நடைபெற்ற விவாதம் போன்று உள்ளது'' என்று ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

ஒரு சமுதாயம் சுதந்திரமாகச் சிந்திப்பதற்குத் தேவையானவற்றை புத்தரது அறிவுரைகள் எடுத்துக் காட்டுகின்றன. இவரது அறிவுரைகளில் மறைபொருள் என்பதே இல்லை என்று ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். நுண்மாண் நுழைபுல அறிவுடையவர்கள் ராதாகிருஷ்ணனின் பொருள் பொதிந்த சொற்களை அறிவர். மிஷினரிகளின் செயற்பாடுகள் இந்தியாவெங்கும் பரவியிருந்த சமயத்தில் சிந்தனையைத் தூண்டும் வகையில் ராதாகிருஷ்ணன் தமது கருத்துக்களை வெளியிட்டார்.


‘‘கட்டாய மதமாற்றத்தைப் புத்தர் அறியார். நெறிகளை நம்புவதைக் காட்டிலும் வாழ்க்கையில் அவற்றை கடைபிடிப்பதே அவர் போதித்த கொள்கைகளின் அடித்தளமாக அமைந்தது. அவர் தமக்கே உரித்தான பழக்கத்தையும், உறுதியையும் உருவாக்க விரும்பினார். நம்முடைய மூடத்தனமான ஆசைகளே நம்முடைய துன்பங்களுக்குக் காரணம் என்று சொன்னார். நம்முடைய விழிகளைப் புதியஒளி பெறச் செய்வதும், நம்மை நாமே மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதற்குரிய வழிகளாகும். நம்முடைய தீய எண்ணங்களை அழித்துவிட்டு, நல்லெண்ணங்களை வளர்ப்போமாயின், அதுவே நம்முடைய மனம், மகிழ்ச்சி கொள்வதற்குரிய வழியாகும். சமயநெறி முறைகளில் மாற்றங்கள் செய்வது குறித்து புத்தர் கவலைப்படவில்லை. ஆகுதியை வளர்க்கும் பிராமணர் ஒருவரின் அருகில் அமர்ந்து அவருடைய வழிபாட்டை இகழாமல், அவரிடம் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லி விளக்க வல்லவர் புத்தர். தேவையில்லாமல் விரிவாகச் சொல்லி சோர்வு ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக ராதாகிருஷ்ணன் புத்தரின் வாழ்க்கையை விரித்துச் சொல்லவில்லை. மானிட ஒற்றுமையை வளர்ப்பதற்கான வழிகளை, ஒப்பியல் சமயங்களின் வழி ராதாகிருஷ்ணன் காட்ட விரும்பினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் எழுதிய ‘‘மகாத்மா காந்தி வாழ்க்கையும் எழுத்தும்’’ என்ற நூல் *1939*இல் வெளியானது. இதன் தலைப்பைப் பார்த்தாலே இந்நூலின் நோக்கத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். பெருமை பெற்ற அரசியல்வாதியாகத் திகழ்ந்த காந்தியின் மதிப்பினைப் பாராட்டுவதற்காக மட்டும் இந்நூல் எழுதப்படவில்லை. அவருடைய துணிவுமிக்கவிடுதலைப் போராட்ட அணுகுமுறையைக் காட்டிலும் வாழ்க்கையறத்திலேயே அவருடைய பெருமை அடங்கியிருக்கிறது என்று ராதாகிருஷ்ணன் இந்நூலில் உணர்ந்து கூறியுள்ளார். ஒருவர் அரசியல் வாழ்க்கையில் நுழையும்போது அதனால் கிடைக்கக்கூடிய அதிகாரத்தினால் மயங்கிவிடாமல் நெறிபிறழாமல் வாழ்வதற்கு மனிதநிலை கடந்து தன்னைத்தான் ஆளுகின்ற திறம் வேண்டும். தன்னுடைய அரசியல் வாழ்க்கை சமூகம் சார்ந்ததாகவும், சமயம் சார்ந்ததாகவும் இருக்குமாயின் மனிதர்களிடையே நிலவும் சமநிலை வளர்ச்சிக்கு அதுவே தீங்காக விளையும். இவற்றையெல்லாம் மீறிய தனித்தன்மையாகிய சரியமைதி நிலையை காந்தியடிகள் பெற்றிருந்தார். ராதாகிருஷ்ணன் இதனை வியந்து பாராட்டுகிறார். காந்தியடிகள் உரிமையை நாடிய போக்கு ராதாகிருஷ்ணனை மிகவும் கவர்ந்தது. இதுகுறித்து ‘‘எல்லாவற்றையும் கடந்து நிற்கின்ற, தூய உண்மையைத் தன்னுடைய வாழ்வில் எந்நாளும் போற்றி வருபவர், உலகத்திலுள்ள கீழான உயிர்களைக்கூட தன்னைப் போலவே போற்றும் உள்ளமுடையவராவர். தூய உண்மையின் மீது நாட்டம் கொள்பவர்கள் வாழ்க்கையின் எந்தவொரு பகுதியையும் ஆராயாமல் விட்டுவைக்க மாட்டார்கள்’’ என்று ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.



கல்வி சார்ந்த அளவிலேயே தன்னுடைய கருத்துக்களை வெளியிடுவதோடு ராதாகிருஷ்ணன் நிறைவு கண்டுவிடவில்லை. அதற்கு அப்பாலும் உண்மைகளைத் தேட முற்பட்ட ராதாகிருஷ்ணனின் நாட்டத்தை ‘‘உண்மையைத் தேடி’’ (My Search for Truth) என்ற அவரது வாழ்க்கை வரலாற்று நூலில் காணலாம். ஒவ்வொருவரும் அறிந்தோ அறியாமலோ வாழ்க்கை உண்மையைத் தானே தேட முயற்சி செய்கின்றனர். தம்முடைய வாழ்க்கை வரலாற்று நூலில் ராதாகிருஷ்ணன் எவரையும் தேவையில்லாமல் முகமன் செய்யவில்லை. உலகத்தின் மலர்ச்சிக்கு அடிநாதமாக இருக்கின்ற பாலியல் உணர்வை இயற்கைக்கு முரணாகக் கட்டுப்படுத்துமாறு காந்தி யடிகள் வலியுறுத்தியபோது ராதாகிருஷ்ணன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இது இயற்கைக்கு முர ணானது என்று தம்முடைய வாழ்க்கை வரலாற்று நூலில் கூறுகிறார். அதுமட்டுமல்ல, பாலுணர்வைத் தவறாகப் புரிந்துகொண்டதால் வெளிப்பட்ட கருத்து இது என்று மறுத்துரைக்கிறார். பாலியல் செயல்பாடு என்பது உடலோடு உறவுடைய இன்பம் மட்டுமன்று, அஃது ஒரு சிற்றின்ப உணர்வு என்றாலும், மனித வாழ்க்கை இவ்வுலகில் நிலைபேறடைவதற்கும், ஒவ்வொரு உயிர்களுக்கிடையிலும் அன்பு பரிமாறிக் கொள்ளப்படுவதற்கும் வாயிலாக அமைகின்றது. அவ்வாறில்லாது பாலியல் உணர்வு மற்ற வர்கட்குத் துன்பம் செய்யுமாயின் அது கேடு விளைவிக்கும். பிறரது ஆன்மிக நாட்டத்திற்கு ஊறு விளைவிக்குமாயின் அவ்வின்பம் கீழான இன்பம் என்று கடிந்தொதுக்கப்படும். ஆனால் மேற்சுட்டிய இருநிலைகளுமே தூய பாலியல் உணர்வைப் பற்றி நிற்பதில்லை. எந்த உணர்வால் நாம் வாழ்வு பெற்றோமோ, எந்த உணர்வால் காதல் வெளிப்படுத்தப்படுகின்றதோ, எந்த உணர்வால் மனித இனம் இன்னும் தொடர்கிறதோ, அந்த உணர்வு வெட்கப்பட வேண்டிய உணர்வன்று; பாவமான உணர்வுமன்று’’ என்று ராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார்.

‘‘உண்மையாகவே வாழ்தல்; எளிமையாக வாழ்தல்; களங்கமற்றிருத்தல்; உள்ளங்கனிந்திருத்தல்; மகிழ் வுடனிருத்தல்; கவலையையும் அபாயத்தையும் எதிர்த்து வாழ்தல்; வாழ்க்கையை நேசித்தல்; இறப்புக்கு அஞ் சாதிருத்தல்; வாழ்க்கையழகுக்காக உழைத்தல்; இறப்பின் துயர்களால் சூழப்படாதிருத்தல்; உலகந்தோன்றிய நாள் முதற்கொண்டு இவரைப் போன்று இவ்வாறு வாழ்ந் தவர்கள் இல்லை; வாழக்கற்றுத் தந்தவர்களும் இல்லை என்று காந்தியைப் புகழ்கிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். ஜவகர்லால் நேருவைப் பற்றிச் சொல்லும்போதுகூட ராதாகிருஷ்ணன் அவரை வாயாரப் புகழ்கிறார். ‘‘மானிட இனத்தை உய்விக்க வந்த மாமனிதர்’’ என்று நேருவைப் பாராட்டுகிறார். ‘‘அரசியல் கட்டுகளிலிருந்தும், பொருளாதார அடித்தளத்திலிருந்தும் சமுதாய அடக்குமுறைகளிலிருந்தும் பண்பாட்டுத் தேக்க நிலையிலிருந்தும் மனிதர்களை விடுவிப்பதற்காகத் தன் னுடைய வாழ்க்கையையும் ஆற்றலையும் செலவிட்ட பெருந்தகை’’ என்று ஜவகர்லால் நேருவை டாக்டர் ராதாகிருஷ்ணன் போற்றுகிறார். ●



# தத்துவ மேதை ராதாகிருஷ்ணன் புகழ் வாழி!


## கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி

முண்டாசு கோட்டணிந்த மலர்ந்த தோற்றம்
முத்தமிழர் நெறியேகி முகிழ்ந்த மாற்றம்
கண்டோரை கரங்கூப்பி வணங்க செய்யும்
கருணைமிகு காட்சியது குலவும் ஆற்றல்
அண்டைநாட்டார் இவர்திறத்தை அறிந்து தாமே
ஆச்சரியம் அடைந்தாரே அமைதி யுற்றே
எண்ணொடு எழுத்தோதுவர் இறைவ னென்றே
இயம்பவைத்த நெறியினுக்கே சொந்தக் காரர்.
சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் சரித மானார்
சாதாரண பள்ளியிலே ஆசான் அன்று
கர்வமிலாத் தொண்டாற்றி கடமை மீறா
கண்ணெனவே பணியதனை கருத்தாய் செய்து
தர்மநெறி அஃதிங்கே தழைத்தே ஓங்க
தக்கபடி நின்றாரே தகுதி யோடே
அற்புதமாய் குடியரசு தலைவ ராக
ஆனாரே இந்தியாவின் அதனின் கண்ணே!
அந்நியராம் தேசம்நோக்கி அவராம் செல்ல
அடைந்தாரே புகைவண்டி அதனை ஏகி
விந்தையுறு வெள்ளையனாம் விளையாட் டாக
வீண்குசும்பு உள்ளத்தால் வினாத் தொடுத்தான்
எந்தையரோ ஓர்நிறமாய் சிவப்பாய் உள்ளோம்
இந்தியர்கள் கருப்பாய் சிவப்பாய் கலந்துள தேனோ?
சிந்தித்து பதில்சொல்க எனவே என்று
சீண்டிவிட்டு வேடிக்கையாய் சிரித்தே நின்றான்.
சீர்கழுதை அதனையொத்து செகத்தில் உள்ளோம்
சீருறவே ஓர்நிறமாய் அணியாய் ஈங்கே
நீர்அன்றி இந்தியர்கள் நிறத்தில் ஏனோ
நற்கருப்பு சிவப்பென்று கலந்தே உள்ளீர்
கூறிடுவீர் எனவினவ உடனே அன்னார்
கோலமிகு குதிரையொத்த இனமாம் நாங்கள்
நீர்அன்றோ கழுதைபோல ஒருநி றத்தீர்
நாங்களோ குதிரைபோல எனவு ரைத்தார்.
செப்டம்பர் ஐந்தாம்நாள் செகமு தித்த
சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் சிறப்பாம் என்னே
அப்பப்பா... அவர் பெருமை அறைய போமோ?
ஆர்ப்பரிக்கும் அலையெழுச்சி அதனை ஒக்கும்
ஒப்பரிய பணியாற்றி உலகின் கண்ணே
உயர்ந்திட்ட ஏழைமகன் இவரே அன்றோ?
தப்பாது அவர்வழியை தழுவு வோமே
தலைநிமிர இந்தியாவை ஆக்கு வோமே!
ஆசிரியர் தினமாக அவர்பிறந்த நாளை
ஆமிங்கே நாமெடுத்தே அகமகிழ்ந் தோமே
தேசில்லா அவருழைப்பைத் தெளிவாய் கற்று
தீம்பில்லா இந்தியாவை திரட்டி நிற்போம்
வாசமலர் குழந்தையினம் உயர்வு கொள்ள
வாட்டமிலாப் பிறந்தநாளில் சபதம் ஏற்போம்
மாசில்லா மாணிக்கமாம் இராதா கிருஷ்ணன்
மாப்புகழை மொழிந்திட்டே மகிழு வோமே!

சேலம் கே.சி. மணிவண்ணன்

# இந்திய இலக்கியச் சிற்பி டாக்டர் ராதாகிருஷ்ணன்

சிறந்த பேராசிரியராகவும், சிறந்த தத்துவ மேதையாகவும் திகழ்ந்த நம் ராதாகிருஷ்ணன் சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தவர் ஆவார். அவர் எழுதிய நூல்கள் உலகப் புகழ் பெற்றவை ஆகும். ராதாகிருஷ்ணன் சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, தனது சக மாணவர்களுக்காக 13 உரைகளை நிகழ்த்தினார். 1912ஆம் ஆண்டிலேயே அவரது உரைகள் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தால் சிறிய புத்தகமாக வெளியிடப்பட்டது. அதுவே ராதாகிருஷ்ணனின் எழுத்துலகப் பிரவேசமாகும். இந்தியாவின் மகாகவியாகவும், குருதேவராகவும் போற்றப்பட்ட ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. அக்கவிதைகள் தத்துவரீதியாக எழுதப்பட்டவையாகும். டாக்டர் ராதாகிருஷ்ணன் ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளில் அடங்கியுள்ள தத்துவங்களை விளக்கி நூலாக எழுதினார். அந்நூல் 1918ஆம் ஆண்டு 'ரவீந்திரநாத் தாகூரின் தத்துவங்கள்' (The Philosophy of Rabindranath Tagore) என்ற நூலாக வெளியானது.



1920ஆம் ஆண்டு 'சமகால தத்துவங்களில் மதங்களின் ஆதிக்கம்' (The Reign of Religion in Contemporary Philosophy) என்னும் நூலை எழுதினார். இந்நூல் மேலைநாட்டுத் தத்துவங்கள் பற்றிய விமர்சன நூலாகும். டாக்டர் ராதாகிருஷ்ணன் எழுதிய நூல்களுள் சிறந்த ஒன்றாகப் போற்றப்படுவது, 'இந்தியத் தத்துவம்' (Indian Philosophy) என்னும் நூலாகும். இந்நூலின் முதல் பகுதி 1924ஆம் ஆண்டு வெளியானது. இந்நூல் இந்துமத வேதம், பகவத்கீதை உள்ளிட்ட உபநிடதங்களின் ஆத்திகத் தத்துவம், சமண மதத்தின் த்வைத தத்துவம், பிற்கால பௌத்த மதத்தின் தத்துவங்கள் போன்றவை உள்ளடக்கியதாகும்.

அடுத்து இந்தியத் தத்துவம் நூலின் இரண்டாம் பகுதி 1927ஆம் ஆண்டு வெளியானது. இந்நூலில் அறுவகை பிரமாணங்களாகக் கூறப்படும் நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாம்ஸம், வேதாந்தம் ஆகியவற்றின் விளக்கங்கள், சைவம், வைணவம், சாக்தம் ஆகியவற்றின் தத்துவ விளக்கங்களும் அடங்கியுள்ளன. ''இந்தியத் தத்துவம்'' நூலின் இருபகுதிகளும் ராதாகிருஷ்ணனின் ஆன்மிக அறிவை இன்றளவும் உலகிற்குப் பறைசாற்றும் வண்ணம் உள்ளன.

டாக்டர் ராதாகிருஷ்ணனின் நூல்களுள் மிகச் சிறந்த நூலாகப் போற்றப்படுவது ''இந்துக்களின் வாழ்க்கை தர்மம்'' என்னும் நூலாகும். இந்நூல் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்து மதத்தைப் பற்றிய உண்மைகளையும், தத்துவ விளக்கங்களையும் இந்நூலில் கூறியுள்ளார் அவர். அடுத்து, ராதாகிருஷ்ணன் இங்கிலாந்தின் மான்செஸ்டர் கல்லூரியிலேயே 1929ஆம் ஆண்டு தான் நிகழ்த்திய 'ஹிப்பாட சொற்பொழிவுகள்'



**வீ**டுபேற்றை அடைய வேண்டுமாயின் தாழ்நிலையிலுள்ள உயிரை, உயர்நிலையிலுள்ள அளப்பறிய ஆற்றல் அடக்குதல் வேண்டும். இவ்வாறு உயிர் தன்னை அழுத்துகின்ற சுமைகளிலிருந்து விடுதலை பெறுமாயின் அது மேலுயர்ந்து சென்று வானுலகில் வீடுபேறு பெற்றோர் வாழுகின்ற உயருலகை எட்டும். மனிதனின் ஆழ்மனதில் ஏற்படுகின்ற அடிப்படை மாற்றமே விடுதலைக்குரிய வழியாக அமைகின்றது. மனிதனைத் திருத்தி புதிய கர்மங்கள் உருவாவதைத் தடுப்பதற்கு ஒழுக்கத்தை மேம்படுத்துவதே மிக முக்கியமானதாகும். ஞானம், அறிவு, ஒழுக்கம் என்ற மூன்று உயர்நெறிகளின் (triratha) வழியாக நிர்வாணம் எனப்படும் வீடுபேற்றை அடையலாம்.

எனும் உரைகளின் கருத்துக்களைத் தொகுத்து ''வாழ்க்கையின் இலட்சிய நோக்கம்'' (An Idealist View of Life) என்னும் நூலாக வெளியிட்டார். 1932ஆம் ஆண்டு வெளியான இந்நூல், அவருக்கு சர்வதேசப் புகழை ஈட்டித் தந்தது. இந்துக்களின் மதக் கொள்கைகளையும் தனது சிந்தனைத் திறனையும் கலந்து யாவரும் புரிந்து கொள்ளும்படி இந்நூலில் கூறியுள்ளார் அவர்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் தத்துவ ரீதியாக மேலைநாட்டுத் தத்துவஞானிகள் பலரின் கருத்துக்களை மிகவும் ஆராய்ந்து மேலை நாடுகளின் பல்வேறு தத்துவ இதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார். மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களான 'லெய்ப்னிஸ், ஜேமஸ்வார்டு, வில்லியம்ஜேம்ஸ், ருடால்ஃப்யூக்கன், ஹாஸ்டிங்ஸ், பெர்ட்ரன்ட் ரஸ்ஸல்' உள்ளிட்ட பலரின் கருத்துக்களை ஆய்ந்துள்ளார் அவர். டாக்டர் ராதாகிருஷ்ணனின் தத்துவ ஆராய்ச்சி முடிபுகளைக் கண்ட அமெரிக்க அறிஞர்கள், அவரை அமெரிக்காவின் தலைசிறந்த தத்துவஞானியான ''பொஸாங்கே'' (Bosanquet) என்பவரோடு ஒப்பிட்டுக் கூறி சிறப்பித்துள்ளனர். ராதாகிருஷ்ணனின் தத்துவம் பற்றிய நூல்கள் இன்றளவும் இந்தியா மட்டுமின்றி, இங்கிலாந்து, அமெரிக்க நாட்டு பல்கலைக்கழகங்களில் பேருண்மை (Metaphysics) பற்றிய பாடமாக, பல மாணவர்களால் கற்கப்படுகின்றன. ராதாகிருஷ்ணனின் தத்துவ அறிவிற்கு இது ஒரு சான்றாகும்.

1933ஆம் ஆண்டு ''மதங்களில் கிழக்கும் மேற்கும்'' (East and West in Religion) என்னும் தலைப்பில் ராதாகிருஷ்ணனின் நூல் வெளியானது. 1936ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன் எழுதிய ''இந்துத்துவத்தின் இதயம்'' (The Heart of Hinduism) என்னும் நூல் வெளியானது. இங்கிலாந்தின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் ஸ்பால்டிங் பேராசிரியராக ராதாகிருஷ்ணன் நிகழ்த்திய உரைகள் 'கீழைநாட்டு மதங்களும் மேலைநாட்டு எண்ணங்களும்' (Eastern Religion and Western Thoughts) என்னும் நூலாகத் தொகுக்கப்பட்டு, 1939ஆம் ஆண்டு வெளியானது. இந்நூலில் மேலைநாட்டுக் கணிதமேதையாகவும் தத்துவஞானியாகவும் திகழ்ந்த ''பிதாகரஸ்'', ''பிளேட்டோ'' போன்றவர்களின் காலம் முதல் இன்றுவரை நமது உபநிடதங்கள் செலுத்திவரும் தொடர்ந்த ஆதிக்கம் பற்றி மிக அழகாகவும் தெளிவாகவும் அவர் விளக்கியுள்ளார். பிரிட்டிஷ் அகாதமியில் ''உலகமேதைகள்'' என்னும் தலைப்பில் ராதாகிருஷ்ணன் அவர்கள் பல உலக ஞானிகள் பற்றி உரையாற்றினார். அவ்வுரையில் ''கௌதம புத்தர்'' பற்றி அவர் ஆற்றிய உரை நூலாக வெளியிடப்பட்டது. புத்த மதம் மற்றும் இந்து மதம் இந்நூலினை சிறப்பாகப் போற்றிப் புகழ்ந்தன.

1939ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜியின் எழுபதாவது ஆண்டு நிறைவினையொட்டி, காந்திஜிக்கு அன்பளிப்பாக அளிப்பதற்காக ஒரு நினைவு மலரை உருவாக்கினார் ராதாகிருஷ்ணன். உலகின் பன்னாட்டு அறிஞர்கள் கூறிய நம் தேசத்தந்தை மகாத்மா காந்திஜியைப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு அம்மலரில் இடம்பெற்றிருந்தன. அந்நூலுக்கு ''மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றிய கட்டுரைகளும் சிந்தனைகளும்'' என்று பெயரிட்டார் ராதாகிருஷ்ணன். இந்நூலுக்கு தானே, சிறப்பான அணிந்துரையையும் எழுதி, நினைவு மலரை வெளியிட்டார் அவர்.

காந்திஜியைப் பற்றிய ராதாகிருஷ்ணன் தொகுத்தளித்த நினைவு மலரை உலகின் பல்வேறு அறிஞர்களும் பத்திரிகைகளும் புகழ்ந்தன. இங்கிலாந்தின் ''டைம்ஸ் நாளிதழ்'' அம்மலரைப் பற்றி, ''டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசியல்வாதியல்ல; ஆனால், அறிவியலிலும் மேதைமையிலும் மிகச் சிறந்தவர். அவரைப் போன்ற மேதை, காந்திஜிக்கு சீடராக அமைந்திருப்பதே காந்திஜியின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றும்'' என்று மதிப்புரை அளித்துள்ளது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் 1942ஆம் ஆண்டு கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது, ''கமலா சொற்பொழிவுகள்'' என்னும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அவ்வுரைகளைத் தொகுத்து 1947ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார். ராதாகிருஷ்ணன் சீன நாட்டிற்குப் பயணம் மேற்காண்டிருந்த வேளையில் இந்தியா மற்றும் சீனா பற்றிய உரைகளை நிகழ்த்தினார். இவ்வுரைகள் தொகுக்கப்பட்டு 1944ஆம் ஆண்டு ''இந்தியாவும் சீனாவும்'' (India and China) என்ற பெயரில் நூலாக வெளியானது. இந்நூல் இந்திய நாட்டிற்கே பெருமை தேடித்தந்தது. 1948ஆம் ஆண்டு ''கல்கி அல்லது வருங்காலத் தலைமுறை'' என்னும் நூலை அவர் எழுதினார். 1948ஆம் ஆண்டு ராதாகிருஷ்ணன், பகவத்கீதையின் ஆங்கில விளக்கவுரை நூலை எழுதி முடித்தார். தனது நூலை தான் மிகவும் மதிக்கும் மகாத்மா

# தருமபுரியில் காமராசர் பெயரில் முதல்வன் விருது

**த**ருமபுரி அன்னை கஸ்தூரிபா சேவா சங்கம் மற்றும் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பாக தருமபுரி மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாநில, மாவட்ட அளவில் 350 மாணவ-மாணவிகளுக்கு காமராசர் பெயரில் முதல்வன் விருது வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சிக்கு அன்னை கஸ்தூரிபா சேவா சங்கத் தலைவர் செந்தில் சி.சக்திவேல் தலைமை தாங்கினார். கவியரசு கண்ணதாசன் மகன் அண்ணாதுரை கண்ணதாசன், நடிகர் கௌதமன் முன்னிலை வகித்து, மாணவ-மாணவிகளுக்கு முதல்வன் விருது வழங்கினர். முன்னதாக காமராசர் படத்திற்கு மாலை அணிவித்து புகழுரை செய்தார் எஸ்.சித்ரவேல் நாடார். கண்ணதாசன் படத்திற்கு மாலை அணிவித்து புகழுரை செய்தார் வெற்றிக்கனி மா.முருகப்பன். தமிழக தனியார் பள்ளிகளின் செயலாளர் டி.சி.இளங்கோவன் மற்றும் பலர் சிறப்புரை ஆற்றினார்கள். பொதுச் செயலாளர் ப்பி.சுதாகரன் வரவேற்றார். அன்னை கஸ்தூரிபா சேவா சங்க நிறுவனர் தகடூர் இரா.வேணுகோபால் நன்றி கூறினார்.



**தருமபுரியில் காமராசரின் முதல்வன் விருது வழங்கும் விழா நடைபெற்றது. அதில் ஒரே பள்ளியில் பயின்ற இரட்டைக் குழந்தைகளான இராமன், இலட்சுமணன் ஆகிய இருவரும் 10-ம் வகுப்பில் முதல் மதிப்பெண் (485) பெற்றார்கள். இவர்களை அனைவரும் பாராட்டி மகிழ்ந்தார்கள்.**

*காந்திஜியின் கைகளில் கொடுத்து ஆசிவாங்க நினைத்தார் ராதாகிருஷ்ணன். அதனையொட்டி அவர் காந்திஜியை சந்தித்தார். இச்சந்திப்பு 1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் நடைபெற்றது.*

*காந்திஜியும் ராதாகிருஷ்ணனும் இந்துமதத் தத்துவம் பற்றிய பேச்சுவார்த்தையில் இறங்கினர். ராதாகிருஷ்ணனின் தத்துவ மேதைமையைக் கண்ட காந்திஜி, ''ராதாகிருஷ்ணன்! நான் உங்கள் முன்பு அர்ஜுனனாக மாற விரும்புகிறேன். எனது சந்தேகங்களுக்கு நீங்கள் விளக்கமான பதில் அளிக்க வேண்டும். இப்போது என்னுடைய கிருஷ்ணன் நீங்கள்தான்!'' என்று கூறி சிரித்தார். அதனைக்கேட்ட ராதாகிருஷ்ணனும் சிரித்தார். மகாத்மா காந்திஜி, தன்னுடைய சந்தேகங்களுக்கு பதிலளிக்கத் தகுந்த கண்ணன் என்று ராதாகிருஷ்ணனைப் பாராட்டிய நிகழ்ச்சியிலிருந்து அவருடைய அறிவை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.*

*1949ஆம் ஆண்டு ''இந்திய மாமனிதர்கள்''* (Great Indians) *என்னும் நூலை அவர் எழுதினார். ராதாகிருஷ்ணன் எழுதிய ''தம்மபதம்''* (The Dhamma Pada) *என்னும் நூல் 1950ஆம் ஆண்டு வெளியானது. இந்நூல் உலகப் புகழ்பெற்றதாகும். 1967ஆம் ஆண்டு ''மாறும் உலகில் மதம்''* (Religion in a Changing World) *என்னும் நூலை அவர் எழுதினார். ராதாகிருஷ்ணன் தொகுத்தளித்த நூல்கள் பல உள்ளன. ''பிரம்மசூத்திரம்'', ''சமகால இந்தியத் தத்துவம்'', ''தத்துவத்தின் வரலாறு'' போன்ற நூல்கள் அவற்றிற்கு உதாரணமாகும். இவைதவிர அவரது ஏராளமான கட்டுரைகள், சொற்பொழிவுகள் பல்வேறு இந்திய வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அதிக அளவில் ஆன்மிக, தத்துவ நூல்கள் எழுதியிருந்தாலும், இந்திய இலக்கியம் குறித்த பரவலான அறிவும் அவருக்கு இருந்தது.*

*நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூரின் எழுபதாவது பிறந்த நாள் விழா 1931ஆம் ஆண்டு நடைபெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்ட ராதாகிருஷ்ணன், இலக்கியத்தின் பெருமை பற்றி எடுத்துரைத்தார். அப்போது அவர், ''இந்திய இலக்கியங்கள் மன்னர்கள் மற்றும் சாம்ராஜ்யங்களைத் தாண்டி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ரோமப் பேரரசு அழிந்துவிட்டது; ஆனால், அதன் இலக்கியங்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஹோமரின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டது; ஆனால், அவரது பாடல்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கவி காளிதாசர் மறைந்துவிட்டார்; ஆனால், அவரது காவியங்கள் மனித உறவுகள் பற்றிய கண்ணீரை நம்மில் வரவழைத்துக் கொண்டிருக்கின்றன. ஷேக்ஸ்பியரின் கவிதைகளால் ஆங்கிலமொழி இன்றும் செழுமையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதுபோல மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளும், இசையும் இந்திய மக்களை வருங்காலத்திலும் மகிழ்வித்துக் கொண்டிருக்கும்!'' என்று கூறினார்.*

*அவரது அளப்பறிய எழுத்தாற்றலால் 1964ஆம் ஆண்டு சாகித்ய அகாடமியின் தலைமைப் பொறுப்பு டாக்டர் ராதாகிருஷ்ணனைத் தேடிவந்தது.* ●

Recognising best practices in delivering quality education in India

# BHARATH UNIVERSITY AWARDED AS




## The Best Multi Stream University in India

By

ASSOCHAM INDIA

In Association

Government of India PLANNING COMMISSION

Government of India MINISTRY OF HUMAN RESOURCE DEVELOPMENT

ASSOCIATION OF INDIAN UNIVERSITIES

NATIONAL SKILL DEVELOPMENT CORPORATION

### ADVANTAGE

**A leading Educational Group In India:** The Bharath Educational Group, through its various Schools, Institutions and Universities, provides world class education to over 20,000 students from pre-school to Ph.D, across Tamilnadu.

**Focus on Research:** First University to launch research integrated B.Tech Course with state-of-the-art Research Park. 32 Research Centers & 7 Center of Excellence block covering 2 Lakhs Sq.ft. With a vision to create and maintain global standards in education, there is a sustained focus on Research and Training in various disciplines including Nanotechnology, Biotechnology and Space Technology.

**Top Ranked:** The Bharath Group Institutions, including Bharath University, School of Engineering, School of Health Sciences, School of Business School, School of Architecture, have been recognized for their global excellence, through innumerable countrywide surveys, which have also ranked and accredited them.

**Govt Recognition:** For their commitment to maintaining high standards of education, Bharath University has been recognized by UGC.

**Cultural Diversity:** Students from 23 different states of India and different countries come together at the Bharath Institutions to build and sustain responsible leadership.

**World Class Infrastructure:** Situated at prime locations, the Bharath Institutions have arguably the most hi-tech campuses with world class facilities for high end research.

**Pride of placement:** 30 years of education excellence has seen Bharath University place well over 35,000 students at globally reputed firms across the world.

**Asia's largest Scholarship Programme:** Over 1000 students have benefited from Bharath University's scholarships schemes, which in some instances have extended up to 100% grants. The University also offers smart and convenient education loan facilities.

CAMPUSES: CHENNAI & PUDUCHERRY : ENGINEERING | MEDICINE & HEALTH SCIENCES | MANAGEMENT | HUMANITIES & SCIENCE

## India's first University to launch Research Integrated B.Tech Course

The Research Integrated B.Tech aims to develop the spirit of innovation in the future engineers of India.

All students who join the B.Tech Program at **Bharath University** shall be mentored towards publishing their ideas at relevant forums around the world. This enables the engineers of tomorrow to not only understand their course but contribute to it. Best in class infrastructure, Knowledgeable Faculty and Industry Friendly Curriculum are sure to act as your pillars for success.

For more details, please visit our website : www.bharathuniv.ac.in


Abirami mega mall
1st Mall of its kind in South India!
SNOW WORLD
MEGA ABIRAMI SNOW WORLD
SWITZERLAND OF CHENNAI
Memorable visit to Snow Falling Switzerland
KIDS WORLD
ABIRAMI KIDS WORLD
Games in African Jungle
KISSING CARS
Kissing cars
Ride in a Space Ship
FISH WORLD
Under water experience
ENTERTAINMENT GALORE !
We bring you the latest movies so that you have both, class and comfort at affordable rates.
A Visual Treat foryour eyes at our 4 theatres for you to relax and enjoy.
Abirami 7 Star
The first 7 Star theatre
Spanish Opera House Theme and Massage chairs - for the first time !
• Air conditioned lobby, auditorium & wash room • Cutting edge silver screen for hi-definition • Waiter on call
• Pick up & drop facility in limousine • Pre paid auto service • Lunch, High Tea, Dinner served in platinum class
• Booking of tickets, snacks, etc online
BALA ABIRAMI
Swarna Sakthi Abirami
FIRST FIVE STAR THEATRE A/C DTS
EGYPTIAN THEME THEATRE
• 100% reclineable seats • Waiter-on-call: For food & beverages
• Centrally Airconditioned Theatres, lobby, Wash Rooms & booking counter
Shree Annai Abirami
DTS
FIRST FIVE STAR THEATRE A/C
CHINESE THEME THEATRE
• Lovebug seats - for the first time • Waiter-on-call: For food & beverages • Centrally Airconditioned Theatres, lobby, Wash Rooms & booking counter
WITH ABIRAMI 'SWARNA MEMBERSHIP'
YOU GET EXCITING OFFERS NOT ONLY AT THE AMUSEMENT CENTRES BUT EVEN AT OUR MALL. Call : 9940066177.
Also get "Fun Tickets" as a bundle offer with food coupons
at Snow World, Kids World, Kissing Cars, Fish World, Food Court & Cinema.
Dial a ticket - home delivery to anywhere in the City : 2642 4477 / 2643 1022
Online Booking : www.abirami.in
Home Delivery : 26424477, 26431022. Theme Party Bookings : 9940066177. 152, PURASAWALKAM HIGH ROAD.
Pick up & drop facility in limousine - Ph : 6455 3040 / 2625 2525
VALET PARKING AVAILABLE

"மற்றுமோர் தெய்வ முண்டே?
மதியிலா மானிடர்காள்
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர்!
அற்றமே லொன்ற றியீர்
அவனல்லால் தெய்வ மில்லை;
கற்றினம் மேய்த்த வெந்தை
கழலினை பணிமி னீரே!

*– தொண்டரடிப் பொடியாழ்வார்*



**நயவுரை நம்பி**

**டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்**

**நிறுவனச் செயலர்,**

**ஆழ்வார்கள் ஆய்வு மையம்,**



இன் சுவையுடன்
அறுசுவை ஆனந்தம்

• இனிப்பு வகைகள் • கார வகைகள்
• தென் இந்திய, வட இந்திய மற்றும் சைனீஸ் உணவு வகைகள்
• சாட் வகைகள் • மில்க் ஷேக் • ஐஸ் கிரீம் • ஜூஸ் வகைகள்



இந்திய இனிப்புகளின் தனிச்சுவை

அடையார் ஆனந்த பவன்
ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

AAB

உயர்தர இந்திய சைவ உணவகம்

ஏ2பி
வெஜ் ரெஸ்டாரண்ட்

H.O : Muthulakshmi Bhavan, No. 9, M.G. Road
Sastri Nagar, Adyar, Chennai - 600 020 INDIA
Tel : 91-44-4201 9988, 2345 3050 Fax : 91-44-2446 0607
Email : info@aabsweets.com Web : www.aabsweets.com

சென்னை | காஞ்சிபுரம் | கோயமுத்தூர் | மதுரை | ஈரோடு | திருச்சி | சேலம் | கரூர் | ஓசூர் | திருப்பூர் | கடலூர் | தர்மபுரி | பெங்களூர் | பாண்டிச்சேரி | புது டில்லி



Unfathomable Elegance.
Timeless Beauty
Enchanting ethnic charm etched in a stupendous array of bewitching diamond, gold and platinum jewellery.
glassnostindia.com
T.NAGAR LKS™
GOLDHOUSE PVT. LTD.
SINCE 1925
# 60, Usman Rd, T.Nagar, Chennai - 17 Ph : 2434 4444 | 2nd Avenue, Anna Nagar, Chennai - 40 Ph : 2620 4444

# வாழ்த்துக்கள்!




V.G.P. நிறுவனங்களின் தலைவர்

**செவாலியர்**

**டாக்டர். V.G. சந்தோசம்**

C.R.I. PUMPS

*Pumping Trust World Wide*



# Kovai Distributers

## *Hebron Entreprises*

30E, Opp Church
Dr. Nagappa Road, Coimbatore - 18
9894677000



# சாய்ராம் கல்விக் குழுமம்

**இன்றைய மாணவ சமுதாயத்தை... அவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் நாளைய பல்துறை வித்தகர்களாகவும், வல்லுனர்களாகவும் மாற்றுவதே எங்கள் முதல் நோக்கம்...**

**ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairam.edu.in**

**ஸ்ரீ சாய் ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairamit.edu.in**

**ஸ்ரீ சாய் ராம் இன்ஸ்டிடியூட் மேனேஜ்மென்ட் ஸ்டடீஸ்**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sims.sairam.edu.in**

**சீரடி சாய் பொறியியல் கல்லூரி**
ஆனைக்கல், பெங்களூர், கர்நாடக மாநிலம். **www.ssec.ac.in**

**ஸ்ரீ சாய் ராம் சித்த மருத்துவக் கல்லூரி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairamsiddha.edu.in**

**ஸ்ரீ சாய் ராம் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairamayur.edu.in**

**ஸ்ரீ சாய் ராம் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairamhomoeo.edu.in**

**ஸ்ரீ சாய் ராம் பாலிடெக்னிக் கல்லூரி**
மேற்கு தாம்பரம், சென்னை - 44. **www.sairampoly.edu.in**

**சாய் ஜோதி பாலிடெக்னிக் கல்லூரி,**
எலியார்பத்தி, மதுரை-22. **www.saijothipoly.edu.in**

**மருத்துவக் கல்லூரி**

**ஸ்ரீ பத்மாவதி மருத்துவக் கல்லூரி (MBBS)**
ரேணிகுண்டா, புதிய விமானநிலைய ரோடு, திருப்பதி, A.P.
வரும் 2014 – 15 கல்வி ஆண்டு முதல் ஆரம்பம்.

**சட்டக் கல்லூரி**

**சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் லீகல் ஸ்டடீஸ்**
சாய் லியோ நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 44
B.A., B.L. (HONS) 5 Years integrated Excellence Course
வரும் 2014 – 15 கல்வி ஆண்டு முதல் ஆரம்பம்.

**தரமான கல்வியை தருவதன் மூலம் வளமான பாரதத்தை உருவாக்குவோம்**

visit us @
www.sairamgroup.in

Sairam
INSTITUTIONS

SRI SAI RAM ENGINEERING COLLEGE
TRUTH LOVE PEACE
CHENNAI

ஸ்ரீ சாய்ராம்
இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி
பொறியியல் கல்லூரி
NBA Accredited & ISO Certified Institution
& கல்விக் குழுமம்

நிர்வாக அலுவலகம் :
'**சாய் பவன்**', 31, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.
Tel : 044 - **4226 7777** Fax : 044 - 4226 7779
e-mail : sairam@sairamgroup.in





ஒரு கல்விச் சாலையை உருவாக்குவது
என்பது, ஆயிரம் சிறைச்சாலைகளை
மூடுவதற்கு சமம்.
- சுவாமி விவேகானந்தர்

MJF.அரிமா. **லியோ முத்து**,
சேர்மன்

# சாமானியரை வீட்டுமனைக்கு சொந்தக்காரர்களுக்கும் திட்டங்கள்!

**₹.2000/-க்கு வீட்டுமனை**
செய்யாறு தென்மணப்பாக்கம்
**கோல்டன் டெம்பிள் சிட்டி**
₹.2000/- X 60 மாதங்கள்

**₹.3000/-க்கு வீட்டுமனை**
வாலாஜாபாத் அருகில்
**சுகி பவ சிட்டி**
₹.3000/- X 60 மாதங்கள்

**₹.5000/-க்கு வீட்டுமனை**
காஞ்சிபுரம் ஆட்சியாளர் அலுவலகத்தில் இருந்து 10 நிமிட தூரத்தில்
**பாலாறு சிட்டி**
₹.5000/- X 36 மாதங்கள்

**₹.10,000/-க்கு வீட்டுமனை**
ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் அருகில்
**Swarnashree Enclave**
₹.10,000/- X 36 மாதங்கள்

**திட்ட சிறப்பம்சங்கள்:**

● முன் பணம் தேவையில்லை ● பிரதிமாதம் பிரதி 100 பேரில் ஒருவருக்கு வீட்டுமனை FREE, ● FREE மனை பெற்றவர்கள் மேற்கொண்டு பணம் செலுத்த தேவையில்லை ● வாடிக்கையாளர்களே FREE மனை பெறுபவர்களை தேர்ந்தெடுக்கும் ஒளிவு மறைவற்ற நேர்மையான திட்டம் ● கமிஷன் ஏஜெண்டுகள், புரோக்கர்கள் இல்லாத ஒரே நிறவனம் ● இத்திட்டத்தில் சேர விரும்புவோர் காசோலை / கிரெடிட் கார்டு / புகைப்படம் உள்ள 2 அடையாள அட்டையுடன் நேரில் வரவும்.



**KANCHEEPURAM S.M.PROPERTIES**
(A unit of Kancheepuram S.M.Silks)
19/9, Mahalakshmi Nagar, T.Nagar, Chennai - 17.

**9380777793, 9380777794, 9380777796, 9344058896, 9344030547**



Today's Children are Tomorrow's Leaders
Let Every Child say, "Yes, I Can"
SKI
SRI KRISH
INTERNATIONAL SCHOOL(CBSE)
Creating Wisdom and Knowledge Through Shared Learning
| K.G Activity | Robotic | KG Play Ground | Language Room | Music Class |
| Science Lab | Dance | Karate | Math Lab | Yoga |
1/191 A, Rajiv Gandhi Nagar, Kundrathur Main Road, Kovur, Chennai - 600128
Ph: 044 65666673 / 74 Mob : 90420 08833 / 72000 05832 / 72000 05967
skischoolcbse@gmail.com www.srikrishinternationalschool.com




# சரவணா செல்வரத்தினம்
## ஜுவல்லரி

**SARAVANA SELVARATHNAM RETAIL Pvt. Ltd.**

14. ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 17. Tel : 044 24347710 / 24355770
130, உஸ்மான் ரோடு (பனகல் பார்க் எதிரில்) தி.நகர், சென்னை 17. Tel : 044- 2814 4777

**JEWELLERY**

உலகிலேயே
மிக குறைந்த
சேதாரம் என்று
சவால் விடுகிறோம்

**0% to 3%**
சேதாரம் / WASTAGE

**NO MAKING CHARGES**
செய்கூலி இல்லை

BIS
916 Hallmark Jewellery

## Lowest Price! Latest Designs! Largest Collections!

**TEXTILES**

- Silk Sarees
- Sarees
- Fancy Sarees
- Ladies Readymades
- Blouse Materials
- Chudi Materials
- Cell Phones
- Toys
- Provisions
- Cosmetics
- Fancy Jewellery
- Gents Readymades
- Suiting & Shirting
- Dhothies
- Watches
- Games items
- Fruits & Vegetables

**VESSELS**

Al type Home Appliances
Marriage Function
Vessels & Electronic items
Toys, Games
Sports items
Furniture varieties
**Unbelievable Price!!!**

33, Natesan Street,
T.Nagar, Chennai - 17.
Tel : 044 -2433 8777

**SWEETS**

Taste and Delicious
Indian Sweets & Snacks
**Party orders are undertaken**
Branches
**AVADI MYLAI T.NAGAR**

**WATER**

100% Purified, Ooziness,
U.V. treated Hygienic
Packaged Drinking Water

20 ltr. Rs. 25.00 Tel : 044-6541 9777

EXCHANGE YOUR OLD 916 GOLD JEWELLERY TO NEW BIS HALLMARK JEWELLERY WITHOUT WASTAGE IN WEIGHT

**MONTHLY GOLD SAVING SCHEME** (CHIT) RS. 50/- TO RS. 5000/-
SCHEME BENEFICIARY :- 12.5% Interest for your money
(2 installments extra) at the time of completion.

# 75, Usman Road, T.Nagar, Chennai - 17 **044-2433 5777** • #39, Ranganathan St., T.Nagar, Chennai - 17 **044 -2433 8777** • #132, Usman Road, T.Nagar, Chennai - 17 **044 -2814 0323**

www.saravanaselvarathnam.co.in



# KCT - The Preferred choice of industry for recruitment

Kumaraguru College of Technology has been in the forefront of providing Quality technical education for over 25 years. A conducive academic atmosphere with experienced and inspiring faculty, excellent infrastructure and collaborations with 7 foreign universities makes learning a joyful experience. KCT STPI - IT PARK - is functioning under the STPI umbrella with 2,00,000 sq.ft. of space and several companies such as Cognizant, Spheris, Ford & Firstsource. The high level of placements by Multinational and National Companies for placement is a testimony to the quality of education which makes students industry ready.

**COURSES**

**B.E. / B.Tech**

- Civil Engineering
- Mechanical Engineering
- Mechatronics Engineering
- Automobile Engineering
- Electrical & Electronics Engineering
- Electronics & Communication Engg.
- Computer Science & Engineering
- Electronics & Instrumentation Engg.
- Aeronautical Engineering
- Information Technology
- Textile Technology
- Fashion Technology
- Bio-Technology

**MCA**
**MBA**

**M.E. / M.Tech**

- Structural Engineering
- Industrial Engineering
- Energy Engineering
- CAD/CAM Engg
- Power Electronics & Drives
- Communication Systems
- Applied Electronics
- Computer Science & Engineering
- Textile Technology
- Apparel Technology & Management
- Bio-Technology
- Embedded Systems

**Ph.D Programmes**

- Civil Engineering
- Mechanical Engineering
- Mechatronics Engineering
- Computer Science & Engineering
- Textile Technology
- Bio-Technology
- Chemistry
- Business Management



## KUMARAGURU COLLEGE OF TECHNOLOGY

**COIMBATORE - 641 049**

ISO 9001:2008 Certified

An Autonomous Institution affiliated to Anna University of Technology, Coimbatore, Accredited by NAAC and NBA

**Ph : +91-422 2669401-404 E-mail : info@kct.ac.in Web : www.kct.ac.in**

# SRIMATHA CANCER CARE

(Secular Charitable Institution in support of indigent terminally ill and Renal Failure patients)

**Admn. Office No. 466, 3rd Avenue, Indira Nagar, Chennai 600 020.**

Tel: 24912308, 24413233 | Email: dvijayasree.smcc@rediffmail.com

www.srimathacancercare.com

2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஸ்ரீ மாதா கேன்சர் கேர் தொண்டு நிறுவனம் என்கிற எங்களது காப்பகம் நோய் முற்றிய ஏழை புற்றுநோயாளிகளின் புகலிடமாக இருந்து வருகிறது. ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையுடன் நாங்கள் செய்து கொண்டிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அங்கிருந்தும், அடையார் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் வரும் நோய் முற்றிய ஏழை புற்றுநோயாளிகளுக்கு தங்க இடம், உணவு மற்றும் மருத்துவ வசதிகளை முற்றிலும் இலவசமாக கொடுத்து வருகிறோம். இவர்களை கவனித்துக்கொள்வதோடு கூடவே நோயாளியின் உறவினர் ஒருவரையும் அவருடன் இருக்க அனுமதிக்கிறோம். இந்த சிறிய அளவிலான சேவை மையம் அடையாறு இந்திரா நகரில் நடைபெற்று வருகிறது.


## புகைப்பழக்கம் குடும்ப நலத்திற்கு கேடு !

**இந்த அறிவுரையைப் படிங்க...**
**உங்க புகைப்பழக்கத்தை முழுசா விட்டுடுங்க...**

**புகையிலை ஒரு உயிர்க்கொல்லி ! தினமும் 2500 பேர் புகையிலை சம்பந்தப்பட்ட நோயினால் உயிரிழக்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

**புகைப்பழக்கம் உங்கள் உடல் நலத்தை மட்டுமல்ல, பிறக்கப்போகும் குழந்தையின் உடல்நலத்தையும், உடனிருப்போர் நலத்தையும் பாதிக்கிறது.**

**புற்றுநோய் ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆனால் 90% நுரையீரல், வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் ஏற்படும் புற்றுநோய்கள் புகையிலை பயன்படுத்துபவருக்கு மட்டுமே ஏற்படுகின்றன. இப்பழக்கத்தை கைவிடுவதால் மட்டுமே இந்நோய்களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.**



### வாய்புற்று நோயின் அறிகுறிகள்...

- வாயில் ஏற்படும் ஆறாத புண் சிவப்பு அல்லது வெள்ளைப் படிவம்.
- இருமும்போது இரத்தம் வருதல்
- குரலில் திடீரென்று கரகரப்பு ( அல்லது ) மாற்றம் ஏற்படுதல்.
- உண்ணுவதில் / விழுங்குவதில் சிரமம் ஏற்படுதல்
- வாய் திறக்க முடியாத நிலை
- வாயில் ஏற்படும் கட்டிகள்

**மக்கள் நலன் கருதி, ஒரு விழிப்புணர்வு செய்தி மடல்**



Author & Managing Trustee
**V.KRISHNAMOORTHY**
94440 01065 / 95000 01065

### வாய்புற்று நோயை தடுக்கும் வழிமுறைகள்

எந்த வடிவிலும் புகையிலையை உபயோகிப்பதை தவிர்த்திடுங்கள்.
மதுப்பழக்கத்தை கைவிடுங்கள்.
உங்களின் வாயை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

**இறைவன் மனிதப்பிறவிக்கு நன்கு சிந்தித்து செயல்பட அறிவை கொடுத்திருக்கிறான். நல்லது எது, தீயது எது என்று பகுத்தறிந்து செயல்படுவோம் !நலமோடு வாழ்வோம் !! மகிழ்ச்சி பெறுவோம் !!!**



Founder & Executive Trustee
**D.VIJAYASREE**
91762 08165

தங்களது நன்கொடைகளை **Sri Matha Cancer Care** என்ற பெயரில் காசோலையாகவோ வரையோலையாகவோ **No. 466, 3rd Avenue, Indira Nagar, Chennai - 600 020.** என்ற முகவரிக்கு அனுப்பலாம். தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80 (G) பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

Regd. Office: "Gurukripa" 3, Sastha Avenue, Thirumazhisai Street, Sundaram Colony, East Tambaram, Chennai 59.



DR. KISHORE KUMAR
corespondent

St. John's Public School
Learning for Life

ST. JOHNS PUBLIC SCHOOL
Medavakkam, Chennai - 600100,
Ph:65486600, 65484433



# இந்திய முன்னேற்றக் கழகம்

மனிதன் பயன்பட வேண்டும்...

அறக்கட்டளை



உயர்வான எண்ணம்
உண்மையான உழைப்பு
மகிழ்வான வாழ்க்கை
வெற்றி பெறுவோம்



## இந்திய முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்

- ஒரு குடும்பத்திற்க்கு ஒரு வீடு மட்டும் சட்டம்.
- தங்க கட்டுபாடு (பெண்களுக்கு 10 சவரன் மட்டும் வரையறுத்தல்) -எளிய திருமணச் சட்டம்.
- IAS, IPS படித்தவர்களுக்கு சட்டமன்ற, நாடாளுமன்றத்தில் 20% சதவீதம் இடமளிக்கச் சட்டம், தேர்தல் மற்றும் வேட்பாளர்களின் செலவுகளில் சிக்கனம்.
- நதிநீர் இணைப்பு உடனடி தேவை. இயற்கை வளங்களில் சுரண்டல் கூடாது.
- விவசாயம், கைத்தறி மற்றும் கைத்தொழிலின் அனைத்து உற்பத்தி பொருட்களையும் மதிப்பீடு செய்து 50% லாப விலைக்கு அரசே வாங்க வேண்டும். வட்டியில்லா கடனுதவியும் வழங்க வேண்டும்.
- மருத்துவப்படிப்பிற்க்கு - வட்டியில்லா முழு கடனுதவி - No Capitation Fee தரக்கட்டுப்பாடும், தேர்வும் அரசின் கட்டுப்பாட்டிலும், நிர்வாக ஒதுக்கீடு மதிப்பெண் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும், சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாட்டில் அரசின் தீவிர கவனம்.
- இந்தியா முழுவதும் சகோதரத்துவம், சமத்துவம், வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி, மாநில ஒற்றுமை கருத்தில் கொண்டு தாய்மொழியும், ஆங்கிலமும் கட்டாயம், மாணாக்கர்களின் அவசியத்திற்கேற்ப இந்தி மற்றும் பிறமொழிகள் பாடமாக்கப்படும். நீதி போதனை வகுப்புகள் கட்டாயப்படுத்துதல்.
- மதுவும் - இலவசமும் தேவையில்லை, தேவையானவர்களுக்கு அரசின் உதவி. பாதுகாப்பு.
- நாட்டின் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டிற்க்கு சமமாக புதிய கண்டுபிடிப்பிற்க்கும். நவீனமயமாக்குதலுக்கும் நிதி ஒதுக்க வேண்டும்.
- சுவிஸ் - அயல்நாட்டு வங்கிகள் மற்றும் இந்தியாவில் உள்ள இந்தியர்களின் கருப்பு பணத்தை வெள்ளை பணமாக வெளிக்கொண்டு வருவதற்க்குச் சட்டம்.
- பத்து வருடத்திற்கு புதிதாக கோவில், மசூதி, தேவாலயம் கட்டாமல் அந்த இடத்தில் நூலகம், சமுதாயக்கூடம், விளையாட்டு திடல் அமைப்போம் பழைய கோயில்களை புதுப்பிப்போம், தாய்மொழியில் அர்ச்சனை செய்வோம்.
- நீதித்துறை, ஆட்சித்துறை, காவல்துறை, மருத்துவத்துறை மற்றும் மத்திய புலனாய்வுத் துறைக்கு அரசியல் குறுக்கீடு இல்லாத உண்மையான முழுமையான தனி அதிகாரம்.



**ப.சீனிவாஸ்** B.Com.,
ஆலோசகர் IMK





**S.சண்முகம்** B.Com., M.A.,
நிறுவனர் IMK

தொடர்புக்கு: 10/1133 முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037.
Reg No: 785 / 2012 தொடர்பு – +099 622 873 07
www.imk.org.in e-mail:inthiyamk@gmail.com

*நாட்டின் வளர்ச்சிக்கு சிந்திப்போம் !*

'சர்வபள்ளி' ஊரினிலே பிறந்தவர்
சர்வகாலம் தத்துவத்தைக் குடித்தவர்!
கர்வமின்றிப் பலகலைகள் பயின்றவர்
கடினஉழைப் பால்தானே உயர்ந்தவர்!
விரிவுரையில் நல்லபேரைப் பெற்றவர்
வீராசா(மி) சீதம்மா மகனவர்!
பெருமையுடன் பேராசான் ஆனவர்
புகழுச்சி உழைப்பாலே கண்டவர்!
இந்தியாவின் குடியரசுத் துணையவர்
இனியமுறை பழகிடும்நல் பண்பவர்!
''இந்தியத்தின் தத்துவநூல்'' யாத்தவர்
யுனெஸ்கோவின் தூதராக இருந்தவர்!
பல்கலையின் துணைவேந்தாய் நின்றவர்
பாரதரத்(னா) உயர்விருது பெற்றவர்!
நல்குடிய ரசுத்தலைவ ரானவர்
நல்லமுறை டாக்டர்பட் டமேற்றவர்!
'தத்துவத்தில் ஞானி'பட்டம் கொண்டவர்
தாய்மொழியைத் தெலுங்காகக் கொண்டவர்!
தத்துவமே வாழ்வென்று கண்டவர்
தத்துவத்தில் பேராசான் ஆனவர்!
உழைப்பாலே முன்னேற்றம் பெற்றவர்
உத்தமராய் உலகத்தில் வாழ்ந்தவர்
ஒழுக்கத்தின் உயர்வாக நின்றவர்
உயர்''ராதா கிருஷ்ணன''வர் வாழ்கவே!

## ராதாகிருஷ்ணன் வாழ்கவே!

புலவர் இராம.வேதநாயகம்




# அன்புப் பாலம்

**உதவுவோருக்கும், உதவி தேவைப்படுவோருக்கும் இடையே இணைப்புப் பாலம்**

மலர் 8 இதழ் 12 செப்டம்பர் 2014

சிறப்பு ஆசிரியர்
**த. ஜெயகாந்தன்**

நிறுவன ஆசிரியர்
**வ.மா.குலேந்திரன்**

ஆசிரியர்/ பதிப்பாசிரியர்
**பாலம் கலியாணசுந்தரம்**

ஆசிரியர் குழு
**பெ.சு.மணி**
**என்.சி.மோகன்தாஸ்**
**எதிரொலி விசுவநாதன்**
**தங்கம் கிருஷ்ணமூர்த்தி**
**ரதன் சந்திரசேகர்**
**சிகரம் ச.செந்தில்நாதன்**
**டாக்டர்.கே.எஸ்.சுப்பிரமணியன் IRS**

துணை ஆசிரியர்கள்
**செல்வி இ. ஷர்மிளா**
**ச. விஜய்ஆனந்த்**

சட்ட ஆலோசகர்
**S. ஜெயராமன்,** BA.,BL

புகைப்படங்கள்
**கலைமாமணி யோகா**

தனி இதழ் ரூ.20
ஆண்டுச் சந்தா ரூ.250
4 ஆண்டு சந்தா ரூ.1,000
புரவலர் - ரூ. 5000
காப்பாளர் - ரூ. 10,000
பிறநாடுகள் 100 அமெரிக்க டாலர்

முகவரி
**பாலம் மாத இதழ்**
எண்.1, 4ஆவது பிரதான சாலை
கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை - 20.
தொலைப்பேசி : 044 - 24402524

இதழ் வடிவமைப்பு
**சத்யன் லே-அவுட்**
**www.satyanlayout.com**

# ஒரு பகல் நேரப் பாசஞ்சர் வண்டியில்

அது இரண்டாம் உலகமகா யுத்த காலம்! அப்போது யுத்தம் நடந்து கொண்டிருந்தது; முடியவில்லை. ஆனால் பட்டாளத்துக்குப் போயிருந்த அம்மாசி ஊர் திரும்பிவிட்டான். அவன் விருப்பத்துக்குப் புறம்பாக அவன் வீட்டுக்கு அனுப்பப்பட்டான். அவன் ராணுவத்துக்கு இனிமேல் உபயோகப்பட மாட்டானாம்.

அவன் இப்போது - ராணுவ வாழ்க்கை மென்று எறிந்த சக்கை.

அவனது வருகையை எதிர்பார்த்து வரவேற்கவோ, கொண்டாடவோ அவனுக்கு யாருமில்லை. அது அவனுக்குத் தெரியும். எனினும் வேறு வழியின்றி, தான் வெறுத்து உதறிவிட்டுப்போன அந்தத் தாழ்ந்த சேரிக்கே அவன் திரும்ப வேண்டி நேர்ந்தது.


அம்மாசி போரைக் கைப்பிடித்து, ராணுவத்தைப் புக்ககமாய்க் கொண்டிருந்தான்.

வேற்று நாடுகளில் விதேசி மனிதரிடையே திரிகின்ற அனுபவத்தை, அவனை ஜாதியறிந்து 'தள்ளி நில்' என்று விலக்கி வைக்காத விரிந்த உலகத்தோடு உறவாடும் ராணுவ வாழ்க்கையை அவன் நேசித்ததில் ஆச்சரியமில்லை.

தாழ்ந்து கிடந்த இந்திய சமுதாயத்தால் தாழ்த்தி வைக்கப்பட்ட தனது சமூக வாழ்க்கையின் சிறுமையை வெறுத்தே முதல் மகா யுத்த காலத்தில் பட்டாளத்தில் சேர்ந்து பதினெட்டு வயதிலேயே கடல் கடந்து செல்லும் பேற்றினை அடைந்தவன் அம்மாசி.

ஆயினும் அப்பொழுது ஒருமுறை சில காலம் கழித்து யுத்தம் நின்றபின் அதே வாழ்க்கைக்கு அவன் திருப்பி அனுப்பப்பட்டான். உலகையே வலம் வந்து அவன் சேகரித்துக் கொணர்ந்த அறிவும் அனுபவமும் அந்தச் சமூகத்தினரால் 'ஆ'வென்று வாய் பிளந்து கேட்டுத் திகைக்கும் மர்மக் கதைகளாகவும், 'பொய்'யென்று அவன் முதுகுக்குப் பின்னால் உதட்டைப் பிதுக்கிக் கேலி செய்யும் மாய்மாலப் பேச்சுக்களாகவுமே அன்று கொள்ளப்பட்டன.

அவ்வாறு அவர்களோடு ஒட்டியும் ஒட்டாமல், பட்டும் படாமல் வாழ்ந்து கொண்டிருந்த அம்மாசியை மீண்டுமொரு பொன்னான சந்தர்ப்பமாய் வந்து வலிய அழைத்தது





முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள்

இரண்டாவது உலக மகா யுத்தம். நாற்பது வயதுக்கு மேல் மீண்டும் அவனுக்கு ராணுவ வாழ்க்கை கிட்டிய மகிழ்ச்சியில், தனது சேரிக்கு ஒரு சலாமடித்து விட்டு ராணுவ விறைப்போடு கம்பீரமாகப் புறப்பட்டுவிட்டான் அம்மாசி.

யுத்தகளத்தில் மார்போடு இறுக்கிப் பிடித்த யந்திரத் துப்பாக்கியைத் தாங்கி எதிரிகளோடு போராடிக் கொண்டிருக்கையில் எதிரிகளின் குண்டு வீச்சுக்கு அவன் இலக்கானான். சில மாதங்கள் ராணுவ ஆஸ்பத்திரியில் கிடந்தான். அதன் பிறகு அவன் ராணுவத்துக்கு உபயோகமற்றவனாகி விட்டதாக டாக்டர்கள் கூறினர்.

அவனால் இப்போது 'அட்டேன்ஷ'னில் கூட நிற்க முடியாது. யந்திரத் துப்பாக்கியை இரு கரங்களிலும் தாங்கி அணைத்துப் பிடித்துச் சுடும்போது, எப்படி, உடலும் கரமும் அதிர்ந்து நடுங்குமோ அதுபோல் எழுந்து நின்றால் வெற்றுடம்பே நடுங்கிக் கொண்டிருக்கிறது அவனுக்கு.

ராணுவ விறைப்போடு கம்பீரமாக ஊரை விட்டுப் போன அம்மாசிக்கு - தலையாட்டம் கண்டு உடல் நடுக்கம் கொண்டு கூனிக் குறுகித் திரும்பி வருகின்ற தன்னை, சலாமடித்து வரவேற்க யாரும் வரமாட்டார்கள் என்று தெரியும். இருப்பினும் அவன் வந்தான்.

●●●

அந்தக் குக்கிராமத்தின் ரயில்வே ஸ்டேஷனில் பாசஞ்சர் வண்டிகள்தான் நிற்கும். அதுவும் பகல் நேரப் பாசஞ்சர் வண்டிகள் மட்டுமே நிற்கும். ஆனால் சில சமயங்களில் பல காரணங்களின் நிமித்தம் அந்தப் பகல் நேரப் பாசஞ்சரை முந்திக் கொண்டு இரவு வந்துவிடும். அப்படிப்பட்ட விதிவிலக்கான சமயங்களில் இரவிலும் அங்கே ரயில்கள் நிற்பதுண்டு.

அப்படி ஒரு விதிவிலக்கான சமயத்தில் - நேற்று இரவு வடக்கே இருந்து வந்த அந்தப் பகல் நேரப் பாசஞ்சர் வண்டி இந்த ஒற்றைப் பிரயாணியான அம்மாசியை மட்டும் இறக்கிவிட்ட பின் அந்த ரயில்வே ஸ்டேஷனில் கொஞ்ச நஞ்சமிருந்த வெளிச்சத்தையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போய்விட்டது. உலகத்திலிருந்தே தனிமைப் பட்டுவிட்ட ஒற்றை மனிதனாய் அவன் நான்கு புறமும் இருளில் சுற்றிப் பார்த்தவாறு நின்றிருந்தான்.

பிறகு தனக்கு முன்பின் அறிமுகமில்லாத ஊரில் திரிவதுபோல் தோள்மீது தன் கான்வாஸ் பைச்சுமையுடன், தான் பிறந்த ஊருக்குள்ளே போய் நான்கைந்து தெருக்களை அர்த்தமற்றுச் சுற்றிப் பார்த்தான். அப்புறம் ஊருக்கு வெளியே வந்து பல்லாண்டுகளாய் ஒதுக்கி வைத்திருக்கும் தனது சேரியை தூரத்திலிருந்தே பார்த்தான். மனமில்லாமல் தானே சேரியை நோக்கி நடந்து கொண்டிருப்பதைத் திடீரென உணர்ந்து ஒரு நிமிஷம் நின்றான். வாய்க்கால் மதகு என்ற சேரியின் எல்லைக்கு வந்துவிட்டோம் என்று தெரிந்தபோது - மேலே நடந்து சென்று சேரிக்குள் போய் யாரைப் பார்த்து, யாரோடு உறவாடுவது? என்றெல்லாம் யோசிப்பதற்காக மதகுக் கட்டையின்மீது சுமையை இறக்கி வைத்து விட்டுச் சற்று உட்கார்ந்தான்.

அவன் காலடியில் வாய்க்கால் நீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. அவன் தலைக்கு மேலே சில் வண்டுகளின் நச்சரிப்பு ரீங்கரித்துக் கொண்டிருந்தது. சாலையின் இருமருங்கிலும் இருளில் நின்றிருந்த 'மினுக்கட்டாம் பூச்சிகள்' மொய்த்துக் கொண்டிருந்தன. தூரத்தில் சேரியும் சிறு வெளிச்சமும்... குடிசை வீடுகளின்மீது புகையும் தெரிந்தன. குழந்தைகளின் அழுகுரலும் ஒரு கிழவியின் ஒப்பாரிச் சத்தமும் லேசாகக் கேட்டது.

அம்மாசிக்குத் திடீரெனத் தன் தாயின் நினைவு வந்தது.

இதே மதகுக் கட்டையின் மீது எத்தனை முறை அவன் உட்கார்ந்திருக்கிறான்! சலசலத்தோடும் அந்த வாய்க்கால் தண்ணீரில் அவன் தாய் புல்லுக்கட்டைப் போட்டு அலசிக் கொண்டிருந்த பையனாய்க் கையிலொரு கரும்புத் துண்டுடன் நின்று கொண்டிருந்த நாளெல்லாம் அவனுக்கு இப்போது நினைவு வந்தது. அவன் தாய்க்கு அன்றிருந்த ஆசையெல்லாம் தன் மகன் வளர்ந்து ஒரு கண்ணாலம் கட்டிக் கொண்டு நாலு பேரைப் போலப் பயிர்த்தொழில் செய்தோ, மாடு மேய்த்தோ வாழ வேண்டுமென்பதுதான். அந்த ஆசைகளையெல்லாம்

**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**



**ந**மக்குள் வேறுபடப் பிரிந்திருக்கின்ற மனித இனத்தை ஒன்றாக்குவதுதான் நமக்கு இருக்கின்ற இன்றைய மிகப்பெரிய சிக்கல். இதற்கு கீதை பெருந்துணையாக இருக்கும். ஏனென்றால் முரண்பட்ட இரு கருத்துக்களிடையே நிகழும் மோதல்களையும், அதைக் களைவதற்குச் சமயம் பற்றிய கருத்து உணர்வு எந்த அளவிற்குத் துணை செய்யவல்லது என்பதையும் கீதை எடுத்துச் சொல்கிறது. இவ்வாறு கீதை சொல்லும் கருத்துக்கள் புதியவையல்ல; மிகப் பழமையானவையும் அல்ல; அவை என்றும் நிலைத்திருக்கக்கூடிய, எல்லாக்காலத்துக்கும் ஏற்புடைய அன்றும், இன்றும், இனி என்றும் பொருந்தி வரக்கூடிய கருத்துக்கள்.

கேலி செய்து பழித்து விட்டுத்தான் அவன் முதல் மகாயுத்த காலத்தில் பட்டாளத்துக்குப் போனான். அவன் ராணுவத்தில் இருந்த காலத்தில் அவள் செத்துப்போன சங்கதியைத் திரும்பி வந்த போதுதான் அவன் அறிந்தான். அவளுக்காக அவன் அழக்கூட இல்லை.

அம்மாசிக்கு மரணம் என்பது ரொம்ப அற்பமான விஷயம். அவன் சாவுகளின் கோரங்களோடு நெருங்கி உறவாடியவன். இப்போது அவனுக்குத் தாங்கொணாக் கொடுமையாக இருந்தது, உயிர் வாழ்பவன் உபயோகமற்று வெறும் உயிர் சுமக்கும் காரியந்தான்.

சண்டையில், தான் செத்துப் போயிருந்தால் எவ்வளவு சௌகரிமாய் இருந்திருக்கும் என்று இப்போது கற்பனை செய்து பார்த்தான் அவன். அவனுக்கு இப்போது யார் இருக்கிறார்கள்? அவன் யாருக்காக வாழ்வது? அவன் மடியில் இப்போது சில நூறு ரூபாய்கள் இருக்கின்றன. அதை வைத்துக் கொண்டு என்னதான் செய்வது...?

வண்டிக்காரன் குரல் கொடுத்தான்.

“அசலூரு, மடுவங்கரைக்குப் போறேன்” என்று பதில் குரல் காட்டினான் அம்மாசி.

வண்டி அவனைக் கடந்து சற்று தூரம் சொன்றதும் வண்டிச் சப்தத்தையும் மீறி அந்தப் பெண் பிள்ளையின் கலகலத்த சிரிப்பொலி அம்மாசியின் காதில் வந்து ஒலித்தது... அவர்கள் பேசிய தோரணையிலிருந்து இருவருமே கொஞ்சம் காதல் போதையில் மட்டுமல்லாமல் சிறிதே கள்ளின் போதையிலும் இருக்கிறார்கள் என்று அறிந்த அம்மாசி, “ம்... வயசு!” என்று முனகிக் கொண்டான்.

‘நான் வீணாக எதையெதையோ நாடி, இந்த வாழ்க்கையையும் வெறுத்து ஓடி என்ன பயன் கண்டுவிட்டேன்?” என்று அவன் மனதில் ஓர் இழை ஓடிற்று இப்போது.

சற்றுமுன் வண்டியில் அவனைக் கடந்துபோன இளமையின் கலகலப்பு, கடந்துபோன தனது இறந்த காலமே தன்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது

**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**



**த**னிப்பட்டவர்கள் வாயிலாக முன்னேற்றத்தின் விடியல் பிறந்தது. எனினும், அது மனித இனம் அனைத்திற்கும் பொதுவாக அமைந்தது. கடவுள் புதுப்புது அவதாரங்களை எடுக்கிறார் என்று சொன்னபோது, மனித இனத்தின் சிந்தனைகளும் ஆற்றல்களும் காலந்தோறும் புதிதுபுதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன என்பதே பொருளாகும். இவ்வாறு உலகம் அவ்வப்போது புதிதாக உருவாக்கப்படுகிறது. இதுதான் உலகின் முடிவு; ஆன்மிக வாழ்வின் இலட்சியம். இத்தகு வாழ்க்கை மட்டுமே நம்முள் ஒளிந்து கிடக்கின்ற ஆற்றல்களை உயிர்த்தெழுப்பி, மூடத்தனமான நம்பிக்கைகளிலிருந்து நம்மைக் காப்பாற்ற முடியும்; மனித சமுதாயத்தைக் கட்டிக் காக்கின்ற அன்பினை நம்முள் எழுப்ப முடியும்; கருத்தியலாகவும், ஒழுக்க ரீதியாகவும், ஆன்மிக நோக்கிலும் நம்மை இணைத்துத் தழுவிய ‘‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’’ என்ற உலகந்தழுவிய உறவுக்கு நம்மை இட்டுச் செல்ல முடியும்.

ஐம்பது வயதுக்குள்ளாக அடைந்துவிட்ட முதுமையையும் இந்த நிராதரவான திக்கற்ற வெறுமையையும் அனுபவிப்பதைவிட மரணம் சுகமான கற்பனையாய் இருந்தது அவனுக்கு.

அப்போது ‘கிரீச் கிரீச்’ என்று சக்கரத்தில் அச்சாணி உரசிக் கொள்ளும் சங்கீதமும் ‘கடக் கடக்’ என்று மேடு பள்ளங்களில் இறங்கி ஏறும் தாளகதியும் ஒலிக்க, தூரத்தில் ஒரு கட்டை வண்டி சேரியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

வண்டி நெருங்கி வரும்போது அதிலிருந்து ஒரு பெண்ணின் குரல் “தே! சும்மாகெட... அதோ ஆளு யாரோ குந்திக்கினுகிறாங்க” என்று தன்னைக் குறித்து எச்சரித்த ரகசியக் குரலிலிருந்து ஏதோ வாலிப சேஷ்டை என்று யூகித்துக் கொண்ட அம்மாசி தனது பிரசன்னத்தை ஒரு செருமலின் மூலம் உணர்த்தினான்.

“யாருய்யா அது மதகு மேலே?” என்று அவனுக்கு.

‘ஆ!... வயசு, அதெல்லாந்தான் பூடிச்சே!... எனக்குந்தான் இருந்திருக்கு, பதினெட்டு வயசும் இருபது வயசும், முப்பதும் நாப்பதும்... ம்; அப்போ அதை கெவுனிக்காம நானு... ஓடினேன்... அதோட பெருமை அப்போ தெரியல்லே... ஓடினேன். மனுசங்க என்னாதான் சாதின்னும் மதமின்னும் ஒதுக்கி வெச்சாலும் கடவுள் கருணையோட எல்லாருக்கும் சமமா குடுத்திருக்கிற வயசையும் வாலிபத்தையும் எட்டி உதைச்சுட்டு என்ன வேகமா ஓடினேன்டா நானு! ஓடிக்கினு இருக்கும்போதே அது என்கிட்ட இருந்து ஓடிக்கினு இருந்திச்சின்னு அப்ப தெரிஞ்சுதா? நான் ஓடறதுக்கே அந்த வயசு திமிருதானே காரணமா இருந்திச்சு! ஓடிஓடி வுய்ந்தப்புறம், இப்ப தெரியுது... ஆ! பூட்டுதேன்னு... என்னா லாபம்?” என்று தன்னுள் அவலமாய் அழுது முனகிக் கொண்டான் அம்மாசி.

–ஆம்; இழந்த ஒன்று – ‘இருக்கிறது’ என்ற



முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள்

நினைப்பிலேயே இழக்கும்போது, 'இழந்து கொண்டிருக்கிறோம்' என்று தெரியாத அளவுக்கு இழப்பைத் தாங்கிக் கொள்ளும் சக்தியாகவும் இருந்து, முற்றாக 'இழந்துவிட்டோமே' என்ற நினைப்பிலேயே அந்த இழந்த ஒன்று - அது எதுவாக இருந்தாலும் எத்தனை மகத்தானதாக மாறிவிடுகிறது! ஒன்று மகத்தானது என்பதற்கான இலக்கணமே அதுதான்.

அம்மாசி இரவு வெகு நேரம் வரை சேரியில் நுழைய மனமில்லாமல் மதகுக் கட்டையின் மீதே உட்கார்ந்திருந்தான். இன்னும் சேரியிலிருந்து மனிதக் குரல்களும், நாய்களின் ஓலமும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தன.

சேரியைச் சேர்ந்த முண்டாசு கட்டிய ஒருவன் வாயில் சுருட்டின் நெருப்புக் கனிய, காற்றையே நாற்றப்படுத்தும் புகையுடன், இருண்ட வழியில் பயத்தை விரட்ட உரத்த குரலில் பாடிக்கொண்டே வந்தான். மதகின் மீதுள்ள உருவத்தைக் கண்டதும் "யாரு... அது?" என்று திகிலடித்த குரலில் கேட்டவாறு, பாட்டு நின்றது போலவே, தானும் திடீரென நின்றான்.

"ஆளுதான், பயப்படாதே!" என்று எழுந்து நின்று பூமியில் தன் பூட்ஸ் காலைத் தேய்த்து ஓசை காட்டினான் அம்மாசி.

முண்டாசு கட்டிய ஆள் அம்மாசியை அடையாளம் கண்டு கொள்வதற்கு நெருங்கி வந்து, "யாரது?" என்று வினவியவாறே பார்த்தான். அந்த நிமிஷம் திடீரென அம்மாசிக்குத் தன் ஒன்றுவிட்ட தங்கச்சி காசாம்பூவின் நினைவு வந்தது. உடனே அவள் கணவன் சடையாண்டியின் பேரைச் சொல்லி அவர்களைத் தேடி வெளியூரிலிருந்து வந்திருப்பதாக அறிவித்துக் கொண்டான்.

"சடையாண்டிக்கி... ரயில்லே போட்டர் வேலை கெடைச்சுது; அவன் பட்டணத்துக்குப் பூட்டானே... பொஞ்சாதியையும் கூட்டிக்கினு... தெரியாதா உனுக்கு?" என்று முண்டாசுக்காரன் கூறியதும், அம்மாசிக்குப் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது. அவன் காசாம்பூவையோ அவள் கணவனையோ எதிர்பார்த்து வரவில்லை. இருப்பினும் சேரிக்குள் புகாமல் திரும்புவதற்கு அதுவே போதுமான காரணமாயிருந்தது அவனுக்கு. "பட்டணத்திலே எங்க இருக்காங்கன்னு தெரியுமா?" என்று விசாரித்தான்.

"எய்ம்பூர் டேசன்லேதான் போட்டர் வேலை

# எந்த வேலை செய்வது?

"பணம் சம்பாதிக்க ஒரு வேலை தேவை. அது சொந்த தொழிலாகவும் இருக்கலாம், அல்லது அரசாங்க வேலையாகவும் இருக்கலாம், ஐ.டி. போன்ற உயர்மட்ட தனியார் நிறுவன வேலையாகவும் இருக்கலாம் இது தான் இன்று நம்மில் பலரின் எண்ணமாக இருக்கிறது.

இதனால் கிடைத்த வேலையே போதும் என்று நமக்கு அதிகம் பிடிக்காத வேலையில் இருந்து விடுகின்றோம்.

இந்த மனப்பான்மையால், செய்யும் வேலையில் ஆர்வம் இழந்து விடுகின்றோம் படிக்கும் காலத்தில் வாழ்வில் எந்த உயரத்தை அடைய வேண்டும் என்று விரும்பினோமோ, அதை மறந்து செயல்பட்டுக் கொண்டிருப்போம்!

சாதாரண அலுவலக வேலையிலிருந்து விடுபட்டு, நீங்கள் உண்மையிலேயே விரும்பும் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க 10 சிறந்த வழிகள்.

1. **வாழ்வின் முக்கியதுவம்** : நம்மில் பலர் வயதான பிறகு நாம் ஏன் பலரைச் சந்தித்திருக்கக் கூடாது அல்லது அதிகக் கடினமாக உழைத்திருக்கக் கூடாது என்று யோசிப்பதுண்டு. சாதாரண அலுவலக வாழ்க்கையின் கட்டாயத்தை விட்டு நம் எதிர்காலத்தில் அடைய வேண்டிய குறிக்கோளுக்காக பாடுபடுவதில் தவறில்லை.

2. **வாழ்க்கை ஒரு பாடம்** : எதை நாம் விரும்பு வதில்லையோ அதைப்பற்றி ( குறிப்பாக அர்த்தமற்ற வேலைகள், அலுவக அரசியல் போன்றவை ) எண்ணாமல், நாம் செய்ய விரும்பும் நம்பிக்கையுடன் வேலைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

3. **உறுதியான சிந்தனை** : தொழிலில் செயல்படுபவர்கள் தாங்கள் செய்யும் வேலையை நேசிக்கிறார்கள். அதுவே அவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கிறது.

4. **நம் நோக்கத்தில் உறுதி** : உள்ளத்திலே ஏற்படும் பயத்தை உதறித்தள்ளி நாம் காணும் கனவை அடைய தைரியமாக முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். அவற்றிலே நம் முழு கவனத்தையும் செலுத்துவது சிறந்தது.

5. **உண்மை நிலை** : "உங்கள் வீட்டிலே உட்கார்ந்தப்படி மாதம் ரூ 10,000/ சம்பாதிக்க வேண்டுமா, இதோ ஒரு எளிய வேலை" என்ற விளம்பரங்களை விட்டுத் தள்ள வேண்டும். நம் சொந்த முயற்சியில் தொழில் தொடங்குவதற்கு காலமும் கடின உழைப்பும் அதிகமாக தேவைப்படும்.

6. **தகவல்களை திரட்டுவது** : நாம் ஆரம்பிக்க விரும்பும் தொழில் பற்றிய பல தகவல்களை, நூலகங்களிலிருந்தும் அறிந்து அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட கூட்டமைப்புகளிலிருந்தும் சேகரித்து நம்மை தயார்படுத்திக் கொள்வது நல்லது.

7. **கனவை நனவாக்குவது** : நம் கனவுத் தொழிலைத் தொடங்க ஒரு கால நிர்ணயம் செய்துக் கொண்டு அந்த காலக் கட்டத்துக்குள் தொடங்க எல்லா முயற்சியையும் மேற் கொள்ள வேண்டும்.

8. **மற்றவர்களுடைய ஆதரவு** : உற்சாகம் என்பது தொற்று நோய் போல பரவும். ஆகவே உங்கள் எண்ணங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டு அவர்களின் ஆதரவை தேடிப் பெறவேண்டும்.

9. **வேலையை தொடங்குவது** : "ஒரு மலையை நகர்த்த வேண்டுமா? முதலில் ஒரு கல்லை நகர்த்துங்கள்" என்கிறது சீனப் பழமொழி. நம் மொத்த கனவுத் தொழிலைத் தொடங்க முதலில் அவற்றை சிறு சிறு பாகங்களாக பிரித்துக் கொண்டு ஒவ்வொன்றாகச் செய்யத் தொடங்குவது நல்லது.

10. **நன்றி உணர்வு** : நம் எதிர்காலக் கனவை நினைவாக்க, இப்போது நாம் எவ்வளவு வேலைகளை செய்ய முடிகிறது என்பதை நன்றியுடன் நினைவு கொள்வது நல்லது.

செய்யறானாம் சடையாண்டி; போனா பாக்கலாம்" என்று கூறிவிட்டு முண்டாசுக்காரன் சேரியை நோக்கி நடந்தான்.

அம்மாசி அவன் முதுகுக்குப் பின்னால் நின்று அந்தச் சேரியை வெகு நேரம் வெறித்துப் பார்த்துவிட்டுத் தனது கான்வாஸ் பையைத் தூக்கித் தோள்மீது வைத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனை நோக்கித் திரும்பி நடந்தான்.

அன்பு காட்டவும் அரவணைத்துக் கொள்ளவும் யாருமில்லாத தனியனான தனக்கு உள்ள ஒரே பிடிப்பு அந்த ஒன்றுவிட்ட தங்கையும், அவள் புருஷனும், அவள் குழந்தைகளும்தான் என்ற தீர்மானம் அவன் மனத்தில் உருவான அந்த நிமிஷமே அவன் நடையில் ஒரு தெம்பு பிறந்தது!

●●●

மறுநாள் காலை, பொழுது விடிந்து வெகு நேரம் கழித்துச் சில மணி நேரங்கள் தாமதமாக - பகல் நேரத்திலேயே வந்து சேர்ந்தது அந்தப் பாசஞ்சர் வண்டி.

வண்டியில் ஏறி நின்ற அம்மாசி தனது கிராமத்தை, தூரத்தில் தெரியும் சேரியை, வாய்க்கால் மதகைக் கண்கள் பளபளக்க வெறித்துப் பார்த்தான்.

அவனது சேரியைச் சேர்ந்த கோவணாண்டிச் சிறுவர்களும், மேல் சட்டையில்லாமல் இடையில் அழுக்குப் பாவாடை தரித்த கறுப்புச் சிறுமிகளும் அந்தக் கிராமத்தின் விளைபொருள்களான நுங்கு, வெற்றிலை, வெள்ளரிப் பிஞ்சு முதலியவற்றை விலை கூறி விற்றவாறு ரயிலின் அருகே ஓடித் திரிவதை ஒரு புன்னகையுடன் பார்த்தவாறிருந்த அம்மாசி, எதையாவது அவர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்று சற்று நேரம் கழித்தே ஆசை கொண்டான்.

வெள்ளரிப் பிஞ்சு விற்ற ஒரு சிறுமியை, சட்டைப் பைக்குள் கையை விட்டுச் சில்லறையை எடுத்தவாறே அவன் கூவி அழைத்த நேரத்தில் ரயிலும் கூவி நகர ஆரம்பித்தது. உடனே அந்தச் சிறுவர் சிறுமியரை நோக்கிச் சில்லறையை வாரி வீசினான்.

அவர்கள் ஆர்வத்தோடு அவற்றைச் சேகரித்துக் கொண்டு தலை நிமிர்ந்தபோது வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. அம்மாசி குழந்தையைப்போல் குதூகலத்தில் வாய்விட்டுச் சிரித்தான். அவர்கள் இந்தப் பட்டாளத்துக்காரனுக்குப் பதில் புன்னகையுடன் சலாம் வைத்தவாறு வரிசையாக நின்றனர்.

பிறந்த மண்ணுக்கே விடை கூறிக்கொள்வதுபோல், நடுங்கிக் கொண்டிருக்கும் தலைக்கு நேரே கரம் உயர்த்திச் சலாமிட்டான் அம்மாசி. அவன் கண்ணிமைகளில் கண்ணீர் சிதறிப் பரந்திருந்தது.

வண்டியில் கூட்டமில்லை. அம்மாசியின் தலைக்கு மேல் சாமான் வைக்கும் இடத்தில் காலில் மேஜோடும் இடுப்பில் வேட்டியின் மேல் பச்சை நிற சிங்கப்பூர் பெல்ட்டும் அணிந்த ஒரு பட்டிக்காட்டு மைனர் பீடி புகைத்தவாறு படுத்திருந்தான்.

அவனுக்கு எதிரில் ஒரு தாய் தனது தூங்குகின்ற பெண் குழந்தையை மடியில் கிடத்தித் தானும் சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அம்மாசி அவளை வெறித்துப் பார்த்தான். அவளது தோற்றத்திலிருந்து அவள் ஓர் இளம் பிராமண விதவை என்று தெரிந்தது. நாட்பட்ட க்ஷயரோகத்தால் அரிக்கப்பட்டு வெறும் அஸ்திக்கூடே உயிர் தரித்து அயர்ந்தது போல் தோற்றம். அவளது தொண்டைக் குழியில் பிராணன் துடித்துக் கொண்டிருந்ததும் தெரிந்தது.

பட்ட மரத்திற் படர்ந்த பசுங்கொடியில் ஒற்றை மலர் பூத்தது போன்று அவள் மடியில் படுத்திருந்த அந்த அழகிய பெண் குழந்தை உறக்கத்தில் முகத்தைச் சுருக்கிப் பின் மலர்ந்து சிரித்தது.

ரயிலின் மெதுவான ஓட்டத்தின்போது ஏறிய டிக்கட் பரிசோதகர் வாசற்படியிலேயே சற்று நின்று சிகரெட்டைப் புகைத்தெறிந்து விட்டுச் சாவதானமாய் வந்து அம்மாசியின் அருகில் அமர்ந்தார். சற்று நேரம் ஏதோ யோசனையோடு அமர்ந்திருந்த டிக்கட் பரிசோதகர், பக்கத்து ஸ்டேஷனை வண்டி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து, அம்மாசியின் தலைக்கு மேல் படுத்திருந்த பட்டிக்காட்டு மைனரை நோக்கி டிக்கட்டுக்காகக் கை நீட்டினார். அம்மாசியும் தனது கோட்டுப் பைக்குள் கிடந்த டிக்கட்டைத் துழாவி எடுத்தான்.

அவற்றை வாங்கிப் பின்புறம் கையெழுத்திட்டுக்

**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**



**உ**லகம் என்பது, பலரும் சொல்வதைப் போன்று, பொய்த் தோற்றம் கொண்டதன்று; கடவுளின் ஆற்றலுக்குத் தொடர்பில்லாமல், இயற்கையின் இயங்காற்றலுக்குக் கட்டுப்பட்டு, உலகம் இயங்குகிறது என்று நாம் சொல்லி வருகின்றோம். இதனால் இறைத்தன்மையின் இன்றியமையாமையை நாம் உணரத் தவறிவிட்டோம். இதனால் உலகம் என்பது மாயை என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அர்த்தமுள்ள, பொறுப்புணர்ச்சிமிக்க வாழ்க்கையை இன்றைய மனிதன் வாழ்வதற்குக் கற்றுத் தருவதற்காகத்தான் நமது பண்டைய புனித நூல்களுக்கு விளக்கங்களைத் தந்து வருகின்றோம். இதிலிருந்து விலகியவர்களும், விடுபட்டவர்களும் தாங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதை உணர்வார்கள். ஆனால், வழிகாட்ட ஒருவன் இன்றி இவர்கள் வாழ்க்கை பயனற்றதாகவே முடியும்.



**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**

**ந**ம்மை முழு நிறைவுள்ளவர்களாக ஆக்கவல்லது எல்லாம்வல்ல உச்ச ஆற்றலே. உச்ச உயர் ஆற்றலுக்கு நாம் நம்மை முழுமையாகத் தந்துவிட்டால் நாம் உயர்வெய்திட இயலும். இந்த உலகத்தையும் மக்களையும், தான் விதித்தபடியும் விரும்பியபடியும் கடவுள் இயக்கினாலும், நாம் அவனைச் சரணடைந்தால் இவற்றையெல்லாம் கடந்து இறைவனடியை நாம் எய்திட இயலும். தான் விரித்த வலையில் தானே வீழ்ந்து அகப்பட்டுத் துயருறும் உயிர், தானாகவே அதிலிருந்து மீண்டுவருவதென்பது இயலாது. அதை மீட்பதற்குப் புற ஆற்றல் ஒன்று தேவைப்படுகிறது. நாம் கடவுள் மீது நம்பிக்கைக் கொண்டு காத்திருந்தால் கடவுளின் அருள் விரைவில் கூடிவந்து நமக்கு உதவி செய்யும்.

கொடுத்த பின், உறங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பிராமண விதவையை எழுப்புவதற்காகக் கையிலிருந்த பென்சிலால் பலகையில் தட்டினார் டிக்கட் பரிசோதகர்.

அந்தத் தாய் உள்ளூற மனத்தாலும் உடலாலும் என்னென்ன விதமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாளோ?... உயிரின் பசையற்ற தனது வரண்ட விழிகளை அவள் ஒருமுறை திறந்து பார்த்தாள். பிறகு அப்படியே கிறங்கிப்போய் விழிகள் மூடிக்கொண்டன. உள்ளூற வருத்தும் உபாதை பொறுக்க முடியாதவள் போன்று வெளிறிய உதடுகளைக் கடித்துப் புருவங்களைச் சுருக்கிக்கொண்டு ‘தெய்வமே’ என்று சிணுங்கினாள் அவள்.

‘‘அம்மா... இந்தாங்க... டிக்கட்டு கேக்கறாரு பாருங்க’’ என்று கனிவோடு அவளை எழுப்பினான் அம்மாசி.

நிமிர்ந்து உட்கார முடியாமல் அப்படியே விழித்துப் பார்த்த அவள் ‘‘டிக்கட்டா?...’’ என்று ஈனசுரத்தில் முனகினாள்.

‘‘டிக்கட்டு இல்லியா?- வர்ர ஸ்டேஷன்லே எறங்கிடும்மா...’’ என்று நிர்தாட்சண்யமாய்ச் சொல்லிவிட்டு வேறு புறம் திரும்பி வெளியே எட்டிப் பார்த்தார் டிக்கட் பரிசோதகர்.

அம்மாசி அவளது பரிதாபத்தை ஆழ்ந்த சிந்தனையோடு கூர்ந்து பார்த்தவாறிருந்தான். அடுத்த ஸ்டேஷன் நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் மிகவும் பிரயாசைப்பட்டு எழுந்திரிக்க முயன்றபோது மடியில் படுத்திருந்த இரண்டு வயதுக் குழந்தை உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டு பசியினாலும், தூக்கம் கலைந்த எரிச்சலினாலும் அழுதது...

‘‘எவ்வளவு தூரம்மா போகணும் நீங்க?’’ என்று அம்மாசி அவளை விசாரித்தான்.

“பட்டணத்துக்குப் போகணும் ஐயா!” என்று அவலமாய்ப் பெருமூச்செறிந்தாள் அந்தத் தாய்.

‘‘ஸார்... பட்டணத்துக்கு ஒரு டிக்கட் போட்டுக்குடுங்க... நான் பணம் தர்ரேன்...’’ என்றவாறு தனது கோட்டுப் பையிலிருந்து உப்பிக் கனத்த தோல் பர்ஸை எடுத்தான் அம்மாசி.

டிக்கட் பரிசோதகர் அவனை ஒரு விநாடி பார்த்து அவனது பெருந்தன்மையைப் பாராட்டுவதுபோல் புன்னகை பூத்துவிட்டு, நின்ற நிலையிலே ஒரு காலைத் தூக்கிப் பெஞ்சின் மீது வைத்து முழங்காலின் மீது நோட்டுப் புத்தகத்தைத் தாங்கி ரசீதை எழுதினார்.

அந்த விதவைப் பெண் அம்மாசியைப் பார்த்து, ‘‘உங்க குழந்தை குட்டியெல்லாம் தீர்க்காயுசாக இருக்கணும், ஐயா’’ என்று நன்றியுடன் குச்சுக் குச்சாய் இருந்த விரல்களோடு கும்பிட்டாள்.

தூக்கம் கலைந்து அழுத குழந்தை மீண்டும் தாயின் மடியில் முகம் புதைத்துக் கொண்டது.

அந்த வாழ்த்துக்களைக் கேட்டு ஒரு விநாடி யோசித்துத் தலை குனிந்து உள்ளூறச் சிரித்துக் கொண்டான் அம்மாசி.

டிக்கட் பரிசோதகர் கீழே ஒருபுறம் இறங்கியதும் மறு புறத்தில் டிக்கட் இல்லாத ஒரு கிழட்டுப் பிச்சைக்காரனும் அவனது மனைவியும் ஏறி உள்ளே வந்தனர்.

அந்தப் பிச்சைக்காரத் தம்பதிகள் - பெஞ்சுகளில் இடமிருந்தும் - கையில் டிக்கட் இல்லாததால் பிரயாணம் செய்யவே உரிமையற்றவர்களான தாங்கள், பெஞ்சின் மீது உட்காரக் கூடாது என்ற உணர்வோடு - ஒரு மூலையில் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தனர். அந்தப் பிச்சைக்காரன் தன் கையிலிருந்த கம்பைக் கீழே ஓர் ஓரமாகக் கிடத்திவிட்டு மடியிலிருந்த வேர்க்கடலையை எடுத்து மனைவிக்கும் பாதி பகிர்ந்து கொடுத்தான். இருவரும் அதைக் கொறிக்க ஆரம்பித்தனர்.

ரயில் அந்தச் சிறிய ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு நீண்ட கூக்கூரலை முழக்கிக்கொண்டு வேகமாய் ஓடிற்று.

●●●

ஒரு பெரிய ஜங்ஷனில் இந்தப் பாசஞ்சர் வண்டி அதிக நேரம் நின்றிருந்தது...

பிரக்ஞை இல்லாதவளாய் மயங்கிக் கடந்த தாயின் மடியில் படுத்திருந்த குழந்தை விழிப்புற்று மலரத் திறந்த விழிகளோடு வெளியே பார்த்தாள்.

பிஸ்கட்டுகள் நிறைந்த தட்டுடன் ஜன்னல் அருகே நின்றிருந்தவனைப் பார்த்ததும், தாயின் கன்னத்தை நிண்டி நிண்டி ''அப்பிச்சிம்மா... அப்பிச்சி'' என்று வெளியே கையைக் காட்டி குழந்தை அழுதாள்.

குழந்தைக்கு ஏதாவது வாங்கித் தரலாம் என்று எண்ணிய அம்மாசி, தனது பிறப்பையும் அவர்கள் குலத்தையும் எண்ணித் தயங்கியவாறே குழந்தையைப் பார்த்துப் புன்னகை காட்டினான். குழந்தை அவன் முகத்தைப் பார்த்தவாறு, ''அப்பிச்சி'' என்று உரத்த குரலில் அழுதது.

அப்போது நினைவு திரும்பிய தாய் கண் விழித்தாள்.

''அம்மா... கொளந்தை அளுவுதுங்க; ஏதாவது வாங்கித் தரட்டுங்களா?'' என்று விநயமாகவும் அன்புடனும் கேட்டான் அம்மாசி. அவள் கலங்கிய கண்களோடு பார்வையிலேயே தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அம்மாசி வண்டியிலிருந்து இறங்கி பிளாட்பாரத்திலிருந்த ஸ்டாலுக்குச் சென்றான். ஒரு கொண்டு பன்னைக் கடித்தாள்.

அப்போது கண்களைத் திறந்த அந்தத் தாய் அவனைப் பார்த்தாள். அவன் தயக்கத்தோடு அவளிடம் ஒரு பன்னை நீட்டினான். அவள் 'வேண்டாம்' என்று தலையை அசைத்தாள்.

''இந்தப் பாலையாவது குடிங்க அம்மா... ரொம்பக் களைப்பா இருக்கீங்களே...'' என்று வட்டாவிலிருந்த தம்ளரை எடுத்துப் பாலை மெதுவாக ஆற்றி அவளிடம் கொடுத்தான்.

அவளும் நடுங்குகின்ற கைகளால் அதை வாங்கித் தணியாத தாகம் கொண்டவள்போல் ஒரே மூச்சில் 'மடக் மடக்'கென அதைக் குடித்தாள். அவள் குடிக்கக் குடிக்க வட்டாவிலிருந்த பாலைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தம்ளரில் வார்த்துக் கொண்டிருந்தான் அம்மாசி. அவள் அடங்காத பசியும், தணியாத தாகமும், தீராத சோர்வும் கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்த அம்மாசி குழந்தைக்காக வாங்கி வந்த பாலையும் அவளுக்கே ஆற்றிக் கொடுத்தான். அவள் அதில் பாதியைக் குடித்தபின், ''போதும்'' என்று கூறிவிட்டுக் களைப்பு

**டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்**



**ஒ**வ்வொரு மனிதரின் உள்ளமும் புனிதமென்று கருதுவதற்கு எதிராக வெறுப்பை நான் உமிழுமாறோ, இழிவான சொற்களைப் பயன்படுத்துமாறோ என்னுடைய சமய உணர்வுகள் இடந்தந்ததில்லை. இவ்வாறு பிற சமயப் பிரிவுகளுக்கு மதிப்பளிக்கும் உணர்வையும், ஆன்மிகம் சார்ந்த அடிப்படையான உணர்வுகளைப் போற்றும் பக்குவத்தையும் இந்துப் பாரம்பரியம் ஒவ்வொரு மனிதனின் எலும்பு மச்சைக்குள்ளும் ஊட்டியுள்ளது. சமயப்பொறை உணர்வு இந்தியப் பண்பாட்டின் தொடக்கக் காலத்திலிருந்தே இடம்பெற்று வந்துள்ளது. எந்தவொரு கடவுளைத் தொழுதாலும் அவர்கள் அனைத்தும் கடந்த ஒரு முழுமுதலையே தொழுவதாகக் கருதப்படுவார்கள் என்று பகவத்கீதை சொல்கிறது. இறைவனை முழுவதுமாக உணர்வதே சமயத்தின் எல்லையாகக் கருதப்படுகிறது.

பன்னும் ஒருகப் பாலும் வாங்கினான். அதை வாங்கிக் கொண்டு திரும்பும்போது திடீரென என்னவோ நினைத்துக் கொண்டவன்போல், இன்னொரு கப் பாலும் இன்னொரு பன்னும் கேட்டான். காகிதத்தில் சுற்றிய இரண்டு பன்களையும் கோட்டுப் பைக்குள் வைத்துக் கொண்டு, நடுங்குகின்ற கைகளில் இரண்டு வட்டாக்களை ஏந்தியவாறு அவன் ரயில் பெட்டியை நோக்கி நடந்து வந்தான்.

பார்க்கிறவர்களுக்கு 'இந்தத் தள்ளாத உடம்போடு இவன் ஏன் இவ்வளவு சிரமப்படுகிறான்?' என்று தோன்றலாம், ஆ! அவனுக்கல்லவா தெரியும், பிறருக்காகப் படும் சிரமத்தின் சுகம்!

வண்டிக்குள் வந்து பெஞ்சின்மீது பால் நிறைந்த தம்ளர்கள் கவிழ்ந்துள்ள வட்டாக்களை வைத்துவிட்டுக் குழந்தையிடம் ஒரு பன்னை எடுத்துப் புன்னகையுடன் நீட்டினான். குழந்தை ஆர்வத்துடன் தாவி வாங்கி இரண்டு கைகளிலும் வைத்துப்பிடித்துக் மேலிட்டவளாய்ச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

குழந்தை, தன் தாயைத் தொந்தரவு செய்யாமல் இருக்கும் பொருட்டு அவளைத் தூக்கித் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டு பன்னைப் பிய்த்துப் பாலில் நனைத்து ஊட்டினான் அம்மாசி, குழந்தை ரொம்ப சொந்தத்தோடு அவன் மடியில் ஏறி உட்கார்ந்து சாப்பிட்டாள். பிறகு குழந்தையைத் தூக்கிக்கொண்டு பால் தம்ளர்களைக் கொண்டு கொடுத்தபின், ஸ்டாலிலேயே ஒரு கப் வாங்கிக் குழந்தைக்குப் புகட்டினான். தானும் ஒரு கப் டீ வாங்கிக் குடித்தான். குழந்தை அவனோடு வெகுநாள் பழகியிருந்தவள்போல் சிரித்து விளையாடினாள். அவன் குழந்தைக்கு ஒரு விளையாட்டுப் பொம்மையும் வாங்கினான். அழுத்தினால் 'கீறிச் கீறிச்'சென்று கத்தும் அந்த வாத்துப் பொம்மையை வைத்துக் கொண்டு குழந்தை அமர்க்களமாய்ச் சிரித்தாள்...

அம்மாசியும் உலகையே மறந்து குழந்தையின் விளையாட்டோடு ஒன்றிக் கலந்திருந்தபோது வண்டி புறப்படுவதற்கான மணி அடித்தது. குழந்தையோடு வேகமாய் ஓடி வண்டியில் ஏறினான் அம்மாசி. அவனுக்கு வாலிபம் திரும்பியதுபோல் உற்சாகம் மிகுந்திருந்தது இப்போது.

வெகு நேரமாய் அந்த ஜங்ஷனில் நின்றிருந்த பாசஞ்சர் வண்டி நிதானமாக நகர்ந்தே புறப்பட்டது.

பசி நீங்கிய தெம்பிலும் விளையாட்டுப் பொம்மை கிடைத்த குதூகலத்திலும் அந்த முகமறியாத புதிய மனிதனின் மடியில் முகத்தைப் புதைத்தும், அவன் மோவாயைப் பிடித்திழுத்தும் சிரித்தும் விளையாடும் தன் குழந்தையைப் பார்த்து அந்தத் தாய் புன்னகை புரிந்து கொண்டாள்.

அதைக் கவனித்த அம்மாசி அவளிடம் பேச்சுக் கொடுத்தான்: "பட்டணத்திலே எங்கேம்மா போறீங்க?''

அவள் அதற்குப் பதில் சொல்லுமுன் அவலமாய்ப் பெருமூச்செறிந்தாள். பிறகு மெலிந்த விரல்களால் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே பலஹீனமான குரலில் சொன்னாள்:

''பட்டணத்திலே தெரிஞ்சவா இருக்கா... என் சிநேகிதி ஒருத்தி... எப்பவோ ஒரு தடவை ஊருக்கு வந்தப்ப 'நுங்கம்பாக்கத்திலே இருக்கோம்'னு சொன்னா; அட்ரஸும் சரியாத் தெரியலே... அவ்வளவு பெரிய ஊர்லே போயி எங்கே தேடறதுன்னு நெனச்சுண்டு இருந்தேன்... ஆனா, இப்ப 'போய்ச் சேரவே மாட்டேன்'னு தோணறதே!" என்று சொல்லும்போது அவளுக்கே தொண்டை அடைத்துக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''ஏம்மா அப்படி சொல்றீங்க?... நீங்க எங்கே போகணுமோ அங்கே கொண்டு போயி நான் சேக்கறேன்'' என்று தைரியம் தந்தான் அம்மாசி.

அவனது நல்ல தன்மைகளை மனத்துள் பாராட்டியவாறே அந்தத் தாயின் மனம், தான் நிராதரவாய்த் தவிக்க விட்டு விடப் போகும் குழந்தையைப் பார்த்துக் குழைந்தது.

அவள் திடீரென்று அவனிடம் பேசினாள்: ''ஐயா! நீங்க யாரோ? தெய்வம்தான் உங்களை அனுப்பியிருக்கு... இந்த நிமிஷம் எனக்கு ஆதரவு, சொந்தக்காரன், உடன் பொறந்த சகோதரன் எல்லாம் நீங்கதான்...''

அந்த வார்த்தைகளைக் கேட்டு அம்மாசி மெய்சிலிர்த்தான்.

அப்போது தாயின் நினைவே இல்லாத குழந்தை அந்த வாத்துப் பொம்மையை அவன் காதருகே அழுத்தி ஓசைப்படுத்தினாள். அவன் தலையை ஆட்டிக்கொண்டு, சப்தம் பொறுக்காதவன்போல் காதைப் பொத்திக் கொள்வதைக் கண்டு குலுங்கிச் சிரித்து மகிழ்ந்தாள், குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த அம்மாசியை அந்தத் தாயின் பார்வை தீர்க்கமாய் அளந்தது.

அம்மாசி, அவள் தன்னிடம் என்னவோ சொல்லி ஆறுதல் பெறவோ, எதையோ கேட்டு உதவி பெறவோ எண்ணித் தவிக்கிறாள் என்று உணர்ந்து அதைத் தர, அந்த உதவியைச் செய்யச் சித்தமானவன் போன்று அவள் முகத்தையே கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் குழந்தையோ அவனிடம் இதுவரை யாருமே காட்டாத பாசத்துடன் அவன் மடிமீது ஏறிச் சட்டையைப் பிடித்து இழுத்து அவன் இதயத்தையே தன்பால் ஈர்த்துக் கொண்டிருந்தது.

திடீரென்று குழந்தையின் தாய் மீண்டும் அவனிடம் பேசினாள்: ''ஐயா! எனக்கு யாருமே... ஒருத்தருமே நாதியில்லை...'' என்று அவள் விம்மி விம்மி அழுதாள். சற்று நேரம் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்து அழுதபின் முகத்தைத் துடைத்துக் கொண்டு, அழுததால் கம்மிப்போன குரலில் கூறினாள்:

''போன வருஷம் அவ - பொறந்த ஒரு வருஷத்துக்குள்ளே - பெத்தவரை எடுத்துத் தின்னுட்டா'' என்று அவள் அங்கலாய்த்தபோது, அம்மாசி குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டான்: ''ஏம்மா கொளந்தையைத் திட்டறீங்க?'' என்று அவன் கேட்டபோது அவளும் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு முனகினாள்: ''பாவம், அந்தச் சிசு என்ன பண்ணும்? அவருக்கும் சாகிற உடம்புதான்... கலியாணத்தப்பவே அவருக்கு வயசு அம்பதுக்கு மேலே... எங்கப்பா ஏழை! வரதட்சணைக்கு வழியில்லாம மூணாந்தாரமா கட்டி வெச்சார்... அடுத்த வருஷம் எங்கப்பாவும் போய்ட்டார். இவ அப்பா தங்கமாத்தான் என்னெ வெச்சிண்டிருந்தார்... தெய்வத்துக்கே பொறுக்கலே.. கண்ணவிஞ்ச தெய்வம்!..." என்று அவள் பல்லைக் கடித்துக் கொண்டு திட்டினாள்.

அவள் மூக்கைச் சிந்திக்கொண்டு பேசினாள்: ''இவ அப்பாவுக்கு ஓட்டல்லே வேலை. அவருக்கு க்ஷயரோகம் வந்துடுத்து. அப்புறம் வேலைக்கு யாரும் வச்சுக்க மாட்டேன்னுட்டா - நாலு கொழந்தைங்க பெத்தேன். ஒண்ணொண்ணா வளத்து வளத்து வாரிக் குடுத்துட்டேன். கடைசிலே இவ; இவளும் இல்லேன்னா எங்கேயோ ஆறோ கொளமோ பாத்து விழுந்து பிராணனை விட்டுடுவேன்.. தாங்க முடியலே ஐயா. இந்த நோயோட இம்செ தாங்க முடியலே, இனிமே பொழைக்கறதாவது! கொஞ்சம் கொஞ்சமா வதைபட்டுச் சாகறதெவிட போயிடலாம்னா, இந்தக் கொழந்தே நேக்கு ஒரு கழுத்தறுப்பு? அவராலே எனக்குக் கெடெச்ச சம்பத்தெப் பார்த்தீங்களா? இந்தக் கழுத்தறுப்பும் இந்தப் பிராணாவஸ்தையும்தான்!'' - கோபத்தாலும் விரக்தியாலும் அவள் உடம்பில் ஒரு படபடப்புக் கண்டது. பேசமுடியாமல் மூச்சிளைக்க வெறித்துப் பார்த்தவாறு மௌனமானாள் அவள்.

அந்தப் பாசஞ்சர் வண்டி ஏகமாய் இரைச்சலிட்டுக்

கொண்டு ஓடிய போதிலும் அந்தப் பெட்டிக்குள் ஓர் அமைதியே நிலவுவதுபோல் தோன்றியது. அவள் மெல்ல மெல்லக் கண் மூடினாள். வண்டியின் ஆட்டத்திற்கேற்ப கண்களை மூடிச்சாய்ந்திருந்த அவளது சிரம் இடமும் வலமும் கொளகொளத்து ஆடிக்கொண்டிருந்ததைக் கண்ணுற்ற அம்மாசி, 'அவள் செத்துக் கொண்டிருக்கிறாளோ' என்று ஒரு விநாடி திடுக்கிட்டான்.

நல்லவேளை; அவள் தன் உடலிலோ மனத்திலோ விளைந்த வேதனையைத் தாங்க மாட்டாமல் உதட்டைக் கடித்தவாறு முகத்தைச் சுளித்துக்கொண்டே கண் திறந்தாள், ஒரு கைத்த சிரிப்புடன்.

''பொண் ஜென்மம் எடுக்கவே படாது. அப்படிப் பொண்ணாப் பொறந்தாலும் ஏழையாய்ப் பொறக்கப்படாது'' என்று சொல்லிவிட்டு, எதையோ யோசித்துத் தான் சொன்னதை மறுப்பது போல் தலையை ஆட்டிக் கொண்டாள்: ''ஏழையாப் பொறந்தாத்தான் என்ன? நீங்க என்ன ஜாதியோ, என்ன குலமோ? உங்களவாள்லே, ஏழையாய்ப் பொறந்த பொண்களும் ஏதோ அவாளுக்கேத்த மாதிரி சந்தோஷமா வாழல்லியா, என்ன? பொண்ணாப் பொறந்தாலும், ஏழையாப் பொறந்தாலும், எங்க ஜாதியிலே பொறக்கப்படாது ஐயா; அதெவிடச் சேரியிலே பொறந்துடலாம்...'' என்று அவள் சொல்லிக் கொண்டிருந்தபோது அம்மாசியின் நினைவில் நேற்று கட்டை வண்டியில், இருளில் சென்ற சேரிப் பெண்ணின் எக்காளச் சிரிப்பு எதிரொலித்தது.

"என்ன பாவம் பண்ணினேனோ பொண்ணாப் பொறந்து ஒரு பொண்ணையும் பெத்து வெச்சிருக்கேன்! இது என்னென்ன படப்போறதோ?" என்று கண் கலங்க அவள் பெருமூச்செறிந்தபோது, அம்மாசி தன் மடியில் கிடந்த குழந்தையின் மிருதுவான கேசத்தை வருடியவாறு கூறினான்:

"ம் நீங்க வாழ்ந்த காலம் மாதிரியே இந்தப் பொண்ணு வாழப் போற காலமும் இருந்துடுமா என்னா?"

"காலெத்தெ சொன்னாப் போறுமா ஐயா, மனுஷா பண்ற அக்ரமத்துக்கு! நான் கிராமத்துலே பொறந்தவ. டவுனுக்கு வந்தப்புறம் ஜாதியும் ஆசாரமும் அர்த்தமில்லாததுன்னு நன்னா மனதுக்குத் தெரியறது. யார் தைரியமா விடறா, சொல்லுங்கோ? நீங்க யார் – எவர்னு தெரியாம – 'ஐயோ பாவம், ஒருத்தி மயங்கிக் கிடக்கிறாளே'ன்னு பால் வாங்கிண்டு வந்து தந்தேள்... நானும் சாப்பிட்டேன். இதையே நாலு மனுஷா மத்தியிலே என்னாலே செய்ய முடியுமோ? செய்வேனோ? 'நகந்துக்கோ, நகந்துக்கோ'ன்னுதான் சீலம் கொழிச்சிருப்பேன். என்ன காரணம்னு எனக்கே புரியாத – நாலு மனுஷா என்ன சொல்லுவாளோங்கற காரணம்தான். இந்த 'நாலு மனுஷா பயம்'தான் எல்லார்கிட்டேயும் இருக்கு. வேற என்ன 'காரணம் மண்ணு' இருக்கு! இந்த மாதிரி நிராதரவான நெலையில இருந்தா அந்த நாலு மனுஷாள்லே மூணு மனுஷா இப்படித்தான் நடந்துப்பா; இல்லேன்னா ஜாதியையும் ஆசாரத்தையும்– ஏதாவது ஒரு காரணத்தோட எல்லோரும் மனப்பூர்வமா... நெஜத்துக்கு ஏத்துண்டிருந்தா, அது எப்பவோ மாறிப்போயிருக்கும். ஒவ்வொத்தரும் அதெப் பொய்யா, ஒரு ஒப்புக்குப் போலியா ஏத்துண்டிருக்கிறதனாலேதான் அது இன்னும் வாழ்ந்துண்டு என்னெப் போலெ ஏழைகளோட கழுத்தை அறுக்கிறது!"

சற்று நேரத்துக்கு முன் அருந்திய பாலில் விளைந்த தெம்பும், மாலை நேரக் குளிர்ந்த காற்றும் தொடர்ந்து சில நிமிஷங்கள் அவளுக்குப் பேசச் சக்தி அளித்தன; ஆனால் பேசிய பிறகு அவளுக்கு மூச்சுத் திணறியது. இவ்வளவு நேரப் பேச்சுக்குப் பிறகும் அவள் அவனிடம் என்ன சொல்ல நினைத்துப் பேச ஆரம்பித்தாளோ அதை அவனிடம் சொல்லவில்லையே என்று அவளுக்குத் தோன்றியது. மிகவும் அவசரத்தோடு அவள் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"இவ்வளவு பேசறே – நீயாவது அந்த ஜாதிக் கட்டை மீறி ஏதாவது செய்திருக்கிறதுதானேன்னு நீங்க கேக்கலாம். ஆமா, இதுவரைக்கும் நான் செய்யலே – செய்யற மாதிரி என்னெ வளர்க்கலே... ஆனா நான் செய்யப் போறேன்... ஆமா, எனக்குக் கெடச்ச தண்டனை என் மகளுக்காவது கெடைக்காமெ இருக்கணுமோல்லியோ? நான் செய்யத்தான் போறேன்" என்ற பலமான தீர்மானத்தோடு யார் மீதோ பழி தீர்த்துக் கொள்வது போல் உதட்டைக் கடித்தவாறு தலையாட்டிக் கொண்டாள்.

இதற்கிடையே ரயில் பல சிறிய ஸ்டேஷன்களில் நின்று நின்று கடகடத்து ஓடிக்கொண்டிருந்தது.

அவள் திடீரென்று நெஞ்சை அழுத்திக்கொண்டு ஓங்கரித்துவாந்தியெடுத்தாள். இரண்டுமணிநேரத்துக்கு முன் குடித்த பால் முழுவதும் ஜீரணமாகாமல் வெளிவந்தது. மடியிலிருந்த குழந்தையை பெஞ்சின் மீது உட்காரவைத்து விட்டு அம்மாசி எழுந்து நின்று அவள் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். மூலையில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரக் கிழவி எழுந்தோடி வந்தாள். அவள் கையிலிருந்த தகரக் குவளையைப் பார்த்ததும் தண்ணீர் கொண்டுவரச் சொன்னான் அம்மாசி. கிழவி பாத்ரூமிலிருந்து அதில் தண்ணீர் கொணர்ந்து அவள் முகத்தைத் துடைத்து விட்டு இரண்டு மிடறு தண்ணீர் புகட்ட முயன்றாள். தண்ணீர் கடை வாயில் வழிந்தது. தண்ணீரோடு ஒரு கோடு ரத்தம் கடைவாயிலும் நாசித் துவாரத்திலிருந்தும் வழிந்தது.

"ஐயோ ரத்தம் வருதே!" என்று கிழவி அலறினாள். அம்மாசி தனது மேல் கோட்டால் ரத்தத்தைத் துடைத்து அந்தப் பெஞ்சின் மீது அவளை மெல்லச் சாய்த்துப் படுக்க வைத்தான். அவளுக்குக் கையும் காலும் சில்லிட்டிருந்தது. முதுகில் மட்டும் சூடு இருந்ததை அவளைப் பெஞ்சின்மீது கிடத்தும்போது உணர்ந்தான் அம்மாசி. அவளைப் படுக்க வைத்தபின் குழந்தையைத் தூக்கி அவள் அருகில் உட்கார வைத்தான். குழந்தை தாயின் மார்பில் முகத்தைச் சாய்த்துக் கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.



முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள் முத்திரைக் கதைகள்

குழந்தையின் தாய் அம்மாசியின் பக்கம் கை நீட்டினாள். பெஞ்சின் அருகே முழந்தாளிட்டு உட்கார்ந்திருந்த அம்மாசியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு ரகசியம் பேசுவது போன்ற குரலில் அவள் சொன்னாள்: "நீங்க யாராயிருந்தாலும் எனக்குத் தெய்வம் மாதிரி! அடுத்த ஸ்டேஷனில் இந்த உடம்பே எறக்கி செய்ய வேண்டியதெ செஞ் சுடுங்கோ... செய்வேளா?" என்று கேட்டபோது, எவ்வளவோ மரணங்களைச் சந்தித்திருந்த அம்மாசியும் கூடக் கண்ணீரை அடக்க முடியாமல் முகத்தை மூடிக் கொண்டான்.

"உதவின்னு கேக்காமலே செய்யற மனுஷன் நீங்க... நான் ரொம்ப நாழியா... சொல்ல நினைச்சிருந்ததைச் சொல்லிடறேன்... இவளை...என் குழந்தையை..." - அவள் கண்களில் நிறைந்த கண்ணீர் காதோரமாய் வடிந்தது - "உங்க குழந்தையா வளர்க்கணும்...அவள் நன்னா வாழ்ந்துடுவா என்கிற நம்பிக்கை வந்துடுத்து... என் குழந்தையை உங்க குழந்தைகள்லே ஒருத்தியா... வளர்ப்பீங்களா, ஐயா...?" என்று மலர்ந்த முகத்தோடு அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டு கேட்டாள் அந்தத்தாய்.

பகல் நேரப் பாசஞ்சர் வண்டிக்காகக் கையில் குழந்தையுடன் காத்திருந்தான் அம்மாசி.

தன் தாய்க்குச் செய்யத் தவறிய ஈமக் கடன் களையெல்லாம் நேற்று ஒரு தாய்க்குச் செய்துவிட்டு, வாழ்க்கையில் தனக்குக் கிடைத்திருக்கும் பொக்கிஷம்போல் அந்தக் குழந்தையை இரவெல்லாம் மார்போடு அணைத்துக் கொண்டு அந்த ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்தான் அம்மாசி.

இன்று சரியான நேரத்திலேயே அந்தப் பாசஞ் சர் வண்டி வந்து சேர்ந்தது. தலையும் உடம்பும் ஆட்டம் கண்டு விட்ட அம்மாசி, குழந்தையோடு தனது பைச்சுமையையும் ஒன்றாய் எடுத்துச் செல்ல முடியாமல் குழந்தையை ஜன்னல் வழியாக ஒரு அம்மாளிடம் கொடுத்துவிட்டுப் பையைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

வண்டியில் இருந்தவர்கள் எல்லாம் குழந்தையையும் கிழவனையும் மாறி மாறிப் பார்த்தனர் 'இந்தக் கிழவனுக்கு இவ்வளவு அழகான குழந்தை என்ன உறவு' என்று நினைத்தார்களோ?

"பொண்ணு.... மகளா, பேத்தியா?" என்று

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்



**உ**லகத்துப் பொருட்களின் மீது, ஆன்ம சக்தியை ஊட்டுகின்ற ஆற்றல்களின் மீது, நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்; அறிவியலும் நிறுவனங்களும் மரபு நெறிகளோடு தமக்குள்ள உறவை இழந்துவிட்ட இந்தச் சூழ்நிலையில் ஆன்மிக ஆற்றல்களின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். எதிர்காலத்தில் மனிதனின் நம்பிக்கையை மீட்டுத் தருவதற்குச் சமய நெறிகள் முக்கிய இடம் வகிக்கும். பழங்காலச் சமயங்கள் கிளைத்துக் கிளைத்துப் பல்கோண வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும், அவற்றின் மெய்யியல் மையத்தை, அதன் வளர்ச்சி அழித்துவிடவில்லை. இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டோமெனில் அனைத்தையும் கடந்து நிற்கின்ற இறைவனோடு நாம் தொடர்பு கொண்டு உலகைப் புறப்பதற்கான பணியினைத் தொடங்க முடியும்.

அவன் அவளைக் கும்பிட்டான்.

அவள் பிடி அவன் மணிக்கட்டின்மேல் இறுகி இருந்தது.... ஒரு திறமையற்ற நடிகை உயிர் விடுகின்ற காட்சியில் நடிப்பது போல் முகத்திலுள்ள புன்முறுவல் மறையும்முன் இவன் கண்களை மூக்கொண்டாள். மெல்லமெல்ல அவளது வாய் திறந்தபோதும், உதட்டின் மீது ஒரு ஈ வந்து அமர்ந்தபோதும்தான் அவள் உயிர் வாழ்க்கை சம்பூர்ணமெய்திவிட்டது என்பதை அறிந்த அம்மாசி எழுந்து தலைகுனிந்து நின்றான்...

ஏதோ ஒரு சின்ன ஸ்டேஷனில் வண்டி நின்றதும், பிச்சைக்காரக் கிழவி ஓலமிட்டதைத் தொடர்ந்து அந்தப் பெட்டியைக் கும்பல் சூழ்ந்தது. கும்பலை விலக்கிக் கொண்டு ஒரு ரயில்வே அதிகாரி உள்ளே நுழைந்தார்...

●●●

மூன்றாம் நாள் மத்தியானம்... அந்தச் சின்னஞ் சிறு ரயில்வே ஸ்டேஷனில் தெற்கே இருந்து வரும்

விசாரித்தாள் சன்னல் வழியாகக் குழந்தையை வாங்கிய அந்த அம்மாள்.

பிள்ளையே பெறாத அம்மாசி ஒன்றும் யோசிக் காமல் உடனே 'பேத்தி!' என்று பதில் சொன்னான்.

குழந்தையின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டியவாறே மீண்டும் அந்த அம்மாள் "என்ன பேரு?" என்று வினவினாள்.

அந்த நேரத்தில் ரயில் 'கூ' வென்று கூவிச் சிரித்தது. 'குழந்தையின் தாயிடம் பெயரைக் கேட்க மறந்து விட்டோமே' என்று உதட்டைக் கடித்துக் கொண்டான் அம்மாசி. ரயிலின் கூவல் நின்ற அதே விநாடியில், தான் கண்டுபிடித்த பெயரைப் பிரகடனம் செய்தான் அம்மாசி, "பாப்பாத்தி!"

"பாப்பாத்தி! பொருத்தமான பேருதான்!" என்று சிலாகித்தாள் அந்த அம்மாள்.

பொருத்தமோ, இல்லையோ... இனிமேல் அது ஒரு பெயர் தான். ●



# தினமலர்

உண்மையின் உரைகல்

· சென்னை · வேலூர் · புதுச்சேரி

· ஈரோடு · சேலம் · கோயம்புத்தூர் · திருச்சி

· மதுரை · திருநெல்வேலி · நாகர்கோயில்

வாழ்த்துக்கள்





பதிவு எண்.
229/2000

SCT

ஸ்ரீரங்கம் அறக்கட்டளை

ஏழை எளிய மக்கள் கல்வி, சுகாதாரம் கொண்டு முன்னேற சமூக நலப் பணியில் 2000 ஆண்டு முதல் ...

14 ஆண்டுகளாக செய்து வரும் சமுதாயப் பணிகள்

ஆறுமுகம் நினைவு கல்வி உதவி

இலவச மருத்துவ முகாம்

ஸ்ரீரங்கம் - நாகம்மாள் இலவச திருமண உதவி திட்டம்

சுய தொழில் தொடங்க உதவிகள்

நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. IT Act u/s 80G யின்படி வரிவிலக்கு உண்டு


Cheque / DD to be drawn in favour of **SRIRANGAM CHARITABLE TRUST**

Er. S. **மனோகரன்**, B.E.,M.B.A., தாளாளர்

Dr. N. **கோப்பெருந்தேவி**, M.D.,DGO, தாளாளர்

ரஜ்னி பிளாசம் அடுக்ககம், பெல்லி ஏரியா, 21வது மெயின் ரோடு, அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 040.

www.srirangamtrust.wordpress.com




MAIN : 100 Feet Road, Near Railway Gate, Puducherry - 605 004. Ph : 0413 2206705

BRANCH : Villianur Main Road, Near Indira Gandhi Statue. Puducherry - 605 005. Ph : 0413 2205633

# அரசியல் மேதை



## டாக்டர் ராதாகிருஷ்ணன்

● டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் விளங்கித் தோன்றிய பன்முக ஆற்றல்களுள், அவர் தத்துவவாதியாகவும், அரசியல் மேதை யாகவும் திகழ்ந்ததையே மக்கள் பெரிதும் விரும்பினர். உலகந்தழுவிய நோக்கு அவரிடம் அடிப்படையாகக் குடிகொண்டிருந்தது. அவர் சிறிது காலம் ஆக்ஸ்போர்டில் தங்கியிருந்தபோது மான்செஸ்டரிலும் இலண்டனிலும் ஆற்றிய ஹிபெர்ட் சொற்பொழிவுகளில் இந்தியாவின் பணித்துறை சாராத பண்பாட்டுத் தூதுவராகவே தோன்றினார். கூட்டு நாடுகளின் சார்பாக *1930*இல் கூட்டப்பெற்ற அனைத்துலக அறிவாண்மையர்கள் கூட்டுறவுக் குழுவில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொண்டார். இந்தியா விடுதலையடைந்த பின் மாஸ்கோவுக்குத் தூதராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவராகவும், பின்னர் குடியரசுத் தலைவராகவும் உயர்ந்தார்.

● டாக்டர் ராதாகிருஷ்ணன் வாழ்நாளில் தான் பெற்ற பதவிகளின் மூலம் வியக்கத்தக்க அளவுக்குப் பயிற்சிகளைப் பெற்றார். அக்காலத்தில் வெற்றிகரமான துணைவேந்தராகச் செயல்படுவதென்பது இலகுவானதன்று. உலக இலக்கியத்திலும் தத்துவத்திலும் டாக்டர் ராதாகிருஷ்ணன் புலமை பெற்றிருந்தார். இந்தப் புலமையைப் புதுமை நாட்டத்தோடு இணைத்துப் பார்த்தார். இவையனைத்தையும் ஒருங்கிணைத்து உலகந்தழுவிய நோக்கினை அவர் வளர்த்தார்.

● ரஷ்யாவில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணனை வரவேற்கும்போது, ''தன் வாழ்நாட்களை எழுதும் பணியிலேயே கழித்த தூதுவரைச் சந்திக்க நான் ஆவலாக உள்ளேன்'' என்று ஸ்டாலின் கூறினார்.

● டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு புத்தகங்கள் இரண்டாவது இயற்கைக் காட்சிகளாக அமைந்தன. அவர் நிலைத்த புகழ் பெறுவதற்குக் காரணமாக இருந்த ''இந்தியத் தத்துவம்'' (Indian Philosophy) என்ற நூலை அவர் தமது முப்பத்தைந்தாவது வயதில் எழுதினார். அந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் கீழே பல அடிக்குறிப்புக்கள் விளங்கின. அந்த அடிக்குறிப்புக்கள் நம் சிந்தனையைத் தூண்டி அறிவின் எல்லையை விரிவாக்குவனவாய் அமைந்தன. இதனைக் கவனமாகத் திட்டமிட்டு எழுதிய விரிந்த நூல் எனலாம். அல்லது சுருங்கிய மதிப்பீடு என்றும் கூறலாம்.

● தத்துவமேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் பேச்சிலும் எழுத்திலும் காணப்பட்ட இயல்பே அவரது வாழ்க்கையிலும் எதிரொலித்தது. அவர் பேசியவாறே செயல்பட்டார். எழுதியவாறே ஒழுகினார். அவர் கற்றுத்துறைபோகிய மனிதர்; சாதாரண மனிதர்களுக்கு உள்ள உணர்வுகளைத் தன்னுள்ளும் கொண்டவர். அவர் ஒரு இலட்சிய ஆசிரியர். கூரறிவு கொண்டவர். மாற்றமில்லாத இரக்கவுணர்வு கொண்டவர். வாழ்நாள் முழுவதும் பெருவேட்கையுடன் படித்தார். நினைவாற்றலால் அருளப்பெற்றார். தன்னுடைய நூல்கள் முழுவதிலும் அறிஞர் கூற்றுக்களைத் தாராளமாக அள்ளி வழங்கினார்.

● டாக்டர் ராதாகிருஷ்ணனின் ஆங்கிலப் புலமை, அவரை வாழ்நாள் முழுவதும் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கவைத்தது. ஆர்ப்பொலிவுடன் கூடிய ஆங்கில மொழியால் அவர் இந்தியர்களைக் கவர்ந்தார். மறைசிக்கல்கள் நிறைந்த தத்துவங்களைத் தம்மொழித் திறத்தால் எளிதாக்கி ஆங்கில மொழியினரை ஈர்த்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது உரையை மரபுத் தொடர்களால் உயிர்ப்பூட்டினார். சொல்நயங்களால் அழகுபடுத்தினார். அவரது உரையைக் கேட்பவர்கள் இவ்வுரைகள் தம்மை மயங்க வைக்கும் மந்திரச் சொற்கள் அல்ல என்பதை நன்கறிவர்.

● டாக்டர் ராதாகிருஷ்ணன் அனைத்துலகச் சிந்தனையுள்ள மனிதர்; செயல்முறைப்படுத்தக்கூடிய இலட்சியங்களைக் கொண்டவர். தீர்க்கவியலாத சிக்கல்களாய் நோயுற்றிருந்த இந்தியாவை,

**சேலம் கே.சி. மணிவண்ணன்**



குடியரசாட்சியைத் திறமாகப் பேணவும், பிற நாடுகளுக்கு வழிகாட்டியாகத் திகழும் உயர்நிலைப் பெறும் திறத்தையும் ராதாகிருஷ்ணனின் சிந்தனையாலும் கருத்துக்களாலும் இந்தியா எய்தியது. அவர் ரஷ்யாவுக்கான இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் இந்நிலை மேலும் உயர்ந்தது. இந்தியாவில் துணைக் குடியரசுத் தலைவராகவும், பின்னர் குடியரசுத் தலைவராகவும் அவர் பதவி வகித்தபோது இந்தியாவின் பெருமை பன்மடங்கு உயர்ந்தது.

- இலக்கியச் சிற்பி டாக்டர் ராதாகிருஷ்ணனின் அறுபதாவது பிறந்தநாளின்போது ''ராதாகிருஷ்ணன் : தத்துவ ஒப்பியல் ஆய்வுகள்'' என்ற நூலை பதிப்பாசிரியர்களான டி.எம்.தத்தாவும், பி.டி.ராஜூவும் அவரது நினைவாக வெளியிட்டனர். அப்போது அவர்கள் ''கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் வித்தகர்'' என்று டாக்டர் ராதாகிருஷ்ணனை புகழ்ந்தனர். பிற சிந்தனையாளர்களிடமிருந்து மாறுபட்ட சிந்தனையை ராதாகிருஷ்ணன் வழங்கி வருவதை இருவரும் வரவேற்றுப் பேசினார்கள்.

- பாரதி வித்யா பவனின் தலைவர் திரு.கே.எம்.முன்ஷியவர்கள் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு வழங்கிய பாராட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். ''பிரம்மவித்ய பாஸ்கரர்'' என்ற பட்டத்தினை ராதாகிருஷ்ணனுக்கு வழங்கிச் சிறப்பித்த அவர் ''கிழக்கிலும் மேற்கிலும் காணலாகும் பண்பாடுகளில் சிறந்தவைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒருங்கிணைத்துப் புதிய ஆன்மிக வெளிப்பாட்டிற்கு உதவும் வண்ணம் இக்காலத்திற்கு, இச்சமூகத்திற்கு ராதாகிருஷ்ணன் ஆற்றியுள்ள பணி போற்றுதற்குரியது.'' என்றார்.

- தத்துவமேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரே சமயத்தில் பனாரசிலும் ஆக்ஸ்போர்டிலும் பணிபுரிய நேர்ந்தது. இதன் காரணமாக, நெசவுத்தறி நாடாவைப்போல, அவர் கிழக்கையும்

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் பொன்மொழிகள்

வரலாறுகளை உருவாக்குபவர்கள் எப்போதும் வரலாற்று ஆசிரியர்களாக இருப்பதில்லை.

ஒருவன் எல்லா பிரச்சினைகளையும் தவிர்த்துவிட முடியாது.

அஸ்திவாரங்கள் கட்டப்பட்ட இடத்தில் பெரும்பாலும் கட்டடங்கள் கட்டப்படுவதில்லை.

நேர்மையாக எழுதப்பட்டால் சாதாரண மனிதனின் சுயசரிதம்கூட சுவாராசியமாகத்தான் இருக்கும்.

மனிதனின் பார்வையில் கடவுளின் ஆளுமை பற்றி பேசுவது சரியல்ல.

அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டதால் மட்டுமே ஒரு நாட்டின் கனவுகள் ஈடேறிவிட்டதாக அர்த்தம் கொள்ளமுடியாது.

கடவுளுக்கும் இயற்கைக்கும் நடுவராக இருப்பவன் மனிதன். அவன் அறிவின் துணை கொண்டு படைப்பின் பூரணத்துவத்தை அடைய வேண்டும்.

தனிமனிதனாகட்டும், ஒரு நாடாகட்டும்... சுயநலம் என்பது பாவம்தான்.

நாம் உலகோடு ஒருங்கிணைந்து செயல்பட விரும்பினால், ஒவ்வொருவரது கலையையும், வரலாற்றையும் அறிந்து கொள்ள வேண்டும்.

நம்பிக்கையும், செயல்முறைகளும் வேறுபட்டு நின்றாலும் ஆன்மிகத்தின் குறிக்கோள் என்பது ஒன்றே.

அன்பை விதைத்து பொறுமையாக இருப்பவனே உண்மையான மதவாதி.

'எனக்குத் தெரியும்' என்று நாம் நினைக்கும் மறுகணமே நாம் கற்றுக்கொள்வதை நிறுத்திவிடுகிறோம்.

மிக மோசமானவனும் நாளை மாமனிதன் ஆகலாம்; அதுபோலவே மாமனிதனும் மோசமானவனாக மாறலாம். நாம் கற்பனை செய்யும் அளவுக்கு யாருமே நல்லவரும் இல்லை; மோசமானவரும் இல்லை.

மேற்கையும் இணைக்கின்ற, தொண்டினை ஆற்றினார். இருவேறுபட்ட பண்பாடுகளுக்கிடையிலும் புரிந்துகொள்ளுதல் என்ற ஊடிழையைப் பின்னினார். சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் சிகாகோ, மெக்சிகோ ஆகிய நகரங்களிலும் அவரது குரல் ஒலித்தது. அவரைப் பற்றிய குரலும் ஒலித்தது. யுனெஸ்கோ அமைப்பில் அவர் குறிப்பிடத்தக்கதொரு அங்கம் வகித்தார். பின்னாளில் பழமைவாய்ந்த, ஆனால் இளமைத்துடிப்புமிக்க தாய்நாட்டிற்கு முக்கியமான தூதர் பதவியை அவர் வகித்தார்.

- டாக்டர் ராதாகிருஷ்ணன் சோவியத் நாட்டுக்குத் தூதராக அமர்த்தப்பட்டது அவரது அரசியல் மேதமைக்கு மற்றொரு சான்றாகத் திகழ்கிறது. கடவுள் மறுப்புக் கொள்கையை உள்ளடக்கிய. மனிதரின் தனித்தன்மைக்கு எவ்வித மதிப்பும் அளிக்காத மார்க்சியத் தத்துவத்தை டாக்டர் ராதாகிருஷ்ணன் ஏற்றுக்கொள்ளவில்லை. சீனாவில் பேசியது போன்றே அவரது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படையான இயல்பு காணப்பட்டது. அவர் ஒருமுறை மாஸ்கோவுக்குச் சென்றபோது தன்னுடன் ''தோல்வியுற்ற கடவுள்'' (The God that Failed) என்ற கம்யூனிச எதிர்ப்பு நூலைக் கொண்டு சென்றார்.

- டாக்டர் ராதாகிருஷ்ணன் தத்துவப் பொருளைத் திறம்பட விளக்கியுரைப்பதற்காக உலகம் முழுவதும் அறிமுகமாகியுள்ளார். ''தத்துவம்'' (Philosophy) என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லுக்கு, ''அறிவை நாடுதல்'' என்பதே பொருளாகும். இந்தத் பொருள் ராதாகிருஷ்ணன் தருகின்ற தத்துவ விளக்கங்களில் வெளிப்படக் காணலாம். இந்தியத் தத்துவங்களைப் பற்றி (Indian Philosophy) *1921, 1927* ஆகிய ஆண்டுகளில் இவர் எழுதி வெளியிட்ட இரு தொகுதிகள் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தின எனலாம். மரபு வழியான கல்வியைப் பெறாமலும், சமஸ்கிருதப் புலமை இல்லாமலும் கல்வி கற்றிருந்த பெரும்பான்மையான இந்தியர்கள் இந்த இரு தொகுதிகளின் வாயிலாகத் தங்களது தத்துவப் பாரம்பரியத்தை அறிந்து கொண்டனர்.

- உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் உயிர் என்பது இயல்புக் குணமாகவும், அதன் உரிமையாகவும் அமைகிறது. இதைத்தொடர்ந்து, உயிரின் அறிவு மயக்கத்தாலும், கொடூரத் தன்மையாலும், சோம்பியிருக்கும் பண்பாலும், அழியும் இயல்பாலும் உயிர் மறைந்துவிடாமல், மனம், அறிவு, ஆன்மா என்று தொடர் வளர்ச்சியைப் பெறுகிறது. இவ்வாறு உயிரின் பரிணாமம் ஒவ்வொரு முறையும் முழு நிறைவை அடைய முந்துகிறது.

- ''இரு உயிர்களின் இணைவினால் பல உயிர்களைப் பெற்றெடுத்து வளர்ப்பதே திருமணத்தின் நோக்கம்'' என்று நாம் கருதினால், நாம் நம்முடைய வாழ்க்கையில் பல சவால்களைச் சந்திக்க நேரிடும். திருமணத்தின் உண்மையான நோக்கம் இதனினும் உயர்ந்ததாகும். இரு முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும் முரட்டுத்தனமான மனப்பாங்கையும், உணர்ச்சி களையும் கொண்டிருந்தாலும் தன்மனப் போக்கினையும், ஒருவரையொருவர் விரும்பாத தன்மைகளையும் கொண்டிருந்தாலும் நாம் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்கிறோம். இதனால் மணவிலக்கு என்பது மனிதர்களைக் கீழ்மைப்படுத்துவதாகும்.



## காங்கிரஸ் நூற்றாண்டு விழா

முதல் இந்திய சுதந்திரப் போர் *1857*ஆம் ஆண்டு தொடங்கியது. அதன் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில், *1957*ஆம் ஆண்டு விழா ஒன்று நடத்த ஏற்பாடாயிற்று. மேலும், இந்திய சுதந்திரத்தின் *10*ஆம் ஆண்டு விழாவும் நடைபெற்றது. அவ்விழாக் குழுவின் தலைவராக பொறுப்பேற்றவர் குடியரசுத் துணைத் தலைவராக பதவி வகித்த நம் ராதாகிருஷ்ணனே. ''நெருப்பானது சிறு பொறியாகக் கிளம்பி, பெரு நெருப்பாக ஓங்கி உயர்வதுபோல விடுதலைப் போர் வளர்ந்தது. இந்திய மக்களின் சுதந்திர வேட்கையைப் புரிந்து கொண்ட பிரிட்டிஷார், அம்மக்களின் நாட்டுப்பற்றையும், வீரத்தையும், தியாகத்தையும் மெல்ல மெல்ல உணர்ந்து கொண்டனர். அம்மக்களின் தொடர்ந்த போராட்டம் பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டே வெளியேற்றியது'' என்று அவ்விழாவில் உரையாற்றினார் ராதாகிருஷ்ணன்.

இந்திய தேசியக் காங்கிரஸை உருவாக்கிய ஏ.ஓ. ஹியூமைப் பற்றியும், காந்திஜியைப் பற்றியும் பாராட்டிக் கூறிய ராதாகிருஷ்ணன், இந்திய விடுதலைக்காக உயிர்நீத்த தியாகிகளின் கனவையும் தியாகத்தையும் நாம் என்றும் நினைவுகூர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவானது, ராதாகிருஷ்ணனின் தலைமையில் இந்தியா முழுவதும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்திய மக்களின் நிறம் பற்றி பேசிய ஆங்கிலேயருக்கு டாக்டர் ராதாகிருஷ்ணனின் பதில்:

இந்தியநாடுபற்றியும், இந்தியக்கலாச்சாரம்பற்றியும் வெளிநாட்டவர் குறைகூறினால், அதற்கு தனக்கே உரிய முறையில் விவேகமாகவும், விகடமாகவும் பதிலளித்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன். ஒருமுறை ராதாகிருஷ்ணன் இங்கிலாந்து சென்றிருந்தபோது, ஆங்கிலேயர் ஒருவர், இந்திய மக்களின் நிறம் பற்றி இழிவாகப் பேசினார். அதாவது, அவர் ராதாகிருஷ்ணனிடம் ''கடவுள் எங்கள் மீது அன்பும், கருணையும் உள்ளவர்; அதனால் எங்களை வெள்ளையாகப் படைத்திருக்கிறார்!'' என்று கூறினார். உடனே ராதாகிருஷ்ணன் அவர்கள், அவருக்குப் பதிலளித்தார் :-

''ஒருநாள் கடவுள் ரொட்டி செய்யத் தொடங்கினார். ரொட்டியை வேக வைத்து வெளியே எடுத்தார். அது அரைவேக்காட்டில் இருந்தது. அதிலிருந்து அவர் வெள்ளை மனிதர்களைப் படைத்தார். அடுத்து ரொட்டி நன்றாக வேக வேண்டும் என்று கடவுள் நினைத்து, அதிக நேரம் அதை

## தத்துவ அறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன்

**த**த்துவவியலாளராகவும், உலகத்துத் தத்துவங்கள் மற்றும் சமயங்களின் வரலாற்றாசிரியராகவும் விளங்கிய ராதாகிருஷ்ணனுக்கு உலக ஒருமைப்பாட்டை நோக்கிய தம்முடைய இலட்சியங்களைச் செயல்முறைப்படுத்துவதற்கு அரசின் உயர்நிலையில் இருந்தது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

''இந்துஸ்தானத்தின் இதயம்'', ''இந்தியாவும் சீனாவும்'', ''இதுவா அமைதி'', ''கிழக்கும் மேற்கும்'', ''சில பட்டறிவுகள்'' ஆகிய நூல்களில் காணப்படும் பல கருத்துக்கள் உலக அரசாட்சியையும், உலக ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகின்றன. உலக ஒற்றுமை பற்றிப் பேசுவதற்கு முன்னால் தங்களுடைய சொந்த நாட்டின் ஒருமைப்பாட்டை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

''இந்துஸ்தானத்தின் இதயம்'' என்ற நூல் இந்துத்துவம், இஸ்லாம், கிறிஸ்தவம், புத்த சமயம் ஆகியவற்றின் இயல்பை நமக்குத் தெளிவாக்குகிறது. வாழ்க்கையை அறத்தின் பாற்படுத்தும் தருமநெறியை அடிப்படையாகக் கொண்டே இந்துத்துவம் வளர்ந்தது என்பதை அறிதல் வேண்டும்.

வேக வைத்துவிட்டார். அது தீய்ந்து போய்விட்டது. அதிலிருந்து நீக்ரோக்களைப் படைத்தார்.

இப்போது கடவுளுக்கு எவ்வளவு நேரம் வேகவைக்க வேண்டும் என்று தெரிந்துவிட்டது. அவர் அடுத்த ரொட்டியை மிகச் சரியான முறையில் வேகவைத்து எடுத்தார். அதிலிருந்து இந்தியர்களைப் படைத்தார். அதனால்தான் நாங்கள் சரியான வேக வைத்த ரொட்டியின் நிறத்தில் இருக்கிறோம்'' - என்று பதிலளித்தார் ராதாகிருஷ்ணன். இந்தியர்களின் தோலின் நிறம் பற்றி கேலி பேசிய ஆங்கிலேயர் வாயடைத்து நின்றார்.

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் சாமர்த்தியமான பதில்

ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்த ராதா கிருஷ்ணன், அந்நாட்டின் அப்போதைய பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலுடன் விருந்து ஒன்றில் கலந்துகொண்டார். ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்திய முறைப்படி கைகளினால் உணவு உண்ணும் பழக்கம் கொண்டவர். மேலை நாட்டினரோ கரண்டி மற்றும் முள்கரண்டியால் உண்ணும் பழக்கம் உள்ளவர்கள். ராதாகிருஷ்ணன் கைகளினால் உணவை உண்ணுவதைப் பார்த்த வின்ஸ்டன் சர்ச்சில் ''மிஸ்டர் ராதாகிருஷ்ணன்... கரண்டியால் உணவு உண்ணக் கற்றுக் கொள்ளுங்கள்; அதுதான் சுத்தமானது'' என்று கூறினார்.

உடனே ராதாகிருஷ்ணன், ''இல்லை, எப்போதும் நம் கைகளால் உணவு உண்பது சுத்தமானது. ஏனென்றால், நம் கைகளை வேறு யாரும் பயன்படுத்த முடியாது'' என்று பதிலளித்தார். எந்தவொரு சூழ்நிலையிலும் சமயோசிதமாகவும், சாமர்த்தியமாகவும் பதிலளிக்கும் திறமை வாய்ந்தவர் ராதாகிருஷ்ணன் என்பதை இவ்விரு சம்பவங்களின் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

## டாக்டர் ராதாகிருஷ்ணனின் நினைவாற்றல்

டாக்டர் ராதாகிருஷ்ணனின் அறிவு எல்லையற்றது. அவரது நினைவாற்றலும் அத்தகையதே. 1937 மற்றும் 1938ஆம் ஆண்டிற்கான கல்வி மாநாடு லக்னோ நகரில் நடைபெற்றது. டாக்டர் ராதாகிருஷ்ணனின் தலைமையில் நடைபெற்ற அம்மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு. அம்மாநாட்டில் ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரையாற்றினார். அவரது உரையின் நகல் அரங்கத்தில் இருந்தவர்களுக்குத் தரப்பட்டது. ஆனால் ராதாகிருஷ்ணனின் கையிலோ எந்த குறிப்பும் இல்லை. அவர் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். அரங்கத்தில் இருந்த அனைவருமே அவரது உரையைக் கேட்டு பெரும் வியப்புக் கொண்டனர். காரணம், ராதாகிருஷ்ணன் பேசிய வாக்கியங்களும், அவர்களது கையிலிருந்த உரையின் வாக்கியங்களும் சிறிதும் வேறுபடாமல் இருந்தது. ராதாகிருஷ்ணனின் நினைவாற்றலுக்கு இது ஓர் உதாரணமாகும்.

கல்லூரியில் மாணவர்களுக்கு வகுப்பு நடத்தும்போதும் எந்தக் குறிப்பும் இல்லாமல் பாடம் நடத்தினார் அவர். மிகவும் சிக்கலான கருத்துக்களையும், கல்வியறிவற்றவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாக விளக்கிச் சொல்லும் ஆற்றல் ராதாகிருஷ்ணனுக்கு உண்டு. ''புரிந்துகொள்ள முடியாத மிகவும் கடுமையான கருத்துக்களையும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களைப் போல, எல்லோரும் விரும்பி கேட்கும் வகையில் விளக்கிச் சொல்வார் அவர்'' என்று டாக்டர் ராதாகிருஷ்ணனை பலவேறு அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

## டாக்டர் ராதாகிருஷ்ணன் மாணவர்களுக்கு செய்த உதவிகள்

டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரு பேராசிரியராக மட்டுமின்றி, தனது மாணவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அக்கறை காட்டியவர் என்றால் அது மிகையல்ல. அவர் பேராசிரியராகப் பணியாற்றிவந்த காலத்தில் பல்வேறு மாணவர்களுக்கு பல்வகை உதவிகள் புரிந்துள்ளார். ராதாகிருஷ்ணன் குடியரசுத் துணைத் தலைவராக இருந்தபோது கல்கத்தா பல்கலைக்கழக மாணவர் ஒருவரிடமிருந்து அவருக்குக் கடிதம் ஒன்று வந்தது. அக்கடிதத்தில், ''தாங்கள் எழுதிய ''இந்தியத் தத்துவம்'' நூலை பணம் கொடுத்து வாங்குவதற்கு வசதியில்லை. எனவே அப்புத்தகத்தை எனக்கு அனுப்பித் தாருங்கள்; நான் அதைப் படித்துவிட்டு திருப்பி அனுப்பிவிடுகிறேன்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ராதாகிருஷ்ணன் அம்மாணவனின் கடிதத்திற்கு மதிப்பளித்து, அப்புத்தகத்தை அனுப்பியதோடு, அப்புத்தகத்தை அம்மாணவனே வைத்துக்கொள்ளும்படி கடிதம் எழுதினார். ●

# தேசத்தின் குரு

## டாக்டர் ராதாகிருஷ்ணன்

டாக்டர் ராதாகிருஷ்ணன் எளிய குடும்பத்தில் பிறந்து, உதவிப் பேராசிரியர், பேராசிரியர், மாநிலங்களவை உறுப்பினர், அரசாங்க தூதர், குடியரசுத் துணைத் தலைவர் உள்ளிட்ட பதவிகளைப் பெற்று, இறுதியாக இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவராகவும் உயர்ந்தார். இருப்பினும் அவர் எப்போதுமே தன்னை ஒரு பேராசிரியர் என்று அழைக்கவே விரும்பினார். தான் கூறியது போலவே ஒரு சிறந்த பேராசிரியராகவும் அவர் விளங்கினார் என்றால் அது எள்ளளவும் மிகையல்ல. அவர் கல்வியைப் பற்றிக் கூறும்போது, ''கல்வி என்பது வாழ்வின் மதிப்பானவற்றை ஒப்பிட்டு நோக்குவதும், சிறந்ததை அடைவதற்கு தேவையான அறிவைப் பெறுவதுமாகும்!'' - என்று கூறியுள்ளார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் ''ஆசிரியர்களின் கடமைகள் என்னென்ன?'' என்பது பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளார். ''ஆசிரியர் என்பவர், மாணவர்க்கு வெறும் தகவல்களைச் சொல்லிவிட்டுச் செல்பவராக இருக்கக்கூடாது. ஒரு நல்ல ஆசிரியர், மாணவர்களிடம் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுபவராக விளங்க வேண்டும்!'' என்று அவர் கூறியுள்ளார். ''ஆசிரியரானவர் இளம் உள்ளங்களை நல்ல முறையில் வடிவமைக்கும் சிற்பியாக விளங்குகிறார். வகுப்பறையில் நன்கு செம்மைப் படுத்தப்பட்ட இளம் உள்ளங்கள், அவர்கள் வாழும் நாட்டின் தலையெழுத்தையே மாற்றும் ஆற்றல் பெறுகிறார்கள்!'' எனக் கூறிவந்த ராதாகிருஷ்ணன், அதன்படியே வகுப்பறையில் பாடம் நடத்தினார்.

டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் பாடம் கற்ற மாணவர்கள், கல்வி கற்கும் ஆர்வத்தைப் பெற்றார்கள்; துணிவைப் பெற்றார்கள்; கம்பீரத்தைப் பெற்றார்கள்; நினைவாற்றலைப் பெற்றார்கள் என்றால் அது எள்ளளவும் மிகையில்லை. அதனால்தான் ''சர்தார் கே.எம்.பணிக்கர்'' என்னும் பெருந்தகையாளர், ''ராதாகிருஷ்ணன் வெறும் ஆசிரியர் அல்ல; அவர் இந்த தேசத்தின் குரு!'' என்று பாராட்டியுள்ளார். கல்விச் செல்வமே ஒரு நாட்டின் மிகச்சிறந்த செல்வம் என்று அவர் எப்போதுமே கருதிவந்தார். அதனால்தான் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், பல்வேறு அறிஞர்களுடன் இணைந்து ''யுனெஸ்கோ'' (United Nationals Educational, Scientific and Cultural Organisation) என்னும் அமைப்பை உருவாக்கினார்.

1946ஆம் ஆண்டு நிறுவப்பட்ட யுனெஸ்கோ அமைப்பின் முதல் மாநாடு பாரிஸ் நகரில் நடைபெற்றது. ராதாகிருஷ்ணன் அம்மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். பல ஆண்டுகள் யுனெஸ்கோவின் உறுப்பினராகப் பொறுப்பு வகித்த அவர், பல முறை அதன் தலைவர் பொறுப்பையும் ஏற்று திறம்படப் பணியாற்றினார். சுதந்திர இந்தியாவில்

### டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்துரைகள்



எல்லாம் வல்ல ஆண்டவனை மனிதன் உணரும்போது, அவன் முழுமையாக எய்துகின்றான்; வாழ்க்கையின் உண்மையை உணர்கின்றான்; வாழ்க்கையைத் தன் கைக்குள் கட்டுப்படுத்துகின்றான். உணர்ந்து பார்க்க முடியாத பிரபஞ்சம் முழுவதும் பரவி நிற்கும் அனுபவத்தை உணர்கிறான். குறுகிய நோக்கத்திற்காக வளர்ந்து அவனைச் சிறைப்படுத்திய அவனது ஆற்றல் எல்லையில்லாப் பெருவெளியில் பரவிப்பாய்ந்து பெருநோக்கை நாடி ஓடுகிறது. தன்னைத்தான் உணர்ந்து நிற்கும் மனிதனாக அவன் பெருமையுறுகிறான். அவனது எண்ணங்கள் செயல்கள் எல்லாமே இறைவனை மையமிட்டதாகவே அமைகின்றன. தூய நெறிப்பட்ட வாழ்க்கையை தனக்கு அழகும், இன்பமும், பேறும் அளிக்கவல்லது என்றும், இதற்கு மாறான வாழ்க்கைத் தனக்கு ஏமாற்றத்தையே தரக்கூடியது என்றும் உணர்ந்து கொள்கின்றேன்.


**சேலம் கே.சி. மணிவண்ணன்**

மாணவர்களுக்கு எம்மாதிரி கல்வி தேவை என்பது பற்றி ராதாகிருஷ்ணன் சிந்தித்தார். அதுபற்றிய பல்வேறு கருத்துக்களையும் எடுத்துரைத்தார். ‘‘தத்துவம் என்பது சுதந்திரமான கல்வியாகும்! இவ்வுலக வாழ்க்கையிலிருந்து ஒரு மனிதனை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் தத்துவத்திற்கு உண்டு!’’ என்று அவர் மாணவர்களுக்கு அடிக்கடி எடுத்துரைத்தார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், மாணவர்களுக்கு நீதியையும் ஆன்மிகத்தையும் கற்பிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். வேலைக்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும் ஒரு மாணவன் கல்வி கற்பது, சமுதாயத்தில் சுயநலத்தையும், அநீதியையும் உருவாக்கும் என்று அவர் நம்பினார். ஆன்மிகக் கல்வி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் என்றும், நாகரிகமான மனிதர்களை உருவாக்கும் என்றும் அவர் கருதினார். எனவே பல்கலைக்கழகங்கள் அம்மாதிரி கல்வியைப் போதிக்க வேண்டும் என்று தனது கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். ஒவ்வொரு தனிமனிதனும் தெய்வத்தின் அங்கம் என்றே ராதாகிருஷ்ணன் கூறிவந்தார். ‘‘ஓம் சாந்தி ஓம் சாந்தி’’ என்னும் மந்திரத்தை அடிக்கடி உச்சரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.


*1954*ஆம் ஆண்டு யுனெஸ்கோ பொது மாநாட்டில் உரையாற்றிய ராதாகிருஷ்ணன் தனது உரையை இம்மந்திரத்தை உச்சரித்தே நிறைவு செய்தார். சாந்தி என்பது அமைதி என்று அறிவோம். அமைதியான உலக வாழ்வை அவர் விரும்பினார் என்பதற்கு இது ஒரு சான்றாகும். மிகவும் சிக்கலான கருத்துக்களையும், கல்வியறிவற்றவர்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாக விளக்கிச் சொல்லும் ஆற்றல் ராதாகிருஷ்ணனுக்கு உண்டு. மேலும் அவரது நகைச்சுவை உணர்வும் விகடமும் மாணவர்களை அவர் பக்கம் இழுத்துவந்தது. அதனால்தான் ஒரு பேராசிரியராக அவர் பணியாற்றிய காலத்தில், அவரது வகுப்புகளை மாண வர்கள் புறக்கணிக்கவே எண்ணியதில்லை.

டாக்டர் ராதாகிருஷ்ணன் வெளிநாடுகளில் மாணவர்களிடையே நிகழ்த்திய சொற்பொழிவுகள் மேலைநாட்டுப் பத்திரிகைகளால் பெரிதும் பாராட்டப் பெற்றன. ‘‘பேராசிரியர் ராதாகிருஷ்ணனின் அறிவு ஆழமானது; பரந்தது. இந்தியத் தத்துவ ஞானத்தையும், மேனாட்டுத் தத்துவஞானத்தையும் கற்றறிந்த பெரும் பண்டிதர் அவர். அவருடைய கருத்துக்கள் தெளிவும் செறிவும் நிறைந்தவை. இந்து சமய ஞானத்திலே அவர் மிகவும் வல்லவர். இந்து மதத்தைப் பற்றி ஐரோப்பியர்களான எங்களுக்கு அவரைவிடச் சிறப்பாக யாராலும்



**து**ன்பமும் தேவையும் சூழ்ந்த இந்த நேரத்தில், நமக்கு ஆற்றலும் ஆறுதலும் தருவனவாக சமய அனுபவங்கள் அமைகின்றன. அன்பும், நீதியும் உலகின் உள்ளத்தில் இன்னமும் உறைகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சமய அனுபவங்கள் தருகின்ற இந்த அன்பும் நீதியுமே மனிதனை நிறைவுபெற்ற மனிதனாக்குகின்றன. நம்முடைய செயல்களில் நாம் தோற்றுப்போய் விடாதபடி நம்மைக் கட்டிக்காக்கின்றன. கரையை மோதும் அலைகள் உடைந்து சிதறிப்போனாலும்கூட கடல் உடையாமல், சிதறாமல் முழுமையாக நின்று அனைத்தையும் வெற்றி கொள்வது போன்றது இது.





விளக்கம் கூற முடியாது'' என்று பத்திரிகைகள் எழுதின. கேம்பிரிட்ஜுக்கு நிகரான ஒரு பல்கலைக்கழகத்தை இந்தியாவில் நிறுவ வேண்டும் என்ற விருப்பம் ராதாகிருஷ்ணனுக்கு இருந்தது. நண்பர்கள் பலரிடம் அதை தெரிவித்தார். சமஸ்தான மன்னர்களும், தொழிலதிபர்களும் ஒத்துழைத்தால் அத்தகைய ஒரு பல்கலைக்கழகத்தைக் காணமுடியும் என்று அவர் நம்பினார். அவரது எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை. தன்னை எப்போதுமே பேராசிரியர் என்றே அறிவித்துக்கொண்ட டாக்டர் ராதாகிருஷ்ணனின் சிந்தனைகள் பிறர் கற்பனையிலும் எட்ட முடியாதவையாக விளங்கின. உலகின் எண்ணற்ற சிந்தனையாளர்களையும் வியக்க வைத்தன என்றால் அதுமிகையல்ல. உலகின் பல்வேறு கருத்துக்கள் பற்றிய தனது சிந்தனையை அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

## கடவுள்

கடவுள் என்பது முடிவில்லாத கடலின் அமைதி அல்ல; ஒவ்வொரு மனிதனும் கடவுளிடம் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். ஆன்மிகவாதிகள் அதை முதலில் புரிந்து கொள்கிறார்கள். கடவுளோடு கலந்துவிடும் மனிதன் அழிவில்லாத நிலையில் அங்கே தொடர்ந்து வாழ்கிறான் என்பது கடவுள் பற்றி ராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்தாகும்.

கடவுள் என்பவர் இந்த உலகத்தைப் படைத்தவர் என்று பலரும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அது முடிந்துவிட்ட கருத்தல்ல; கடவுள் தொடர்ந்து படைத்துக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மை. பேருண்மையின் அடையாளமே கடவுள். டாக்டர் ராதாகிருஷ்ணனின் கடவுள் பற்றிய கருத்துக்கள் ஒரு மதத்தினரை மட்டுமின்றி, உலகின் அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்ளும்படி அமைந்திருந்தன.

## விஞ்ஞானம் என்பது என்ன?

விஞ்ஞானமும் அதன் கண்டுபிடிப்புகளும் நமது உலக வாழ்க்கையை மேம்படுத்தியிருக்கலாம். ஆனால் ஒழுக்கமும், சுயகட்டுப்பாடுமே நம்மை உயர்த்தும் உண்மையான வழிகளாகும். இவ்வழியை நாம் ஆன்மிகத்தின் மூலமே அடைய முடியும் என்பது ராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்தாகும்.

''விஞ்ஞானத்தின் ரீதியாகவும், அவற்றின் தொழில்நுட்பத்தாலும் நாம் மிக உயர்ந்த இடத்தை அடைந்துவிட்டதாகவும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் ஆன் மிகத்தின் வழியே அடைந்த உயரத்தைவிட நாம் அதிக உயரத்தை அடைந்துவிடவில்லை. நாம் இயந்திரத்தனமாக மாறிவிட்டோம். சமுதாயத்தின் அணுத்துகளாக மாறிவிட்டோம் என்பதே உண்மை!'' என்று கூறிய ராதாகிருஷ்ணன் விஞ் ஞான வளர்ச்சி என்பது ஆன்மிக வளர்ச்சியோடு இணைந்து பயணிக்க வேண்டிய ஒன்று என்பதை வலியுறுத்தி வந்தார்.

## பகவத்கீதை பற்றி...

இந்துக்களின் புனித நூலாக விளங்கும் பகவத்கீதை மீது ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மிகுந்த ஆர்வமும், ஈடுபாடும் இருந்தது. அவர் அடிக்கடி கீதையின் வரிகளை மேற்கோள் காட்டி பேசிவந்தார். ''கடவுளைப் பற்றி ஒருவர் அறிய விரும்பும்போது அவரது வாழ்க்கை மதிப்பிற்குரியதாக மாறுகிறது!'' என்பது டாக்டர் ராதாகிருஷ்ணனது கருத்தாகும். பொதுவாக மத புராணங்கள் மாறிவரும் காலச்சூழலுக்குப் பொருந்துவதாக இருப்பதில்லை. ஆனால் பகவத்கீதை எல்லா காலத்துக்கும் பொருந்துவது போன்ற கருத்துக்களை உள்ளடக்கியது என்று அவர் கருதினார். ''சகமனிதருக்கும் மதிப்பளிக்கும் சமூகம் பல மதங்களை உள்ளடக்கியது என்றாலும், அது மதச்சார்பற்ற சமூகமே ஆகும்; கீதையைப் பொறுத்தவரை மதச்சார்பற்ற சமூகத்தைப் போதிக்கும் நூலாக விளங்குகிறது'' என்று அவர் கூறிவந்தார். அமெரிக்கக் கல்லூரித் தலைவர் ஒருவர் ராதாகிருஷ்ணனைப் பற்றிக் கூறும்போது, ''உலகப் புகழ்பெற்ற தத்துவஞானி, ஆசிரியர், நிர்வாகி, மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் பிரபலமான குடிமகன், நாடுகளுக்கிடையில் அமைதி நிலவப் பாடுபடுபவர், பண்பாட்டுக் கலவைக்காக பிரச்சாரம் செய்பவர், கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவின் கற்பனையையும் கடந்தவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்'' என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

தத்துவம் என்பது ஆன்மிகம் சார்ந்தது என்பதே பலரது கருத்தாகும். ஆனால் தத்துவம் என்பது ஆன்மிகம் சார்ந்தது மட்டுமல்ல; அது அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல சமூக அமைப்புகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது என்பதை உலகறியச் செய்தவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆவார். ●

*With Best Compliments From*

## V.MANOHAR

**HP: 93815 55363 / 91765 55363**

**Estd. 1989**

# U C F S LOJISTICS

**Specialist in: Air/Train Door to Door Operators**

**"PKV Illam", No.3/2, Lafond Street, Chintadripet, Chennai 600 002.**
**Tel: 2845 7770, 6571 3525, 6513 0424 Telefax: 2845 6114**
**Email: ucfs@vsnl.com/manoharvenugopal.mv@gmail.com/ucfsmail@gmail.com**

**Branches**

New Delhi, Mumbai, Kolkata, Bangalore, Pune, Nagpur, Vadadora,
Jamshedpur, Pithampur, Nashik, Lgatpuri, Ahmedabad

**EC Member** : The Tamil Chamber of Commerce
**Life Member** : The Andhra Chamber of Commerce
Hindustan Chamber of Commerce
The TNCA Club
The SVS Club
**Founder & President** : P.K.Venugopal Educational Trust

எதிரொலி விசுவநாதன்



## மகாகவியின் மகாகவிதை புதிய தொடரின் அறிமுகம் 1

**க**விதையாகவே வாழ்பவன்தான் கவிஞன். அவ்வகையில் மகாகவி பாரதியின் வாழ்வே ஒரு மகாகவிதையாகும். அவருடைய கவிதா சக்தி பற்றி அவருடைய கவிதையின் அழகு-இனிமை-எளிமை-உணர்ச்சி-கருத்து-கற்பனை-உவமை-நயம் பற்றி, அவருடைய உரைநடை பற்றி, அவருடைய வாழ்வு நிகழ்ச்சிகள் பற்றி எத்தனையோ பேசலாம்; எழுதலாம்; படமாகச் சித்தரிக்கலாம்.

அப்படிப் பேசியும் எழுதியும் பாரதி எனும் அதிமேதையை உலகிற்குத் தமிழர்கள் அறிமுகப்படுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும்.

'மகாகவியின் மகாகவிதை' என்னும் தலைப்பில் அத்தகைய மகாகவி பாரதியின் மணம் வீசும் மலர்களைத் தொடுத்து அன்புப் பாலம் வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

**வா**ல்மீகி இராமாயணத்தில் ஒரு காட்சி. இராவணனைப் போரில் வென்று இலங்காபுரியைப் பரிசாக விபீடணனுக்கு இராமன் வழங்குகிறான்.

அப்போது விபீடணன் 'இலங்கையை இராமனே ஆள வேண்டும்' என்று கோருகிறான்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் என்ன? என்று இலக்குவனுக்குச் சபலம் தட்டுகிறது.

அப்போது இராமன் தனது தம்பியைப் பார்த்துக் கூறுகிறான்:

''இலட்சுமணா! பொன்மயமான இலங்கையில் என் மனம் லயிக்கவில்லை.'' ஏனென்றால்,

''ஜனனி ஜன்ம பூமிஸ்ச

ஸ்வர்காத் அபி கரீயஸி'' - என்கிறான்.

இதனைப் பாரதியார் -


''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றவ வானினும் நனி சிறந்தனவே''

என மொழியாக்கம் செய்துள்ளார்.

இவற்றுள் எது மூலம்? எது மொழிபெயர்ப்பு? என்று பிரித்தறிய முடியாதபடி இந்த மொழியாக்கம் மிக அருமையாக அமைந்துள்ளது.

புதுவையில் பாரதியார் நடத்திய 'சூரியோதயம்' மாதப் பத்திரிகையின் முகப்பு வாசகமாக இந்தக் கவிதை வரிகள் முதலில் வெளிவந்தன. சூரியோதயம் பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பரலி.சு.நெல்லையப்பர் இருந்தார். அவர் சொன்ன செய்தி இது.



# வாழ்த்துகள்

STEERING QUALITY EDUCATION
AMET
UNIVERSITY

# AMET பல்கலைக்கழகம்

**இந்தியாவின் சிறந்த கடல்சார் பல்கலைக்கழகம்**

**கானாத்தூர்**
**சென்னை - 603112**

**முனைவர் ஜே.இராமச்சந்திரன்**
**நிர்வாக அறங்காவலர்**

# AMET பல்கலைக்கழகம்



# எறும்பின் தன்னம்பிக்கை!

**த**லைப்பைப் படித்ததும் இது சிறுவர்களுக்கான கதை என நினைத்து விடாதீர்கள். இது உங்களுக்கானது. முழுவதையும் படியுங்கள்.

இன்றைய மனிதர்களில் அதிகம் பேர் ஏதாவது ஒரு கவலையுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறு தடையையும் பெரிதாக எண்ணி கவலைப்படுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் மேல் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததுதான்.

நமக்கு நண்பனும் நாமே; பகைவனும் நாமே என்று சொல்வதுண்டு... அதாவது, எவன் ஒருவன் தன் பலவீனங்களை முறியடித்து வெற்றி பெறுகிறானோ, அவன் தனக்குத்தானே நண்பனாவான். யார் ஒருவன் தன் பலவீனங்களை வெற்றி பெற முடியாமல் தவிக்கிறானோ அவன் அவனுக்கு எதிரியாவான் என்று அர்த்தம்.

கவலைப்படுபவர்கள் இந்தியாவில் மட்டுமில்லை. உலகம் முழுவதுமே இருக்கிறார்கள். சமீபத்தில் கவலை குறித்து அமெரிக்காவில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அதன் முடிவில் 40 சதவீதக் கவலைகள் எந்த அடிப்படைக் காரணமும் இல்லாத தேவையற்றவை. 30 சதவீதக் கவலைகள் கடந்த காலம் பற்றியவை. 12 சதவீதக் கவலைகள் பிறர் பற்றியது. 10 சதவீதக் கவலைகள் நம் நோய் நொடிகள் பற்றியவை. அது கூட கவலைப்படும் அளவுக்கு இல்லாமலும் இருக்கலாம். மீதம் உள்ள 8 சதவீதம் மட்டுமே உண்மையான கவலைகள் எனக் கண்டறியப்பட்டது.

பெரும்பாலான சம்பவங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு தடையும் ஒவ்வொரு வெற்றியை மறைத்து வைத்திருக்கிறது என்பது புரியும். அது போன்றுதான் தோல்வியும். தோல்வி என்பது நம்மை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய அறிவிப்பு என்று சொல்லலாம். செல்வத்தை இழப்பது ஒன்றையும் இழப்பதாகாது. உடல் நலத்தை இழப்பது சிறிதளவு இழந்ததாகும். ஆனால் நம்பிக்கை இழப்பது எல்லாவற்றையும் இழந்ததற்குச் சமம் என்று சொல்வார்கள்.

தடைகளை வெல்வது எப்படி? இதை எறும்புகள் நமக்குக் கற்றுத் தருகின்றன. எறும்புகளை ஆராயும் உயிரியல் நிபுணர் ஒருவர் எறும்புகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். ஓர் எறும்பு தன் வாயில் நீளமான உணவுப் பொருளைச் சுமந்து கொண்டு சென்றது. தரை வழியே சென்று கொண்டிருந்த அந்த எறும்பு ஒரு வெடிப்பைப் பார்த்துவிட்டு திடீரென்று நின்றுவிட்டது. மேலே செல்ல முடியாமல் தவித்தது. சிறிது நேரம் கழித்து, தான் சுமந்து வந்த இரையை வெடிப்பின் மேல் வைத்து அதன் மீது ஊர்ந்து சென்று வெடிப்பைக் கடந்தது. பின்பு அந்த இரையைக் கவ்விக் கொண்டு சென்றது. எறும்பின் அறிவு வியப்பை அளிப்பதாக உள்ளது என எழுதியிருக்கிறார் அந்த ஆராய்ச்சியாளர்.

துன்பம் ஏற்பட்டால், அத்துன்பத்தையே பாலமாக வைத்து முன்னேற வேண்டும் என்பதை நாம் எறும்பிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு மிகச் சிறிய உயிரியான எறும்பின் தன்னம்பிக்கை நமக்கு இருந்தால் கூடப் போதும் எந்தத் தடையையும் வெல்ல முடியும். கவலையும் காணாமல் போய்விடும். ●

Owned and Published by P. kalyanasundaram from 1, 4th Main Road, Kasturibha Nagar, Adyar, Chennai - 20. Printed by M. Sadique Batcha at Graphic Park, 78, Big Street, Triplicane, Chennai-5. Editor: P. Kalyanasundaram.